பக்கங்கள்: 24
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 11 ஞாயிற்றுக்கிழமை 25.03.2018 கதிர் 140

## சிறை சென்றார் ஞானசார தேரர்

கொழும்பு, மார்ச் 25
கண்டி, தெல்தெனிய, திகண உள்ளிட்ட பகுதிகளில் இனவாத வன்முறைத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி எனக் குற்றம் சாட்டப் பட்டுக் கைதான அமித் வீரசிங்கவைப் பார்வையிடுவதற்காகப் பொதுபல சேனா இயக்கத்தின் செயலாளர் பக்கம் 22

# ஆட்சி அமைப்பதற்கு சகலரும் உதவுங்கள்!

## சக கட்சிகளிடம் கூட்டமைப்பு கோரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 25
"வடக்கு மாகாணத்தில் சுமுகமான உள்ளூராட்சி நிர்வாகத்தை நடத்த அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்கவேண்டும். தேர்தலில் அந்தந்தக் கட்சி வெற்றி பெற்ற இடங்களில் அவரவர்களையே ஆட்சியமைக்க அனுமதிக்கவேண்டும். அதற்கு ஏனையோரும் ஆதரவளிக்க வேண்டும்."
-இவ்வாறு நேற்றுப் பகிரங்கக் கோரிக்கை விடுத்தார் வடக்கு மாகாண சபை அவைத் தலைவரும் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலருமான சி.வீ.கே.சிவஞானம். பக்கம் 22

## ஹெரோயினுடன் வடக்கைச் சேர்ந்த நான்கு பேர் கைது!

கொழும்பு, மார்ச் 25
பொல்காவலைப் பிரதேசத்தில் 50 லட்சம் ரூபா பெறுமதியான 500 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் வடபகுதியைச் சேர்ந்த நான்கு பேரைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் விடுதலைப் புலிகளின் பக்கம் 22

## இளம் குடும்பஸ்தர் விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 25
சாவகச்சேரி, சங்கத்தானைப் பகுதியில் ஏ – 9 வீதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.
வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பொலிஸார் 'ஏ – 9' வீதியால் வந்த காரை வேகம் அளவிடும் கருவி காட்டி மறித்தபோது கார் சடுதியாக நின்றுள்ளது. இதன்காரணமாகக்காரின் பின்னால் வந்தவர் காரை பக்கம் 03

## பொலிஸ் அதிகாரி தாக்குதலில் சாவு!

### சாவகச்சேரியில் பணியாற்றும் அவர் மட்டக்களப்பு சென்றவேளை சம்பவம்

மட்டக்களப்பு, மார்ச் 25
ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மைலம்பாவெளி காமாட்சி அம்மன் கோவிலுக்கு மட்டக்களப்பைச் சேர்ந்த தனது நண்பியுடன் காரில் சென்று திரும்பியவேளை மோட்டார் பக்கம் 22

## உலகப் பயங்கரவாதத்துக்கு எதிராக இலங்கை - பாகிஸ்தான் கைகோப்பு

இஸ்லாமாபாத், மார்ச் 25
உலக நாடுகளுக்கே அச்சுறுத்தலாக விளங்கும் பயங்கரவாதத்துக்கு எதிராக, ஒன்று திரள பாகிஸ்தானும் இலங்கையும் தீர்மானித்துள்ளன.
பாகிஸ்தானுக்கு உத்தியோக பூர்வப் பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாகிஸ்தான் ஜனாதிபதி பக்கம் 03



## நிறைவேற்றதிகாரம் நீக்கப்படக் கூடாது!

### அமைச்சர் மனோ தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25
ஒருபோதும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு ஆதரவு வழங்கப் போவதில்லை எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். பக்கம் 03

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விலை உயர்த்தாது

கொழும்பு, மார்ச் 25
இலங்கைப் பெற்றோலிக் கூட்டுத்தாபனத்தால் விநியோகிக்கப்படும் எரிபொருள்களின் விலைகளில் எந்த அதிகரிப்பும் ஏற்படுத்தப் படவில்லை எனக் கூட் பக்கம் 22

## சுன்னாகம் பொலிஸ் காவல் சித்திரவதை:

## தண்டனைக் கைதிகளான பொலிஸார் பிணை கோரி மேல்நீதிமன்றில் மனு!

யாழ்ப்பாணம், மார்ச் 25
சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலிலிருந்த சந்தேக நபரைச் சித்திரவதை செய்த குற்றத்துக்காக 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையை அனுபவித்துவரும் தண்டனைக் கைதிகளான சிந்திக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸாரும் பிணை கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மேன்முறையீட்டின் போதான பிணை விண்ணப்பம் செய்துள்ளனர்.
இந்த விண்ணப்பம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் அடுத்த வாரம் பக்கம் 22

## ஐ.தே.க. - மு.கா. உறவில் விரிசல்!



கொழும்பு, மார்ச் 25
நாங்கள் வெற்றியீட்டிய உள்ளூராட்சிச் சபைகளில், எங்களைப் புறந்தள்ளி விட்டு, மாற்று அணிகளுடன் ஐ.தே.க. ஆட்சியமைத்தால், அரசியல் ரீதியாக அவர்களுக்குத் தகுந்த பதிலடி கொடுப்போம் என்று, ஸ்ரீ லங்கா பக்கம் 22

## வெளிநாட்டுச் சக்திகளே நல்லிணக்கத்துக்கு தடை!

### மஹிந்த குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 25
இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு, வெளிநாடுகளில் உள்ள குழுக்களும், பல்வேறு பக்கம் 22

## பிரதமர் ரணிலுக்கு நேற்று 69 மைத்திரி, மஹிந்த வாழ்த்து!



கொழும்பு, மார்ச் 25
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் 69ஆவது பிறந்த நாள் நேற்றாகும். அவருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பக்கம் 22

## ஐ.நா. மனித உரிமைகள் சபை அடுத்த அமர்வு ஜூன் 18 இல்!

ஜெனீவா, மார்ச் 25
ஐ.ந. மனித உரிமைகள் சபையின் 38 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை 6 ஆம் திகதி நிறைவடையவுள்ளதாக ஐ.நா. செயலகம் அறிவித்துள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த பெப் பக்கம் 22

## இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் பல்கலைகழகத்தில் கல்விசாரா ஊழியர்களின் போராட்டத்தால் ஒரு பக்கம் குழப்பம் என்றால், இன்னொரு பக்கம் புதிய விவகாரம் ஒன்றும் அங்கு சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. பக்கம் 03

காலைக்கதிர் Kalaikkathir



# ரணிலுக்கு எதிரான பிரேரணை வென்றால் புதிய அரசு மலரும்!

## கூறுகிறார் அமைச்சர் சுசில்



பிரதமர்ரணில்விக்கிரமசிங்கவுக்குஎதிராகநாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியளித்தால் புதிய அரசு அமைக்க வேண்டிவரும். மாறாக அது தோல்வியடைந்தால் அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகளவானஉறுப்பினர்கள்கூட்டு எதிரணியுடன் இணைந்து கொள்வார்கள் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மத்திய வங்கி பிணைமுறி மோசடிக்கு எதிராக ஆரம்பத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாயின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டிருக்காது. மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப்பிரேரணையில்கைச்சாத்திட்டமை, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டிய பிரச்சினையும் அல்ல. ஏனெனில் மத்திய வங்கி பிணைமுறி மோசடியே நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதான இடம் வகிக்கிறது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூர் பிரஜையாவார். அதனைத் தெரிந்துகொண்டு தான் அவரை அந்தப் பதவியில் நியமிக்குமாறு சிபாரிசு செய்தனர். அவ்வாறு நியமித்த பின்னரே பெரும் மோசடி இடம்பெற்றது. அந்த மோசடி இடம்பெற்ற பின்னர் அவரைப் பாதுகாப்பதற்குமுன்னின்றவர்கள் பற்றியும் அனைவருக்கும் தெரியும்.

எனவேஅர்ஜுன்மகேந்திரனைநாட்டுக்குஅழைத்து வந்து மத்திய வங்கியின் ஆளுநர் பதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தவர்கள், நீதிமன்றத்தின்அழைப்புக்குஇணங்க அவரைத் தற்போது நீதிமன்றின் முன் நிறுத்த வேண்டிய கடப்பாடும் உள்ளது. எனினும் அது இன்னும் நடைபெறவில்லை.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதவளிப்பதுதொடர்பில்கட்சியை விடக் குழுக்கள் ரீதியில் தீர்மானம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.ஏனெனில் மக்களேஎமக்கு வாக்களித்துள்ளனர். ஆகவே அம்மக்களின் அபிலாஷைகளுக்கு அமைவாக நாம் நாடாளுமன்றில் நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார். (ஐ)

## பாதுகாப்புச் செயலாளர் கபில ரஷ்யாவுக்கு ரகசியப் பயணம்

பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, ரஷ்யாவுக்கு அதிகாரபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார் என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு மற்றும் ரஷ்யாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் இதனை உறுதி செய்துள்ளன.

எனினும், இந்தப் பயணம் தொடர்பான அதிகாரபூர்வத் தகவல்கள் இலங்கை அரசால் இதுவரை வெளியிடப்படவில்லை.

அதேவேளை, இழுபறிக்குள்ளாகியிருக்கும், ரஷ்யாவிடம் இருந்து ஜிபார்ட் 5.1 ரக போர்க்கப்பல் மற்றும் போர் விமானங்களை வாங்குவது தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய பாதுகாப்பு உடன்பாடு தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தவே, இலங்கைப் பாதுகாப்புச் செயலர் ரஷ்யா சென்றுள்ளார் என அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## பெற்றோல், டீசல் விலைகளை அதிகரித்துள்ளது ஐ.ஓ.சி.

இலங்கையில் இந்தியன் ஒயில் நிறுவனத்தின் (ஐஓசி) எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விநியோகிக்கப்படும் டீசல் மற்றும் பெற்றோலின் விலைகள் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

டீசல் 5 ரூபாவாலும் பெற்றோல் 9 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

வடக்கில் வவுனியா, சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம்கச்சேரியடி ஆகிய இடங்களில்ஐ.ஓ.சி.எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆனந்தசுதாகரனின் விடுதலைக்காக வவுனியாவில் கையெழுத்துப் போர்



வவுனியா, மார்ச் 25

அரசியல் கைதியின் விடுதலைக்காக கையெழுத்துப் போராட்டம் ஒன்று வவுனியா இலுப்பையடியில் இடம்பெற்றது.

கடந்த 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் கடந்த வருடம் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனின் மனைவி ஆனந்தசுதாகர் யோகராணி கடந்த 15 ஆம் திகதி சுகவீனம் காரணமாக உயிரிழந்தார். இவரின் இறுதிக் கிரியைகள் கிளிநொச்சி, மருதநகர் கிராமத்தில் இடம்பெற்றபோது மனைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காகப் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் மூன்று மணி நேரக் கால அவகாசம் வழங்கப்பட்டு அழைத்து வரப்பட்டார். மனைவியின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட பின் மீண்டும் பொலிஸாரால் சிறைச்சாலை வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டார்.

தந்தை சிறைச்சாலை வாகனத்தில் ஏறியபோது அவரது மகளும்தந்தையுடன்சிறைச்சாலை வாகனத்தில் ஏறிய சம்பவம் அனைவரது மனதையும் நெகிழ வைத்துள்ளது.

நீதிமன்றின் ஊடாக 97 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான ஆனந்த சுதாகருக்கு மகனும் மகளும் என இரு பிள்ளைகள் உள்ளனர். தந்தை கடந்த 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட பின்னர்தாயின்அரவணைப்பில்வாழ்ந்த இரண்டு பிள்ளைகளும் தற்போது தந்தையையும் தாயையும் இழந்த நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே ஆனந்தசுதாகரனை நிபந்தனையற்ற பொது மன்னிப்பில் ஜனாதிபதி விடுதலை செய்யக் கோரி வவுனியா மாவட்டத்தில் நேற்றுக் கையெழுத்துப் போராட்டம் வவுனியா மாவட்ட சுயாதீன இளைஞர்களின் தமிழ் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-100)

## தேர்தல் காலங்களில் மட்டும்தான் எம்மைத் தேடும் அரசியல்வாதிகள்

### மன்னார் வேலையற்ற பட்டதாரிகள் விசனம்



தேர்தல் காலங்களில் மட்டும் எங்களைக் கருத்தில் கொள்ளாது ஏனைய காலங்களிலும் எங்களைக் கருத்தில் கொண்டு வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க எமது அரசியல்வாதிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் அழைப்பின் பேரில் நேற்றுச் சனிக்கிழமை காலை மன்னார் புனித செபஸ்தியார் ஆலய வளாகத்தில் தமது பதிவுகளை மேற்கொண்டனர்.

கடந்த வருடம் பட்டம் பெற்ற மற்றும் அதற்கு முன் பட்டம் பெற்று பதிவுகளில் விடுபட்ட பட்டதாரிகளின் பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இடம் பெற்றன. இதன்போது பதிவுகளை மேற்கொண்ட மன்னார் மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகளே இவ்வாறு தெரிவித்தனர்.

பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் எமது பெற்றோர் எங்களைக் கல்வி கற்க வைத்தனர்.நாம் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று இன்று வேலை இல்லாத நிலையில் வேலையற்ற பட்டதாரியாக இருக்கின்றோம். குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் வேலை வாய்ப்புகளுக்குப் பல்வேறு வெற்றிடங்கள் காணப்படுகின்றன என நாம் அறிகின்றோம்.

ஆனால் அந்த வெற்றிடங்களை வேலையற்ற பட்டதாரிகளான எங்கள் மூலம் பூர்த்தி செய்யாது வேறு விதமாகப் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றமையை நாங்கள் அறிகின்றோம். இந்த நடவடிக்கைகளினால் நாங்கள் பெரிதும் துன்ப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே, அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் மட்டும் எங்களை கருத்தில் கொள்ளாது ஏனைய காலங்களிலும் எங்களைக் கருத்தில் கொண்டு வேலையில்லாப் பட்டதாரிகள் வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். – என்றனர். (ஐ)

## மன்னாரிலும் கையெழுத்து



மன்னார், மார்ச் 25

அரசியல் கைதி ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யக் கோரி வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாக பல்வேறு பொது அமைப்புக்களினால் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் மன்னாரில் நேற்றுச் சனிக்கிழமை காலை சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து கையெழுத்துப் போராட்டத்தை மேற்கொண்டன. மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாகவும், மன்னார் பொது வைத்தியசாலை பிரதான வீதியிலும் நேற்றுச் சனிக்கிழமை காலை மன்னாரில் உள்ள சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்தக் கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்தன. (ஐ)

# பொது இடங்களில் குப்பை வீசுவோரை பொதுமக்களால்தான் தடுக்க முடியும்

## மீன்சந்தைத் திறப்பு விழாவில் வடக்கு முதல்வர்



யாழ்ப்பாணம், மார்ச் 25

பொது இடங்களில் கழிவுப் பொருள்களை வீசுபவர்களை அந்தப் பகுதி மக்களே தடுக்க முடியுமே தவிர, எத்தனை சட்டங்கள் கொண்டு வந்தாலும் அதனைத் தடுக்க முடியாது

– இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட கோப்பாயில் புதிதாக அமைக்கப்பட்ட மீன் சந்தைகட்டத்தைவடக்குமாகாண முதலமைச்சர் நேற்றுத் திறந்து வைத்தார். அந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே இந்த விடயத்தை முதலமைச்சர் சுட்டிக் காட்டினார்.

முதலமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கோப்பாய் தொகுதி ஆரம்ப காலத்திலிருந்தேதமிழ்த் தேசியத்துடன் ஒன்றித்ததாக புகழ்பூத்த அரசியல் தலைவர்களைத் தேர்ந்தெடுத்த தொகுதியாக இருந்து வந்துள்ளது.

இந்தப் பிரதேச மக்கள் அமைதியை விரும்பியவர்கள். தமிழ்த் தேசியக் கொள்கைகளுக்கு இணங்கியவர்கள்.

இன்று திறந்துவைக்கப்படும் இந்த மீன் சந்தை கோப்பாய் சந்திக்கு மிக அண்மையாக கைதடி – மானிப்பாய் வீதி மற்றும் பருத்தித்துறை – யாழ்ப்பாணம் வீதிகள் சந்திக்குப் பகுதியில் அமைந்திருக்கின்றது. இதன் மூலம் இந்தப் பாதைகள் ஊடாகப் பயணிப்பவர்கள் தமக்குத் தேவையான கடலுணவுகளைப் பெற்றுச் செல்ல வாய்ப்பாக இந்தச் சந்தை அமையும்.

எத்தனை கட்டடங்களை எவ்வளவு அழகுற அமைத் தாலும் அவற்றைப் பயன்படுத்துபவர்கள் துப்புரவாக – முறையாகப் பயன்படுத்தும் போதுதான் அந்தக் கட்டடம் அழகு குன்றாமல் நீண்ட காலத்துக்கு இருக்கும்.

எனவே இந்தக் கட்டடத்தின் பராமரிப்பு அத்தியாவசியமானது என நினைவுபடுத்த விரும்புகிறேன். வெற்றிலை மென்றுவிட்டுத்துப்புதல், சுண்ணாம்பை சுவர்களில் தடவுதல் போன்றவற்றை நாம் தவிர்க்க முன்வரவேண்டும். புதிய கலாச்சாரம் எம்மிடையே மலரவேண்டும்.

வலி.கிழக்கு பிரதேச சபை, இந்தச் சந்தைக் கழிவுகளை தினமும் உரிய முறையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எத்தனையோ தடவைகள் நாம் அறிவுறுத்துகின்றபோதும் கோப்பாய் – கைதடி வீதியின் கரையோரங்களில் தலைமுடிக் கழிவுகளையும் இறைச்சிக் கழிவுகளையும் மற்றும் திண்மக் கழிவுகளையும் உரப்பைகளிலிட்டு எந்தவித மனக்கிலேசமுமின்றி வீசிவிட்டுச் செல்வதை எமது மக்கள் தவிர்க்கவேண்டும்.

இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களை இப்பகுதி மக்கள் இனங்கண்டு, அவர்களின் தவறான செயற்பாடுகளை அவர்களுக்கு உணர்த்தி, அவர்களை வெளிக்கொணர்ந்தாலன்றி எத்தனை சட்டங்களைக் கொண்டு வந்தும் இதனைக் கட்டுப்படுத்த முடியாது – என்றார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனின் குறித்தொதுக்கப்பட்ட 20 லட்சம் ரூபா நிதியில் இந்த மீன் சந்தைக் கட்டடம் அமைக்கப்பட்டது.

வலி. கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் யுகராஜா ஜெலீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மீன் சந்தையைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார். (ஐ)




டான் ரிவியின் ஏற்பாட்டில் ஏழாவது வருடமாக நடைபெறும் 'புதிய விடியல்' வடக்கின் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் பங்கு பற்றும் அணிகளின் அணி ஒழுங்குத் தெரிவு நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

ஐந்து உதைபந்தாட்ட லீக்குகளைச் சேர்ந்த சுமார் ஐம்பது கழகங்கள் பங்குபற்றும் இச்சுற்றுப் போட்டியில் சுமார் எட்டு லட்சம் ரூபாப் பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. 'காலைக்கதிர்', 'டொப்பாஸ்' நிறுவனங்களின் பிரதான அனுசரணையுடனும், சரவணா அச்சகத்தின் இணை அனுசரணையுடனும் இந்தச் சுற்றுப் போட்டி நடத்தப்படுகின்றது.

# கலைவாணி வி.க. நடத்தும் உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

## இன்று நாவாந்துறை மைதானத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 25

ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் இன்றுபிற்பகல் 3.30 மணி முதல் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

40 வயதுக்கு மேற்பட்டோருக்கான 'சீசைற்' உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் மோதும்.

தொடர்ந்து 7 பேர் அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் நடைபெறும். அதில் இளவாலை யங்ஹென்றீஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி மோதும்.

கலைவாணி சனசமூக நிலையத் தலைவர்அனுதாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக 'டான் ரி.வி' குழுமத் தலைவர் எஸ்.எஸ். குகநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ். உதைபந்தட்ட லீக்கின் தலைவரும், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான இமானுவேல் ஆனோல்ட் சிறப்பு விருந்தினராகவும், யாழ். தலைமையக பொலிஸ் அதிகாரி காமினி ஹேவாவிதாரண, யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் அஜித்குமார், கிராம சேவையாளர் சர்வேஸ்வரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் பங்குபற்றுவர்.

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பேரவையில் அங்கம் வகிக்கும் வெளிப் பிரமுகர்கள் சுமார் ஒரு டசின் பேரின் மூன்று வருடப் பதவிக் காலம் இந்த மாத இறுதியுடன் முடிவடைகின்றது.

பல்கலைக்கழக ஊழியர் போராட்டத்தினால் பேரவையின் கடைசிக் கூட்டம் நடைபெறமுடியாமல் இழுபட்டுப் போகின்றது. கடைசிக் கூட்டம் நடக்காமலேயே தற்போது பேரவையில் அங்கம் வகிக்கும் வெளிப் பிரமுகர்களின் பதவி காலாவதியாகி விடுமோ என்பது தெரியவில்லை.

அதுவல்லப் பிரச்சினை. அந்தப் பேரவை உறுப்பினர் பதவியைக் குறி வைத்து அரசியல் வாதிகளைக் 'காக்கா' பிடிக்கும் வேலை சத்தம் சந்தடியின்றித் தொடர்கின்றது என்பதுதான் இப்போது புதுத்தகவல்.

உயர்கல்வி அமைச்சு ஐ.தே. கட்சி வசம்தான் உள்ளது. அதனால் ரணில் பக்கம் செல்வாக்குள்ள அரசியல்வாதிகளைப்பிடித்தால்தான் விடயம் நடக்கும் என்று கருதிப் பல பிரமுகர்களும் கூட்டமைப்புத் தலைவர்கள் சிலரோடு அண்மைக் காலமாக நெருங்கிய சகவாசம் கொண்டு அலைகின்றனர் என உள்வீட்டு வட்டாரங்கள் சில தகவல் வெளியிட்டன.

*"புதிய சுதந்திரன் வெளியீடு, அமிர்லிங்கத்தின்ரை சிலை திறப்பு விழா போன்றவற்றிலை பல்கலைக்கழகத்தின்ரை பல பழைய பிரகிருதிகளின்ரை தலையைக் கண்டிருப்பியள்... முன்னுக்கு இடம்பிடிச்சுக் குந்தினவை... சோழியன் குடுமி சும்மா ஆடாது பாருங்கோ...!"* – என்று விடயமறிந்த ஒரு பெரியவர் தகவல் வெளியிட்டார்.

இப்போது நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில், பல சபைகளில் கூட்டமைப்பு வெற்றி பெற்றாலும் கூட தனித்து நிர்வாகத்தை அமைப்பதற்கு போதிய பெரும்பான்மையின்றி – தொங்கு நிலையில் – அல்லாடுகின்றது.

இதையும் சம்பந்தப்பட்ட பேர் வழிகள் தங்களுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்த முனைகிறார்கள் என்று தெரிகின்றது.

அந்தச் சபைகளின் பிரச்சினையை இழுத்துத் தங்களின் தலையில் போட்டுக் கொண்டு, தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி மற்றையக் கட்சிக்காரர்களை வளைத்துப் போட்டு, சமரசம் செய்து, கூட்டமைப்புக்கு உதவுறவையள் மாதிரிக் காட்டி, அதற்குப் பரிசாக – பிரதியுபகாரமாக – பேரவை உறுப்பினர் நியமனத்தைக் கூட்டமைப்புத்தலைமை மூலம் அரசாங்கத்திடமிருந்து பெறுவதுதான் அவர்களின் திட்டம்.

தியேட்டர் தம்பியின் தோழர் ஒருவர் நேற்று தொலைபேசியில் பேசினார். அவர் சொன்ன தகவல் இந்த விடயத்தோடு கனகச்சிதமாகப் பொருந்திப் போகின்றது.

*"வாழ்நாள் கல்விமான் ஒருவர் தினசரி பெரிய தோழருக்குக் 'கோல்' எடுத்து அலுப்புத் தாறார். தன்னிடம் சுமந்திரன் அடிக்கடி கோல் எடுத்து 'உங்கடை நண்பரான தியேட்டர் தம்பியோடை கதைச்சு, எங்களுக்கு ஆதரவு தரச் சொல்லுங்கோவன்!'* – என்று தன்னைக் கேட்கிறார் எண்டு பெரிய தோழருக்கு அடிக்கடி நச்சரிப்புக் கொடுக்கிறார் அவர். ஏன் உவர் சுமந்திரன் நேரடியாகப் பெரிய தோழரோடை பேசமாட்டாராமோ...!" – என்று சீறினார் அந்தச் சின்னத் தோழர்.

அந்தச் சின்னத் தோழருக்கு சில விடயங்கள் விளங்கவில்லைப் போலும். கடந்த ஒரு வாரமாக சுமந்திரன் நாட்டிலேயே இல்லை. அமெரிக்கப் 'புரோகிராமில்' பிஸி. அவருக்குத்தியேட்டர்தம்பியோடை பேசுவதற்குவாழ்நாள்கல்விமான்கள் தேவையில்லை. ஆனால் இந்த விடயத்தைத் தாமே தலையில் போட்டு வெற்றிகரமாக ஒப்பேற்றிக் கொடுத்தால் பேரவை உறுப்பினர் பதவியை சுமந்திரன் எப்படியும் உயர்கல்வி அமைச்சுக்கு ஊடாக வாங்கித் தந்து விடுவார் என்பது அந்தக் கல்விமானுக்குத் தெரியும். பாவம் அந்தச் சின்னத் தோழருக்குத் தெரியாது.

பேரவை உறுப்பினர் பதவி என்பது சும்மா விடயம் அல்ல. சிவனே என்று வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தவரை 'மண்ணெயக்காரர்' உந்தப் பேரவையில் சேர்த்துவிட, இப்ப அவர் அரசியல்வாதி.... மண்ணெய்க்காரரின் கட்சித் தலைவரையே நரித் தந்திரசாலி என்று திட்டுகின்ற அளவுக்கு பெரிய (?) அரசியல்வாதி.

மேலும் யாழ்.பல்கலைக் கழகப் பேரவையில் முன்னர் கொஞ்ச காலம் நீண்ட அங்கி மத குருமாரின் செல்வாக்கு இருந்தது. கடந்த பேரவையில் அது அவுட். ஆனால் இப்போது மீண்டும் சுமந்திரன் பார்வை இதில் படும் என்பதால் ஏற்கனவே சில சாமிமாரின் பெயர்கள் பேரவைப் பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டன எனக் கூறப்படுகின்றது.

தமிழ் மக்கள் பேரவை கிளப்பின சூடு மாதிரி யாழ்.பல்கலைக் கழகப் பேரவை விவகாரமும் சூடு பிடிக்கும் போலத்தான் தெரிகின்றது.

எல்லாம், ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரம் முடிந்த பிறகுதான் சூடு பிடிக்கும் என்று எதிர்பார்க்கலாம். -மின்னல்-

### நிறைவேற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டாலும் அது முழுமையாக நீக்கப்படக் கூடாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உறுப்பினர்கள் பதவியேற்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். (ஐ)

### உலகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மம்னூன் ஹுசைனை நேற்று இஸ்லாமாபாத் நகரிலுள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இந்த தீர்மானத்தை எடுத்தனர்.

இதன்போது, இலங்கைக்கு வழங்கும் புலமைப்பரிசில்கள் மற்றும்பயிற்சிச்சந்தர்ப்பங்களை அதிகரிக்குமாறு இலங்கை ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பாகிஸ்தான் ஜனாதிபதி எதிர்காலத்தில் அந்தச் சந்தர்ப்பங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

உலகப் பயங்கரவாதத்திற்கெதிராக அணிசேர வேண்டிய தன் அவசியம் குறித்து இரு நாடுகளினதும் தலைவர்கள் விரிவாகக் கலந்துரையாடியமையுடன், கடந்த யுத்த காலத்தில் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்காக இலங்கைக்கு பாகிஸ்தான் வழங்கிய உதவிகளை ஜனாதிபதி பாராட்டினார்.

ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடர்களின்போது பாகிஸ்தான் இலங்கைக்காக வழங்கி வரும் ஒத்துழைப்பையும் ஜனாதிபதி பாராட்டினார்.

இலங்கைக்குத் தேவையான சந்தர்ப்பத்தில் உதவுவதற்குப் பாகிஸ்தான் தயார் என்றும் பாகிஸ்தானைச் சகோதர நாடாக ஏற்றுக்கொள்ளுமாறும் ஜனாதிபதியிடம் தெரிவித்த பாகிஸ்தான் ஜனாதிபதி, அடுத்த சார்க் விழாவை பாகிஸ்தானில் நடத்துவதற்கு இலங்கை உதவவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இரு நாடுகளுக்கும் இடையில் இருந்து வரும் வெளிநாட்டு, பாதுகாப்பு, வர்த்தக மற்றும் முதலீட்டு தொடர்புகளை மேலும் உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதியின் இந்த பயணம் உதவியுள்ளதாக பாகிஸ்தான் ஜனாதிபதி மம்னூன் ஹுசைன் தெரிவித்தார் என இலங்கை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

### இளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலத்தி மோட்டார் சைக்கிளைச் செலுத்த முற்பட்டவேளை காரில் தட்டுப்பட்டு நடு வீதியில் விழுந்துள்ளார். விழுந்த இளைஞரைப் பின்னால் வேகமாக வந்த படையினரின் பஸ் மோதித் தள்ளியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து சிறிது நேரத்தில் அதிகளவான இளைஞர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒன்று கூடினர். அங்கு பொலிஸாருக்கும் இளைஞர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. விபத்துக்குக் காரணமாக பஸ், கார் என்பன பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் அல்லாரை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த சந்திரயோகலிங்கம் மயூரன் (வயது-27) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-21)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# ‘கவுண்ட் - டவுன்’ ஆரம்பம்

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் இறுதிக் ‘கவுண்ட் - டவுன்’ ஆரம்பமாகிவிட்டது என்றே தோன்றுகின்றது.

யுத்தத்தின் பின்னர் இலங்கையில் நிலைமாறு கால நீதியை நிலைநாட்டுவதற்கான நான்கு அம்சங்கள் தொடர்பில் - நான்கு பொறிமுறைகள் சம்பந்தமாக - 2015 இல் இலங்கை அரசும் சேர்ந்து அனுசரணை வகித்து, நிறைவேற்றிய தீர்மான விவகாரத்திலேயே இறுதிக் ‘கவுண்ட் - டவுண்’ தொடங்கிவிட்டது என்று கருதுகின்றோம்.

அந்த நான்கு அம்சங்களும் வருமாறு:-

★ யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் நடந்திருக்கும் உண்மைகளைக் கண்டறிதல்.

★ அவை தொடர்பில் நீதியை நிலைநாட்டுதல்.

★ பாதிக்கப்பட்டவர்களுக்கும், தரப்புகளுக்கும் பொருத்தமான இழப்பீடுகளை வழங்குதல்.

★ இத்தகைய நிலைமைகள் மீளவும் நிகழாதிருக்கின்றமையை உறுதிப்படுத்துதல்.

இந்த நான்கையும் சுருக்கமாகக் கூறுவதனால் உண்மைகளைக் கண்டறிதல், பொறுப்புக் கூறுதல், இழப்பீடுகளை வழங்குதல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் எனலாம்.

இந்த நான்கு விடயங்களையும் இலங்கை ஒப்பேற்றுவதற்கு பூர்வாங்கத் தீர்மானம் மூலம் முதலில் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டது.

அந்தக் கால கட்டத்துக்குள் இலங்கை உருப்படியாக ஏதும் செய்யாத நிலையில், அது தனக்கு மேலும் ஒரு வருட கால அவகாசம் கோரியது.

ஆனால், சர்வதேச சமூகமோ மேலும் தாராளமாக நடந்து கொண்டு, ஒரு வருடம் அல்ல, இரண்டு வருடங்கள் மேலதிகமாகக் கால அவகாசம் தருகின்றோம் என்று காலக் கெடு கொடுத்தது.

2015 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இரண்டு வருடங்கள் கழித்தும் நிறைவேற்றப்படாத நிலையில், 2017 இல் மேலும் இரண்டு வருடங்கள் வழங்கப்பட்டன. அந்த மேலதிக இரண்டு வருடத்தில் ஒரு வருடம் இப்போது முடிவடைந்த நிலையில், இறுதி கடைசி ஆண்டுக்கான ‘கவுண்ட் - டவுன்’ தான் ஆரம்பமாகியிருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக - இலங்கையும் சேர்ந்து அனுசரணைப் பணி வகித்து - ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணியோ மிகப்பாரியது; மிக விசாலமானது; அதிகம் பொறுப்பு வாய்ந்தது.

யுத்தம் முடிவடைந்து ஒன்பது ஆண்டுகள் முடிவடையும் சூழலில் - மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மூன்று ஆண்டுகள் பூர்த்தியான பின்புலத்தில் - இன்னும் ஓராண்டே மிச்சமுள்ள நிலையில் - முடிவடைந்த அல்லது ஒப்பேற்றப்பட்ட விடயங்களோ மிக மிகச் சொற்பமானவைதான்.

உண்மைகளைக் கண்டறிதல், பொறுப்புக் கூறல் ஆகிய முதலிரண்டு பிரதான விடயங்களிலும் எதுவுமே நடக்கவில்லை என்றே கூறலாம். இழப்பீட்டு விவகாரமும் ஆரம்பப் புள்ளியிலேயே உள்ளது. முதல் இரண்டு விடயங்களான உண்மையைக் கண்டறிதல், பொறுப்புக் கூறல் ஆகியவை நிலைநிறுத்தப்பட்டால்தான் நான்காவது விடயமான மீளநிகழாமை உறுதிப்படுத்தப்படும்.

ஆக, இந்த நான்கு விடயங்களிலும் மலைபோல் பணி காத்திருக்க, கையளவு வேலைகள்தான் இந்தக் காலத்தில் ஒப்பேறியிருக்கின்றது.

இனி எஞ்சிய ஒரு வருட காலத்தில் இலங்கை காத்திரமாக ஏதும் செய்யும் என்று நம்புவதற்கு இடமேயில்லை என்பதைத்தான் இலங்கை தொடர்பாக கவுன்ஸிலில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ராட் செயிட் அல் ஹுசைன் எழுத்து மூலமாகச் சமர்ப்பித்த கருத்து அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

இந்த எஞ்சிய ஒரு வருட காலத்திலும் இலங்கை எதுவும் செய்யப் போவதில்லை என்பது தெளிவு.

கொழும்பைப் பொறுத்தவரை, கடந்த மூன்று ஆண்டுகளாக தெளிவான - வலுவான - ஐக்கியமான - பலமிக்க - நல்லாட்சி அரசு நீடித்தபோதே இவ்விடயங்களில் உருப்படியாக ஏதும் செய்யாத இந்த ஆட்சிப்பீடம், இப்போது அதற்குள்ளேயே குத்து வெட்டு, களேபரம் உச்சமடைந்திருக்கும் நிலையில் இனி ஏதும் செய்யும் என்று நம்புவதற்கும் இடமேயில்லை.

நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளை நிலைநிறுத்துவதில் இனிமேலும் ஏதும் ஆக்க பூர்வமாக நடைபெறும் என நம்புவதற்கு சொற்ப இடமும் இல்லை என்பதுதான் உண்மை.

தெற்கில் வெடித்திருக்கும் அரசியல் களேபரங்களுக்கு மத்தியில், ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் தீர்மானத்துக்கு மாறாகச் செயற்படுவதன் மூலம் தெற்கின் அரசியல் கதாநாயகர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளவே தெற்கு அரசியல்வாதிகள் இனி மும்முரமாக முனைவார்கள்.

அந்த நாடகம் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. அதில் யார் முன்னநிற்பது என்பதற்காக தெற்கு அரசியல் தலைவர்கள் போட்டி போட, எதுவும் முன்னேற்றம் காணாமலேயே இந்த எஞ்சிய ஒரு வருட காலமும் ஓடிப் போகும் என்பது திண்ணம்.

அப்படியான சூழலில் இனி, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் என்ன செய்யும்? மேலும் கால அவகாசம் வழங்கி, நிலைமாறு கால நீதி திட்டவட்டமாக நீர்த்துப் போக வழி செய்யுமா?

பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# வவுனியாவில் நிதி மோசடி செய்துவிட்டு பருத்தித்துறையில் மறைந்திருந்த ஆசாமி

## நேற்றுமுன்தினம் வசமாகச் சிக்கினார்

யாழ்ப்பாணம், மார்ச் 25

வவுனியாவில் நிதி மோசடியில் ஈடுபட்டுவிட்டுப் பருத்தித்துறையில் தலைமறைவாகியிருந்தவர் சிக்கினார்.

வவுனியா நகரில் நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து மக்களிடம் பணமோசடி செய்த குற்றச்சாட்டு வழக்கில் முன்னிலையாகாமல் தலைமறைவாகியிருந்த பிரதான சந்தேகநபர் பருத்தித்துறையில் வைத்துப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இலங்கைப் பண்ணைகள் மற்றும் மீன்பிடி உற்பத்தி ஊக்குவிப்பாளர் கம்பனி என்ற பெயரில் வவுனியா நகர மத்தியில் இயங்கிய நிறுவனம் மக்களுக்கு வாழ்வாதாரக் கடன் வழங்குவதாக ஆசை வார்த்தைகளைக் கூறிப் பல கோடி ரூபா நிதியை மோசடி செய்திருந்தது.

கடந்த ஒக்ரோபர் மாதம் விண்ணப்ப முடிவுத் திகதி என அறிவித்து கடன் வழங்குவதற்கு முன்னதாக ஒவ்வொருவரிடமும் வைப்புப் பணத்தைச் சேகரித்தது. எனினும் வைப்புப் பணம் செலுத்திய எவருக்குமே கடன் வழங்கப்படவில்லை.

இந்தச் சம்பவத்தின்போது ஏமாற்றப்பட்ட பொது மக்கள் அந்த நிறுவனத்தின் அலுவலகத்தில் ஒன்று திரண்டு போராட்டம் நடத்தியதுடன் அங்கிருந்து மக்களை ஏமாற்றிய குழுவை வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

இதனையடுத்து இவ்வாறு பணம்கொடுத்துஏமாற்றமடைந்த சுமார் 200இற்கும் அதிகமானவர்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு நிறுவனத்தின் இயக்குநரைக் கைது செய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து முக்கிய சூத்திரதாரியான ஆனந்தராஜா என்பவர் வவுனியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றத்தில் அவருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். சந்தேக நபர் கடந்த 3 வழக்குகளுக்கு வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. அதனால் அவரைக் கைது செய்வதற்கான பிடியாணையை நீதிமன்று பிறப்பித்தது.

அத்துடன், சந்தேகநபர்களின் பிணையாளர்களுக்கு கடந்த தவணையின்போது நீதிமன்று எச்சரித்திருந்தது.

அதனால் பிணையாளர்கள் நேற்றுமுன்தினம் பருத்தித்துறைக்குச் சென்று சந்தேக நபரைப் பிடித்துப் பருத்தித்துறை பொலிஸாரிடம் கையளித்ததுடன் வவுனியா பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

சந்தேகநபர் கடந்த காலங்களில் அரசியல்வாதிகளுக்காகத் தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டிருந்ததுடன் பட்டதாரிகள் சங்கம் ஒன்றையும் உருவாக்கி அரசியல் செயற்பாட்டிலும் ஈடுபட்டுவந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# வெளிநாடுகளில் இறக்கும் இலங்கையர்களின் சடலங்களை எடுத்துவரப் புதிய நடைமுறை

கொழும்பு, மார்ச் 25

வெளிநாடுகளில் உயிரிழக்கும் இலங்கையர்கள் தொடர்பிலான ஆவணங்களைப் பிரதேச செயலகங்களினூடாகச்சமர்ப்பிப்பதற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு புதிய முறைமையை அறிமுகம் செய்துள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு நேற்று முன்தினம்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வெளிநாடுகளில் உயிரிழந்த இலங்கையர்களின்உறவினர்கள் சடலங்களைநாட்டுக்குக்கொண்டு வருவதற்கு அல்லது இறுதிக் கிரியைகளைமேற்கொள்வதற்குத் தேவையான அடையாள ஆவணங்கள், சத்தியக்கடதாசிகள் மற்றும்ஏனைய ஆவணங்களை நாடு முழுவதுமுள்ள பிரதேச செயலகங்களினூடாக சமர்ப்பிப்பதனை இயலுமாக்கும் புதிய முறைமையொன்றை வெளிநாட்ட லுவல்கள் அமைச்சின் கொன்சி யூலர் அலுவல்கள் பிரிவானது உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுவரை, உயிரிழந்த நபரின் உறவினர்கள்சடலத்தைநாட்டுக்கு கொண்டு வருவதற்காக அல்லது வெளிநாட்டில் இறுதிக்கிரியைகளை மேற்கொள்வதை அங்கீகரிப்பதற்காகக் குறித்த ஆவணங்களை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் அலுவல்கள் பிரிவிற்குச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது.

புதிய முறைமையின் கீழ், உயிரிழந்த நபரின் உறவினர்கள் தேவையான ஆவணங்களை அருகிலுள்ளபிரதேசசெயலகத்தில் சமர்ப்பிக்க முடிவதுடன், அவை மேலதிக நடவடிக்கைகளுக்காக கொன்சியூலர்அலுவல்கள்பிரிவுக்குச் சமர்ப்பிக்கப்படும்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இந்தத் திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதற்காக அனைத்துப் பிரதேச செயலாளர்களையும் அறிவுறுத்தும் வகையிலான சுற்றறிக்கை ஒன்றை ஏற்கனவே வெளியிட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் உறவினர்கள்தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்காககொழும்பிலுள்ள கொன்சியூலர் அலுவல்கள் பிரிவிற்கு அல்லது யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய கொன்சியூலர் அலுவலகத்திற்குப் பிரயாணங்களை மேற்கொள்ளாது, அருகிலுள்ள பிரதேச செயலகத்தில் அவற்றைச்செயற்படுத்திக்கொள்வதனை இந்த புதிய முறைமை இயலுமாக்குகின்றது.

இறப்பு வாயிலான இழப்பான தருணமொன்றில்கொழும்பு அல்லது யாழ்ப்பாணத்திற்கு நீண்ட பிரயாணங்களைமேற்கொள்வதனையும், தேவையற்ற காலதாமதங்கள் மற்றும்செலவீனங்களையும் தவிர்க்கும் முகமாக, இந்த புதியஏற்பாட்டில்குறிப்பாக,வெளிப் பிரதேசங்களிலுள்ள பொது மக்கள் நன்மைகளை அடைந்து கொள்ளமுடியும்.

இந்தத் திட்டமானது, பொது மக்களுக்கு ஒருமுகப்படுத்தப்பட்டதும், பரவலாக்கப்பட்டதும், மேம்படுத்தப்பட்டதுமானகொன்சியூலர் சேவைகளை வழங்குவதற்கான வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் முயற்சிகளின் ஒரு பாகமாகும். - என்றுள்ளது. (ஐ)

# இன்று திறக்கப்படுகிறது மட்டு. விமான நிலையம்



மட்டக்களப்பு, மார்ச் 25

மட்டக்களப்பு விமான நிலையம், சிவில் விமானப் போக்குவரத்துக்காக இன்று திறந்து விடப்படவுள்ளது. கடந்த 25 ஆண்டுகளாக இலங்கை விமானப் படையின் கட்டுப்பாட்டில் இருந்த மட்டக்களப்புவிமானநிலையத்தை, 2016ஆம் ஆண்டு மே 31ஆம் திகதிசிவில்விமானப்போக்குவரத்து அதிகார சபை பொறுப்பேற்றது.

அதன்பின்னர், சிவில் விமானப் போக்குவரத்துக்கான செயற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக 140 கோடி ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

46 மீற்றர் அகலமும், 1066 மீற்றர் நீளமும் கொண்டனவாக இந்த விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கப்பட்டுள்ளது.

இன்று பயணிகளின் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்படவுள்ள மட்டக்களப்பு விமான நிலையத்தில் இருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கு, உள்ளூர் விமான சேவைகளை ஆரம்பிக்க பல்வேறு விமான சேவை நிறுவனங்கள் விருப்பம் வெளியிட்டுள்ளன.(ஐ)

## நாளை

26.03.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம் : புநர்பூசம் பி.ப 12.23 வரை
திதி : தசமி பி.இ 3.06 வரை
சுபநேரம் : 12.15 - 1.45 வரை
இராகுகாலம் : 7.45 - 9.15 வரை

# வடக்குத் தொண்டராசிரியர்கள் டக்ளஸுடன் விசேட சந்திப்பு



தமது நியமனங்களை உறுதிசெய்து தருமாறு கோரி தொண்டராசிரியர்கள் ஒருதொகுதியினர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே தொண்டராசிரியர்கள் செயலாளர் நாயகத்திடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தொண்டராசிரியர் நிரந்தரமாக்கலுக்கான நேர்முகத்தேர்வில் ஆவணங்கள் ரீதியாக உள்வாங்கப்பட்ட 182 தொண்டராசிரியர்களை நிரந்தரமாக்குவதற்குத் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் தாமும் குறித்த நேர்முகத் தேர்வுக்கு தகுதி பெற்றிருந்தும் கடந்த யுத்த அனர்த்தங்கள் காரணமாகத் தங்களால் சில ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாது போனமையால் தாங்கள் அந்த நிரந்தரமாக்கலில் தெரிவு செய்யப்படவில்லை என்று அவர்கள் அங்கு தெரிவித்தனர்.

அத்துடன் நீண்டகாலமாக ஊதியங்களைக் கூட எதிர்பாராது தாம் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டனர் எனவும் இந்தத் தொழிலையே தமது எதிர்காலமாக நம்பியிருக்கிறோம் எனவும் தற்போது தமக்கு வயது அதிகரித்துச் சென்றுள்ள நிலையில் நிரந்தர நியமனம் கிடைக்காது போனால் தமது குடும்ப நிலை பாதிக்கப்படும் என்று தெரிவித்த அவர்கள், தமக்கும் 182 தொண்டராசிரியர்களுடன் சேர்த்து நிரந்தர நியமனங்களை வழங்க ஏற்பாடுகள் செய்துதர வேண்டும் என்றும் இது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தாவால் மட்டுமே இயலுமான காரியம் என்றும் தெரிவித்துள்ளனர்.

தொண்டராசிரியர்களது கோரிக்கைகளைச் செவிமடுத்த செயலாளர் நாயகம், கல்வி அமைச்சின் செயலாளருடன் தொடர்பை ஏற்படுத்தி தொண்டராசிரியர்களுடன் உரையாடலை மேற்கொண்டு காலக்கிரமத்தில் குறித்த தொண்டராசிரியர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகள் செய்வேன் எனத் தெரிவித்தார். (ஐ)

## கம்பன் கடலமுதம் நூல் வெளியீடு

பிரபல எழுத்தாளரும் மக்கள் வங்கியின் ஓய்வு நிலை முகாமையாளருமான மு.சிவநேசனின் 'கம்பன் கடலமுதம்' நூல் வெளியீட்டு விழா இராமபிரான் அவதரித்த ஸ்ரீ ராம நவமி தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் மண்டபத்தில் பண்டிதர் சைவப் புலவர் பொன். சுகந்தன் தலைமையில் இடம்பெறும்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், யாழ் மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

## மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை

**யாழ் பிரதேசத்தில்** -
தவசிக்குளத்திலும்,

**வவுனியா பிரதேசத்தில்** -
அரசமுறிப்பு கிராமம், ராஜ் மீன்பிடி வலைத் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** -
நீராவிபுரம், கற்கடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஆறுகால்மடம் அரசடி வைரவருக்கு உற்சவம்

ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் அரசடி ஞானவைரவர் திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இறுதி உற்சவ தினமாக எதிர்வரும் 5 ஆம் திகதி பத்தாம் நாளன்று காலை சங்காபிஷேகம் நடைபெற்று மாலை பெருமான் கிராம ஊர்வலம் வருதலும் இடம்பெறும். (இ- 19)

## இரண்டாவது போர்க் கப்பலையும் இலங்கைக்குக் கையளித்த இந்தியா




இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட 2,500 தொன் எடையுள்ள பெரும் ஆழ்கடல் ரோந்துக் கப்பல் நேற்றுமுன்தினம் இலங்கையிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கைக் கடற்படைக்காகக் கோவா கப்பல் கட்டும் தளத்தில் இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களைக் கட்டுவதற்கு உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

முதலாவது ஆழ்கடல் ரோந்துக் கப்பல் கடந்த ஆண்டு இலங்கையிடம் கையளிக்கப்பட்டு, கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இரண்டாவது ஆழ்கடல் ரோந்துக் கப்பலைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கோவா கப்பல் கட்டும் தளத்தில் இடம்பெற்றது. இதில், இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் சித்ராங்கனி வகீஸ்வராவிடம், புதிதாகக் கட்டப்பட்ட கப்பல் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், இலங்கைக் கடற்படையின் தலைமை அதிகாரிறியர் அட்மிரல் ரொசாரியோ மற்றும் இந்திய, இலங்கைக் கடற்படை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## பாதாள உலகக் குழுவை அழிக்கத் துணிவற்ற அரசு

### ஞானசார தேரர் சாடல்

கொழும்பு, மார்ச் 25

விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்த அரசுக்குப் பாதாள உலகக் குழுவினரை அழிக்க முடியாதுள்ளமை வேடிக்கையாகவுள்ளது எனப் பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் வணகலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

அண்மைக் காலமாகத் தொடரும் பாதாள உலகக் குழுவினரின் நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலிகளின் விவகாரத்தில் அரசு கையாண்ட நடவடிக்கைகளைப் பாதாள உலகக் குழுவினர் மீது செயற்படுத்த அரசு பின்வாங்குவது வேடிக்கையாகவுள்ளது. பாதாள உலகக் குழுவினரின் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதற்கு தேசிய அரசை மாத்திரம் குறைகூற முடியாது. கடந்த கால அரசும் இதற்குப் பொறுப்புக் கூறவேண்டும். பாதாள உலகக் குழுவை அரசியல்வாதிகளே உருவாக்கினர். தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இவர்களை ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

எனினும் குறித்த பாதாளக் குழுவின் பின்னணியில் எந்த அரசியல்வாதிகள் உள்ளார்கள் என்பதை நன்கு அறிந்தும் சட்டம் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பின்வாங்குகின்றது.

பாதாளக் குழுவினரின் விடயத்தில் கடந்த கால அரசு போலவே நல்லாட்சி அரசும் பொறுப்பற்ற விதத்திலேயே செயற்படுகின்றது. – என்றார். (ஐ)

## யோக சுவாமிகளின் குருபூசை நாள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

எதிர்வரும் பங்குனித் திங்கள் பதின்மூன்றாம் நாள் (27-03-2018) செவ்வாய்க்கிழமை யோகசுவாமிகளது ஐம்பத்து நான்காவது குருபூசை நாள். கொழும்புத்துறை சமாதிக் கோவிலும், சிவதொண்டன் நிலையத்திலும் குருபூசைக் கொண்டாட்டங்கள் நிகழும்.

குருபூசைக்கு முதல் நாள் திருவடிப்பூசை தினமாகும். ஆதலினால் திருவடிபூசைக்கு முந்திய மூன்று நாள்களும் நற்சிந்தனை முற்றும் ஓதி நிறைவு செய்யப்படும். குருபூசை நாளன்று முற்பகல் 9 மணி முதல் அபிடேக ஆராதனைகள் நிகழும். பூசனை முடிவில் மாகேசுர பூசையும் இடம்பெறும். என்று சிவதொண்டன் சபையினர் அறிவித்துள்ளனர். (இ)




## இறை தொண்டராக எம் வாழ்வை மாற்றுவோம்.

எமது வாழ்வை புடமிடக் கிடைத்த சந்தர்ப்பங்களே இத்தவக்காலத் தியானங்கள். இவை எம் வாழ்வில் கடைப்பிடிக்க பல சவால்கள் தடைகள் வரும்போது மனதை ஒரு நிலைப்படுத்தும் போது ஏற்படும் சலனங்கள் சம்பவங்கள் எம்மைத் தயார் படுத்த கிடைத்த சந்தர்ப்பமாக வெல்வதற்கு ஆன்மிகப் பலமே முக்கியமானது இதற்கு இறை வார்த்தை செய்தி மூலம் கூறப்படுகிறது.

மானிட மகன் மாட்சி பெறவேண்டிய நேரம் வந்துவிட்டது கோதுமைமணி மண்ணில் விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன். தமக்கென்ற வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவார். இவ்வுலகில் தம் வாழ்வை பொருட்டாக கருதாதோர் நிலை வாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவார். எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நாம் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பார். எனக்குத் தொண்டு செய்வோ ருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார் என இயேசு அன்று கூறிய வார்த்தைகள் எமது வாழ்வை மீட்டுப் பார்க்க வைக்கிறது.

முன்னிருக்கையில் முண்டி அடிப்போர் அதிகரித்து வரும் காலத்தில் பிறருக்கு தொண்டு செய்யும் தாழ்சிய வாழ்வு வாழ இறை உறவை பலமாக்கவல்லது எம்மைத் தூய்மைப்படுத்தித் கோதுமை மணிபோல் எம்மை முழுமையாக அர்ப்பணிக்காத வரை தமது சுயநலவாழ்வுக்காக பிறரைப் பயன்படுத்தவே முனைவர். தம் வாழ்வைப் பயன்படுத்தும் அர்ப்பணிப்பு இறை உறவில் பல விளைச்சலை வாழ்வில் அனுபவிக்க இதுவே நேரம் இதுவே காலம். இன்றே இறை தொண்டராக எமது வாழ்வை மாற்றுவோம்.

**செ.யோசப்பாலா**

# தந்தைகளுக்காக காத்திருக்கும் சங்கீதாக்கள்!



கருவில் இருக்கையிலேயே தந்தையைப் பிரிந்தாய்– தாயின் அரவணைப்பில் மட்டுமே மகிழ்ந்திருந்தாய்– இப்போது தாயையும் இழந்து பரிதவித்து நிற்கின்றாய்– உண்மையில் நீ செய்த குற்றம் என்ன–? ஈழத் தமிழ்க் குழந்தையாகப் பிறந்ததைத் தவிர–

அமானி ராயிதா, தினுல்யா சனாதி பிறந்த இனத்தில் பிறந்திருந்தால் தந்தையின் மடியில் தவழ்ந்திருப்பாயே அவரின் மார்பிலேயே தூங்கி வளர்ந்திருப்பாயே ! அண்ணனும் நீயுமாக போட்டிபோட்டு தந்தையைத் தூக்கக் கேட்டு அடம்பிடித்திருப்பீர்களே! உங்கள் தாய்க்காக இந்தளவு சிறிய வயதில் கொள்ளிக்குடத்தை அண்ணன் தூக்கி நடந்திருக்க மாட்டானே.

பாவியரின் வன்செயல்களால் தானேதந்தை ஆயுதத்தைத்தூக்கினார். அதனால்தானே செய்யாத குற்றத்துக்காக உனது தந்தையை சிறையில் அடைத்தார்கள் இதனால்தானே உனது தாயும் நோயுற்றாள் ! அதனால் சாவையும் அழைத்தாள்.

அரசியல் கைதியான ச.ஆனந்த சுதாகரனின் 10 வயதேயான மகள் சங்கீதா தாயின் மரணச் சடங்கில் கலந்து கொள்ள வந்த தந்தையின் பின்னால் சென்று சிறைச்சாலை வாகனத்தில் ஏறி சிறை செல்ல முயன்றாள். இந்தச் சம்பவத்தை அறிந்து நெஞ்சம் கரையாதவர்கள் இல்லை. ஆனால் இந்தச் சிறுமியின் பரிதவிப்பை அநாதரவு நிலையைக் கண்டும் அறிந்தும் நெஞ்சம் கரையாதவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படி நெஞ்சம் இல்லாதவர்களும் இருக்கிறார்களா என்று எண்ணவும் கூடும். இருக்கிறார்கள். ஒரு சாரார் ஈவிரக்கமற்ற இலங்கையின் ஆட்சியாளர் கூட்டம். இரண்டாவது சாரார் நம் அரசியல்வாதிகள். ஆம் நம் தமிழ் அரசியல்வாதிகளேதான்.

**அவர் தமிழர் ஆயிற்றே!**
**எப்படி சலுகை கிடைக்கும்?**

ஆட்சியில் இருப்பவர்கள் நினைத்திருந்தால் தந்தையைப் பிரிந்த அந்தப் பிஞ்சின் துன்பத்தை, சோகத்தை, துயரத்தை, கவலையை உடனடியாகவே தீர்த்திருக்க முடியும். கொலைக் குற்றவாளிக்குக்கூட இரக்கம் காட்டி அதிக பிணைநேரம் வழங்க இடமளித்த இலங்கைச் சட்டம். அரசியல் கைதி ஒருவருக்கு ஆக வழங்கியது மூன்றே மூன்று மணி நேரம்தான். ஆனந்த சுதாகரனுக்கு வழங்கப்பட்ட அந்த 3 மணி நேரப் பிணையை அதிகரித்து இருக்க முடியும். ஆனால் அவர்தான் தமிழராக இருந்து விட்டாரே! எவ்வாறு பிணை நேரத்தை அதிகரித்து வழங்குவது என்று சட்டம் நிதானித்து இருக்கக்கூடும்.

**மனிதாபிமானப் போர் என்ற போர்வையில் ஈவிரக்கமற்ற அரசும் அதன் இயந்திரமான முப்படைகளும் பொலிஸும் நடத்திய கொடூரங்கள் உலகறியும். அவை இப்போது முடிந்த கதை வேறுகதை. நல்லிணக்கத்தை ஏற்படுத்த தியாகங்களை சுமந்து நிற்கிறோம் என்று நாடகமாடும் அரச பரிவாரங்கள் முதலில் அரசியல் கைதிகளை விடுவித்து நல்லிணக்க சமிக்ஞையை வெளிப்படுத்த வேண்டும்.**

தன்னைக் கொல்ல வந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதி சி.ஜெனிவனுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னிப்புவழங்கினார். ஆனால் அந்த மன்னிப்பின் மூலம் தன்னைக் கொல்ல வந்தவரையும் மன்னித்தவர் என்பதால், உலகம் தன்னைக் கடவுளாகக் கொண்டாடும் என்று எண்ணினாரே தவிர வேறு எதுவும் செய்யவில்லை. வாய்கிழிய நல்லிணக்கம் பேசும் ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சர்களும் அரச ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் கைதிகளைவிடுவிப்பதிலும்நல்லிணக்கம் தங்கியிருக்கிறது என்பதை ஏன் புரிந்து கொள்ளவில்லை?



**சங்கீதாவின் அழுகை மொழி கேட்கவில்லையா?**

பிரசாரக் காலத்திலும், பாடசாலை நிகழ்வுக்கு சென்ற போதும் நண்பிகளாகிப் போன அமானி ராயிதா, தினுல்யா சனாதி என்ற சிறுமிகளின் வீட்டுக்குச் சென்று அவர்களின் மழலைப் பேச்சில் மகிழ்ந்திருந்த ஜனாதிபதிக்கு, தமிழ்ச் சிறுமியான சங்கீதாவின் அழுகை மொழி இனிக்காதுதான். அதனால்தான் தாயை இழந்து தந்தையைப் பிரிந்து அநாதரவாக நிற்கும் சிறுமி சங்கீதாவின் குரல் அவரின் காதை எட்டவில்லை. தன்னைக் கொல்ல முயன்றவருக்கும் மன்னிப்பு அளித்த ஜனாதிபதியால் தாயை இழந்து, தந்தையைப் பிரிந்து அநாதைகளாக நிற்கும் ஆனந்தசுதாகரனின் பிள்ளைகளுக்காக பொது மன்னிப்பு வழங்க முடியாதா என்ன?

அரசியல்வாதிகளுக்கு ஓடியோடி சிலை திறக்கும் நம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டியவர்கள் என்று ஏன் வலியுறுத்திச் சொல்லத் துணியவில்லை. ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டம் நடக்கிறது என்றவுடன் உடனடியாக ஜெனீவாவுக்கு பறந்த அதிகாரத்தில் உள்ள இல்லாத அரசியல்வாதிகளுக்கு இன்னமும் அரசியல் கைதிகள் உட்பட வருடம் தாண்டியும் போராட்டம் நடத்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம்கூட கண்ணுக்குத் தெரிவதில்லை. நாடாளுமன்றம் சென்று வலுவாகக் குரல் எழுப்பி அரசுடன் ஒத்துப் போகும் இந்தத் தருணத்தில் அதை மிரட்டிக் காரியம் சாதிக்கத் துப்பில்லாதவர்கள் ஜெனீவா சென்று சாதிக்கப் போவது எதை?

மனிதாபிமானப் போர் என்ற போர்வை யில் ஈவிரக்கமற்ற அரசும் அதன் இயந்திரமான முப்படைகளும் பொலிஸும் நடத்திய கொடூரங்கள் உலகறியும். அவை இப்போது முடிந்த கதை வேறு கதை. நல்லிணக்கத்தை ஏற்படுத்த தியாகங்களை சுமந்து நிற்கிறோம் என்று நாடகமாடும் அரச பரிவாரங்கள் முதலில் அரசியல் கைதிகளை விடுவித்து நல்லிணக்க சமிக்ஞையை வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில் தந்தைகளின் வருகைக்காக சங்கீதாக்கள் காத்திருக்கின்றனர்–!

**- வித்தகன் -**

# ஆற்று நீரைச் சுத்தம் செய்ய நீந்தும் பெண்கள்!



இந்தோனேஷியாவில் பெண்கள் வெற்றுக் கொள்கலன்களை இடுப்பில் கட்டி நீந்தியபடி விநோதமான முறையில் ஆற்றுத் தண்ணீரைச் சுத்தம் செய்கின்றனர்.

ஆறு மற்றும் ஏரிகளின் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு குடிதண்ணீராக விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்தோனேஷியாவில் ஒரு விநோதமான முறை நடைமுறைப்படுத்தப் படுகிறது.

இந்தோனேஷியாவில் சுலாவேசி தீவு உள்ளது. இங்கு தினாம் பங் மாவட்டத்திற்கு உள்ளடங்கிய மீன்பிடிக் கிராமத்தில் வாழும் மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் கிடைக்கவில்லை என்ற முறைப்பாடு இருந்து வந்தது.

இக்கிராமத்துக்கு அங்குள்ள மன்டர் என்ற ஆற்றில் இருந்து குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. இது மிகவும் மாசுபட்ட நிலையில் குப்பை கூளங்கள் நிறைந்ததாக இருந்தது. எனவே அவற்றை சுத்தம் செய்ய புது வழி கண்டுபிடிக்கப்பட்டது.

அதன்படி வெற்றுக் கொள்கலன்களை இடுப்பில் கட்டிக் கொண்டு தண்ணீரில் நீந்தியபடி குப்பை கூளங்கள் அகற்றப்படுகின்றன. இந்த முறையில் பெண்கள் தலா 200 வெற்றுக் கொள்கலன்களை இடுப்பில் கட்டியபடி ஆற்றில் நீந்துகின்றனர்.

தினமும் ஒரு மணி நேரம் 4 கிலோ மீற்றர் தூரத்துக்கு நீந்தி ஆற்றுத் தண்ணீரைச் சுத்தம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு கொள்கலனுக்குத் தலா 7 டொலர் கூலி வழங்கப்படுகிறது.

இத்தகைய முறை மூலம் சுத்தம் செய்யப்படும் அந்தத் தண்ணீர் ஆற்றின் கரையோரம் உள்ள கிணறுகளில் சேமிக்கப்பட்டு பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது.

# முஸ்லிம்களுக்கு நடந்தது இனச் சுத்திகரிப்பு தமிழர்களுக்கு நடந்தது இனப்படுகொலை

**1990 இல் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை ஓர் இனச் சுத்திகரிப்பே என்று யாழ். பல்கலைக்கழக சட்டபீடத் தலைவர் கு.குருபரன் தனது முகப் புத்தகத்தில் தெரிவித்த கருத்தையொட்டி வித்தகன் என்பவர் 'தமிழ் லீடர்' தளத்தில் எழுதிய கட்டுரை கடந்த வெள்ளியன்று 'காலைக்கதிர்' இதழில் வெளியானது.**

**அதற்குத் தெளிவான விளக்கம் தந்து எதிர்வினையாற்றியிருக்கின்றார் குருபரன். அதனை அப்படியே வரிக்குவரி பிரசுரிக்கின்றோம். அவரது இந்த விளக்கம் இவ்விடயத்தில் தமிழர் தரப்பை நியாயமாகச் சிந்திக்கத் தூண்டும் என்று கருதுகின்றோம். அவரது தெளிவான விளக்கத்துக்காக நன்றிகள்.**

**– ஆசிரியர்**

இரு வாரங்களுக்கு முன் எனது முகப்புத்தக நிலைத் தகவலொன்றின் ஒரு சிறு பகுதியை அடிப்படையாகவைத்து புனைப் பெயரில் இணையம் ஒன்றில் வந்த ஒரு கட்டுரையை 'காலைக்கதிர்' கடந்த வெள்ளிக்கிழமையன்று மறுபிரசுரம் செய்திருக்கிறது. புனை பெயரில் எழுதுபவர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை என்றாலும் அச்சு ஊடகத்தில் பிரசுரம் ஆகி உள்ளதாலும் ஒரு கட்சியை தாக்கும் நோக்கில் அது எழுதப்பட்டுள்ளதாலும் இந்த எதிர்வினையை பதிவிடுவது அவசியமாகின்றது.

1. கட்டுரையாளர் நான் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் என்ற தோரணையில் கட்டுரை வரைந்திருக்கிறார். நான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினன் அல்லன். அக்கட்சியில் எவ்வித பதவியோ அங்கத்துவமோ ஒரு போதும் எனக்கு இருந்ததில்லை.

2. நான் எனது பல்கலைக்கழக ஆசிரியர் பணியைத் தவிர பல்வேறு சிவில் சமூக வகிபாகங்களில் களப் பணியாற்றுகிறேன். அத்தகைய வேலை சார்ந்து நான் பல்வேறு பட்ட தமிழ் அரசியல்வாதிகளுடன் தொடர்பில் இருந்திருக்கிறேன்; இருந்து வருகிறேன். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கருத்தரங்குகளில் கூடப் பேசியிருக்கிறேன். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் தீர்வு, பொறுப்புக் கூறல் தொடர்பிலான நிலைப்பாடுகளில் எனக்கு நிறைய உடன்பாடுகள் உண்டு. சில முக்கிய விடயங்களில் மாற்றுக் கருத்தும் உண்டு. மிகவும் வெளிப்படையாக சிலகாலமாகவே தமிழ்த்தேசிய அரசியலில் இரு கட்சி முறை தேவை என எழுதியும் பேசியும் வருகிறேன். ஆகவே முன்னணி தமிழ் மக்கள் மத்தியில் பலமான சக்தியாக வர வேண்டும் என்றும் விரும்பியிருந்தேன்; தொடர்ந்தும் விரும்புகிறேன். பொது வெளியில் இது தொடர்பில் கருத்துக் கூறியும் வருகிறேன். ஆனால் நிச்சயம் அக்கட்சியில் நான் உறுப்பினன் அல்லன். அக்கட்சி கடந்த காலத்தில் கடந்து வந்த சோதனைகளில் நான் பங்கெடுக்கவில்லை. அதே போல் அதன் அண்மித்த தேர்தல் சாதனைகளில் எவ்வகையிலும் நான் உரிமைகொண்டாட முடியாதவன். கட்டுரையாளருக்கு முன்னணியின் வளர்ச்சி எரிச்சல் தருவது போல் உள்ளது. அதனால் தான் என்னைத் தாக்குவதை போல் முன்னணியை தாக்க நினைக்கிறார். எனது கருத்து எனது கருத்து மட்டுமே. அதற்கு முன்னணி விளக்கம் கொடுக்க வேண்டியதில்லை.

3. நான் முகப்புத்தகத்தில் பதிவு செய்த நிலைத்தகவலின் ஒரு சிறிய பகுதியை மட்டும் வைத்து 'வித்தகன்' எதிர்வினை ஆற்றியிருக்கிறார். நான் கூறியவை அதன் முழுவடிவில் பின்வருமாறு. எனது நிலைப்பாட்டை முழுவதுமாக வாசித்து விளங்கிக் கொள்வது 'வித்தகனின்' எதிர்வினையை அதன் சூழமைவில் விளங்கிக் கொள்ள உதவும். ஏனையவற்றை வாசகர்களின் புத்திசாலித்தனத்திற்கு விடுகிறேன்:

02 மார்ச் 2018 எனது முகப்புத்தகத்தில் இட்ட நிலைத்தகவல்:-

எமக்குள் வளர்ந்து வரும் முஸ்லிம் விரோத மனப்பாங்கு ஆபத்தானது. சிங்கள பௌத்த பெருந்தேசியவாத மனப்பாங்கிற்குரிய வன்மம் எமக்கு


விளக்குகின்றார் கு.குருபரன்

வேண்டாம்.

07 மார்ச் 2018 அன்று பதிவு செய்த நிலைத்தகவல்:-

முஸ்லிம் சமூகம் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் பரவும் வெறுப்பு உணர்வு தொடர்பில் நான் தெரிவித்து வரும் கருத்துக்கள் தொடர்பில் சிலர் எரிச்சலடைகின்றனர்.

**அவர்களுக்கானது இந்தப் பதிவு/ விளக்கம்.**

1. ஆயுதப் போராட்டத்தின் போது நாம் முஸ்லிம்களுக்கு எதிராக கொடுமைகளை இழைத்துள்ளோம் என்பதை மறக் கவோ மறுக்கவோ முடியாது . (1990 முஸ்லிம்களை வெளியேற்றியது இனச் சுத்திகரிப்பு (Ethnic Cleansing) தான். இல்லை என்போர் தமிழர்களுக்கு நடந்தது இனப்படுகொலை (Genocide) என கூறும் யோக்கிதை அற்றவர்கள் என்பது எனது தாழ்மையான கருத்து).

2. அதே போல் முஸ்லிம் இனத்தவர்களும் தமிழர்களுடைய போராட்டத்திற்குக் குந்தகமாக நடந்து கொண்டுள்ளார்கள் என்பதை மறுப்பதற்கு இல்லை. ஆனால் அதை முஸ்லிம் சமூகத்தின் தவறாக பொதுமைப்படுத்துவதிலும் எனக்கு உடன்பாடு இல்லை.

3. முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழ் தேசிய அரசியல் தொடர்பில் தெளிவற்ற பார்வை உடையவர்கள். தமதரசியல் தொடர்பிலும் தெளிவற்ற பார்வை உடையவர்கள். மேலதிக விளக்கத்தை பொங்கு தமிழில் 2012 ஆம் ஆண்டு வெளிவந்த எனது கட்டுரையில் காணலாம்:

அக்கட்டுரையில் இருந்து ஒரு வரி மட்டும் எனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் முகமாக: 'சிங்களத் தேசியத்தோடு மோதும்போது சரணாகதி அரசியல் செய்யும் ஹக்கீம் (சிறிலங்கா தேசத்தின் ஒரு பகுதி எனச் சரணடையும் ஹக்கீம்) தமிழ்த் தேசியத்தோடு தொடர்பு கொள்ளும் போது மட்டும் வீறு கொண்டு முஸ்லிம் தேசியத்தைப் பற்றிப் பேசுவது தற்போதைய முஸ்லிம் தலைமைத்துவத்தின் அடிப்படை நேர்மையற்ற நிலைப்பாட்டைக் காட்டுகின்றது'.

4. முஸ்லிம் அரசியல்வாதிகள் பேரினவாத அரசியல்வாதிகளோடு சேர்ந்து குறிப்பாக போருக்கு பிந்தைய சூழலில் தமிழரின் இருப்பை கேள்விக்குறியாக்குகிறார்கள் என்பதிலும் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. குறிப்பாக ரிஷாத் பதியுதீன், அமீர் அலி போன்றவர்கள் தமது அரசியல் அதிகார நலன்களுக்காக சிங்கள பௌத்த பேரினவாத அரசியலோடு ஒத்துப் போவதோடு தமிழ் விரோத அரசியலை செய்கிறார்கள் எனவும் கருதுகிறேன். முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் பதியுதீன் மீட்பர் அவதாரம் எடுத்துள்ளமை பாரதூரமானது எனவும் கருதுகிறேன்.

5. முஸ்லிம் மக்களின் கலாசார அரசியல் அரபுவாத முழுமைவாதத்தால் (Pan Arabism) பாதிக்கப்பட்டுள்ளது எனவும் கருதுகிறேன். இது உள்ளக ரீதியில் அச்சமூகத்தில் பெரும் சமூக பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது எனக் கருதுகிறேன். (தமிழ் அரசியலில் பரப்ப முயற்சிக்கப்படும் இந்துத்துவ அரசியலும் எம்மை அந்நிலைக்கு தள்ளும் என்பதில் எனக்கு எள்ளளவு சந்தேகமும் இல்லை).

6. அதே வேளை முஸ்லிம் மக்களுக்கு எதிரான வெறுப்புணர்வுக்கு (IslamaPhobia) ஓர் உலகளாவிய பரிணாமம் (International Dimension) உண்டு எனக் கருதுகிறேன். முஸ்லிம் களுக்கு எதிராக உலகளாவிய ரீதியிலும் தற்போது இலங்கையிலும் அரங்கேற்றப்படும் வன்முறைக்கும் இந்த சர்வதேச பரிணாமத்திற்கும் தொடர்பு இருப்பதாக கருதுகிறேன்.

7. சிங்கள பௌத்த சமூகத்திற்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயான சமூக உறவின் விரிசலுக்கு நீடித்த வரலாறு இருப்பதாக விளங்கிக் கொள்கிறேன். தமிழ் சமூகத்திற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் அவ்வாறான ஆழமான வெறுப்புணர்வு இல்லை எனக் கருதுகிறேன்.

8. முஸ்லிம் அரசியல்வாதிகளையும் முஸ்லிம் மக்களையும் ஒரே தராசில் வைத்து நான் மதிப்பிடுவதை தவறு என எண்ணுகிறேன். முஸ்லிம் சமூகத்தையும் தமிழ் சமூகத்தையும் மோத விட்டுப் பார்க்க சிங்கள பேரினவாத அரசியல் விரும்புகின்றது எனவும் கருதுகிறேன். (கிழக்கில் 'தமிழர் சார்பு' பௌத்த பிக்குகளின் செயற்பாடுகளை கவனிக்க)

9. தமிழ்ச் சமூகத்தின் சுயநிர்ணய அரசியலின் அறமானது எல்லா விதமான ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக குரல் கொடுக்கச் சொல்லும் தன்மையானது எனக் கருதுகிறேன். குறிப்பாக எண்ணிக்கையில் சிறுபான்மையான இன்னொரு சமூகம் அடி வாங்கும் போது கை தட்டி ஏளனமாகச் சிரிப்பது எனது தமிழ் சுயநிர்ணய அரசியல் அறத்திற்கு முரணானது என கருதுகிறேன்.

10. வடக்கு-கிழக்கு எமது தாயகம் எனக் கருதுகிறேன். அதில் முஸ்லிம்கள் எமது சகபிரயாணிகள் எனக்கருதுகிறேன். வடக்கு கிழக்கில் தமிழர்கள் பேரினவாத அரசியல் செய்யக் கூடாது என நினைக்கிறேன்.

மேற்படி காரணங்களுக்காக முஸ்லிம் களுக்கு எதிராக பரவும் வெறுப்பிற்கு எதிராகத் தொடர்ந்து கருத்திடுவேன்.

இந்த நிலைப்பாட்டில் இருந்து கொண்டு முஸ்லிம் சமூகத்தோடு அவர்களின் அரசியல்வாதிகள் பேரினவாத அரசியலோடு கைகோத்து செய்யும் அட்டகாசத்தை பற்றி கேள்வி கேட்கும் தகுதியுடையவர்களாக நாம் எம்மை ஆக்கிக் கொள்ளலாம் என கருதுகிறேன்.

08 மார்ச் 2018 மேற்படி நிலைத்தகவலுக்கு வந்த பின்னூட்டங்கள் சிலவற்றிற்கு நான் எனது முகப்புத்தகத்திலேயே வழங் கிய பின்னூட்டம்:

எதிர்வினை ஆற்றியோருக்கு நன்றி.

பெரும்பாலானோர் 1990இல் முஸ்லிம் மக்கள் வெளியேற்றத்தை இனச் சுத்திகரிப்பு எனச் சொன்னமை தொடர்பில் எதிர்வினை ஆற்றியிருக்கிறார்கள். 10 விடயங்களை முன்னிறுத்தியிருந்தேன் ஒன்றை மாத்திரம் எடுத்து பெரும்பாலானோர் பேசி இருக்கிறார்கள். எனது பதில்: (முழுமையாக பதற்றப்படாமல் வாசிக்கவும்)

1. அனைத்து முஸ்லிம் மக்களையும் வெளியேறச் சொன்ன வரலாற்றுத் தவறை தான் நான் சுத்திகரிப்பு என்கிறேன். இதிலே எனக்கு உள்பெட்டியில் வந்த முக்கிய எதிர்வினை முஸ்லிம் மக்களை அழிக்கும் நோக்கோடு வெளியேற்றவில்லை, ஓர் இராணுவ உத்தி சார் நோக்கில் செய்யப்பட்டதை சுத்திகரிப்பு என்று சொல்வது பிழை என நான் அதிகம் மதிக்கும் செயற்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

எனது பதில்: இதில் நோக்கத்தின் பின்னால் நாங்கள் ஒளிந்து கொள்ள முடியாது. இனச் சுத்திகரிப்பு என்ற சொற்பாவனை ஒரு சட்டப் பதமல்ல. It is not a legal term. அனைத்து முஸ்லிம் மக்களையும் வெளியேற்றியது தவறு தான். வெளியேற்றப்பட்டவர்கள் அந்த அனுபவத்தை 'இனச் சுத்திகரிப்பு' என்று சொல்லும் போது நாம் அதற்கு செவி கொடுத்துத் தான் ஆக வேண்டும். ஒடுக்கப்பட்ட சமூகமொன்றின் வாழ்வனுபவங்களை (lived experiences) நாம் மதிப்பது முக்கியம். பிறந்த மண்ணில் இருந்து வெளியேறி இடம்பெயர் வாழ்வின் வழி வந்த இந்த வெளிப்படுதலை நாம் மறுதலிக்க முடியாது. முஸ்லிம் அரசியல்வாதிகள் இனச் சுத்திகரிப்பு என்று சொல்வதானால் நான் அதனை சொல்லவில்லை. (அவர்களில் எவர் மீதும் எனக்கு துளியும் மரியாதை இல்லை என்பதை நிலைத்தகவலில் வெளிப்படுத்தி இருக்கிறேன்). குறிப்பாக இது தொடர்பில் நியமிக்கப்பட்ட Citizens Committee அறிக்கையின் அடிப்படையில் இம்முடிவுக்கு வருகிறேன்.

2. வெளியேற்றியமைக்கான குற்றத்தை தமிழர் தலையில் பொது மைப்படுத்துகின்றேனா என ஒரு தம்பி கேட்டுள்ளார். ஆம். ஆயுதப் போராட்டத்தையும் அதில் விடுதலைப் புலிகளின் முக்கிய வகிபாகத்தையும் ஏற்றுக் கொண்டவன் நான். ஆகவே அவர்களின் பிழை சமூகத்தின் பிழையே. அதற்கு நாம் எல்லோரும் சேர்ந்தே பதில் சொல்ல வேண்டும் என்று கருதுகிறேன். ஏற்க மறுப்பதும் புலி நீக்க அரசியல்தான்.

3. ஆயுதப் போராட்டத்தின் பல்வேறு தடங்களில் இடம்பெற்ற தவறுகளை ஏற்றுக் கொள்வது ஒரு போதும் அந்த ஆயுதப் போராட்டத்தை வலுவிழக்கச் செய்யாது. அது போராட்டத்தின் அற அடிப்படைகளை பலப்படுத்தும். பிழையே இடம்பெறாத ஓர் ஆயுதப் போராட்ட இயக்க வரலாறு உண்டா? தோழர் சண்முகதாசன் சொன்னது போல போராட்டத்தின் பக்கம் நின்று கொண்டு அதனை விமர்சிப்பது கடினமான, ஆனால் செய்யப்பட வேண்டிய பணியாகும். இயக்கம் 1990இல் தாம் செய்தது தவறு என பின்னர் ஏற்றுக்கொண்டார்கள். அதனை நான் நன்கறிவேன். நான் சொல்ல வந்தது என்னவென்றால் 1990 நடந்தவற்றால் இரு சமூகங்களுக்குமிடையேயான உறவில் ஏற்பட்ட விரிசல் இரு சமூகத்திற்கும் இடையே நீங்காத இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது என்பது தான். (10 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

சந்திராஷ்டம நாள் – விசாகம் 4ஆம் பாதம், அனுசம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

25.03.2018
31.03.2018

கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)

2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் பங்குனித் திங்கள் 11 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை அஷ்டமித்திதி காலை 8.02 மணி வரை. அதன் மேல் நவமி பி.இ. 5.54 மணி வரை பின்னர் தசமி. நட்சத்திரம் திருவாதிரை. பகல் 2.20 மணி வரை பின்னர் புனர்பூசம். சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 4.49 மணி முதல் 6.19 மணி வரை

**சுபநேரம்** - காலை 9.11 மணி முதல் 10.41 மணி வரை

இன்று ஸ்ரீ ராம நவமி.

**திவசம் செய்ய வேண்டிய திதி**- பங்குனி மாத வளர்பிறை நவமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- திருவாதிரை.

## மேஷம்:

சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். பண விஷயத்தில் அதிக கவனமும் எச்சரிக்கையும் தேவை. சிறுசிறு கடன்கள் தலை தூக்கும். ஆனால், சாமர்த்தியமாக அவைகள் சமாளிக்கப்படும். வியாபாரிகள் ஒரு சமயம் லாபமும், நட்டமும் கலந்தபடி வருமானம் பெறுவார்கள். அரசாங்கம் மூலம் சிறுசிறு தொல்லைகள் தலைகாட்டலாம். உத்தியோகத்தர்கள் தங்கள் மேலதிகாரிகளுடன் சுமுகமாக நடந்து கொண்டால் சங்கடங்களிலிருந்து தப்பலாம்.

## ரிஷபம்:

இனிமையான வாரம். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். மனைவி வழி சொந்தங்களால் எதிர்பாராத நன்மைகளும், உதவியும் பெற சாத்தியக்கூறுகள் உள்ளன. நீண்ட காலமாக தொல்லை தந்த ஒருவர் விலகிச் செல்ல வாய்ப்புண்டு. பெண்கள் குடும்பத்தில் உற்சாகமாகவும், சுறுசுறுப்புடனும் காணப்படுவார்கள். பிள்ளைகளுக்கு புது அணிமணிகள் வாங்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். மாணவர்கள் தேர்வில் சிறந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள்.

## மிதுனம்:

அதிஷ்டமான வாரம். பணபலம் அதிகரிக்கும். குடும்ப உறவில் அன்னியோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும். சிலருக்கு அரசு வழியால் வீடு, காணி என்பன கிடைக்கும். போட்டி, பந்தயங்களில் வெற்றி உண்டாகும். பெண்களுக்கு திருமண காரியங்கள் சுபமாய் ஒப்பேறும். மாணவர்களுக்கு அரசு வழியால் இலவசக் கல்வி பயிலும் வாய்ப்புக் கிடைக்கும். பூர்வீக சொத்துக்கள் வந்து சேரும். சிலருக்கு வெளிநாட்டு உறவினர்களிடமிருந்து விலை உயர்ந்த பொருள்கள் பரிசாகக் கிடைக்கும்.

## கடகம்:

கவலையான வாரம் பணம் பற்றாக் குறையாக இருக்கும். வீடு, காணி சம்பந்தமான விஷயங்களிலும், கொடுக்கல் வாங்கலிலும் கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகத்தர்கள் வேலை நிமித்தம் வெளியூர்களுக்கும் அலைய நேரிடலாம். பண விஷயங்களில் எச்சரிக்கை அவசியம். வேலையில் கடுமையான முயற்சிகள் தேவைப்படும். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வதால் மன உணர்ச்சிகளைத் தவிர்க்கலாம். தொழிலாளர்கள் சிறுசிறு தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும்.

## சிம்மம்:

எழுச்சியான வாரம். பணவரவு திருப்தியைத் தரும். குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். வியாபாரிகளுக்கு அழகுப் பொருள்களும் நாகரிகப் பொருள்களும் அதிகம் விற்பனையாகும். குடும்பத்தில் புதிய நவீனப் பொருள்கள் வாங்குவார்கள். உத்தியோகம் செய்யும் பெண்களுக்கு மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபீட்சமும், சகல சௌபாக்கியமும் பெருகும். சகோதர வழியால்நன்மைகள் உண்டாகும்.

## கன்னி:

மத்திமமான வாரம். வரவும் செலவும் சமமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் இருந்தாலும், தொல்லைகளும் அவ்வப்போது தலைதூக்கும். உடலில் ரோகங்கள் உண்டாகி மருத்துவச் செலவுகளுக்கு வழி வகுக்கும். எண்ணிய காரியங்கள் தடை, தாமதமாகும். வியாபாரத்தில் சுமாரான முன்னேற்றம் காணப்படும். தொழிலில் கடின உழைப்பும், அலைச்சல்களும் அதிகமாகும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை. பயணத்தின்போது உடைமைப் பொருள்களில் அவதானம் தேவை.

## துலாம்:

உயர்வான வாரம். வருமானம் உயர்வடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். அநேக நன்மைகள் தேடி வரும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டாகும். சகோதர உறவு பலப்படும். உத்தியோகத்தில் உயர்வும், வசதியான இடமாற்றமும் கிடைக்கும். குடும்பத்தில் சில முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு வாய்ப்புண்டாகும். சிலருக்கு ஆலய தரிசனமும், மகான்களின் தரிசனமும் கிடைக்கும். புதிய ஆடை, அணிமணிகள் சேரும்.

## விருச்சிகம்:

சஞ்சலமான வாரம். பண விஷயங்களில் சிறிது கவனம் செலுத்துவது அவசியம். கடன் வாங்கியவர்கள் எச்சரிக்கையாக இருப்பது தொல்லைகளைத் தவிர்க்க உதவும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும். உடலில் ரோகங்கள் உண்டாகி மருத்துவச் செலவுகள் உண்டாகும். பெண்கள் விட்டுக் கொடுத்துப் பழகுவதன் மூலம் சிறுசிறு சலசலப்புக்களைச் சமாளிக்க முடியும். உத்தியோகத்தர்கள் அலுவலக ரீதியாக நன்மைகள் எதையும் பெறும் வாய்ப்புகள் குறையும்.

## தனுசு:

மத்திமமான வாரம். பொருளாதாரம் சுமாராக இருக்கும். குடும்ப அமைதி பேணப்படும். உத்தியோகத்தர்கள் வேலைகளில் கவனமாக இருப்பது தொல்லைகளைத் தவிர்க்கும். வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் சுமுகமாக நடந்து கொள்வதனால் வியாபாரம் தடைப்படாது நடைபெறும். வேலைகளில் கவனம் செலுத்தா விட்டால் தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும். திருமணமாகாதவர்களுக்கு அதற்கான முயற்சிகள் அதிக பிரயாசையின் மேல் மங்கல காரியங்கள் பலிதமாகும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

## மகரம்:

மேன்மையான வாரம். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் திருமணம் சம்பந்தமான சுப நிகழ்ச்சி நடந்தும் பேச்சுக்கள் வெற்றி பெறும். விருந்து, கேளிக்கைகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்தில் கௌரவம், பாராட்டு போன்றவைகள் நிகழலாம். சிலருக்கு பதவி உயர்வு, இடமாற்றம் ஆகியவைகளும் இருக்கும். வியாபாரிகள் மங்கலகரமான பொருள்களை வியாபாரம் செய்து பயனடைவார்கள். தொழிலாளர்கள் படிப்படியாக வளர்ச்சியைப் பெறுவார்கள்.

## கும்பம்:

நன்மையான வாரம். பணவரவு அதிகரிக்கும். தந்தை வழி உறவுகளால் எதிர்பாராத சிறுசிறு ஆதாயமேற்படும். உத்தியோகத்தர்கள் இதுவரை அனுபவித்த தொல்லைகளிலிருந்து விடுபட்டுப் பதவி உயர்வும், பொருளாதார மேம்பாடும் ஏற்படும். மேலதிகாரிகளின் அனுசரிப்பும், சுப பணியாளர்களின் அரவணைப்பும் புதிய தெம்பைத் தரும். குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும். புதிய ஆடைகளும் அணிமணிகளும் சேரும். பெண்களின் ஆசைகள் நிறைவேறும்.

## மீனம்:

துன்பமான வாரம். வருமானம் குறையும். குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். உடல், உளநலம் பாதிப்படையும். எண்ணியவை கைகூடாமற் போகும். பணம் கொடுக்கல், வாங்கலில் சிக்கல் ஏற்படும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிப்பால் வருமானம் குறையும். உறவினர்கள், நண்பர்கள் பாராமுகமாக நடந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். திருமண காரியங்கள் இழுபறி நிலையில் இருக்கும். கொடுக்கல், வாங்கல் பிணக்குகள் உண்டாகும்.

காலைக்கதிர்
Kalaikkathir



# வங்கதேசத்தில் கொடுமை

# மனித ஓநாய்களின் இச்சைக்கு இலக்காகும்

# ரோஹிங்ய பெண்கள்

*கா . புவனேஸ்வரி*

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் ராணுவத்துக்கும் இடையே நடந்த தாக்குதல்கள், மோதல்களில் லட்சக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கான பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டனர். இந்த நிலையில் போர் முடிந்து அகதிகளாகத் தஞ்சம் அடைந்த தமிழ்ப் பெண்களை சிலர் பாலியல் தொழிலுக்கு உட்படுத்தினர் என்ற அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகி இருந்தது. அப்படியான கொடுமைக்கு தற்போது ரோஹிங் கியா இஸ்லாமியர்களும் தள்ளப்பட் டுள்ளனர்.

ரோஹிங்கியா இஸ்லாமியர்களுக்கும், மியன்மாரில் உள்ள பௌத்த மதத்தைச்சேர்ந்தவர்களுக்கும் இடையே கலவரம் வெடித்தது. இதில் ஆயிரக் கணக்கான மக் கள் கொல்லப்பட்டனர்.

இந்தக் கலவரத்தைக் கட்டுப் படுத்தாமல் மியன்மார் அரசு பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆதரவு அளிப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இந்த விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் தனது கண்டனத்தை வெளியிட்டது.

அதனைத் தொடர்ந்தே ரோஹிங்யா இஸ்லாமியர் கள் மீதான தாக்குதல் குறைந்தது. இந் தக் கலவரத்தால் சுமார் 70 லட்சம் பேர் பாதிக்கப்பட்டனர் எனத் தகவல்கள் வெளியாகின. இதையடுத்து, இருக்க இடமில்லாமல் லட்சக்கணக்கானோர் வங்கதேசத்தில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்தனர்.

**“இங்கே என்ன நடக்கிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நானும் கடத்தல்காரர்கள் வசம் சிக்கிக் கொண்டவள் தான். என் சகோதரனோடு பட்டாம்பூச்சி போன்று விளையாடிக்கொண் டிருந்தேன். வேலை வாங்கித் தருவதாக அழைத்துச் சென்றவர்கள் என்னைப் பலமுறை பாலியல் வன்கொடுமை செய்தனர். அதனைத் தொடர்ந்து இந்தத் தொழிலையே செய்துவருகிறேன். இங்கு பிழைக்க வழியில்லை. இதைச் செய்ய எனக்கு விருப்பமில்லைதான். ஆனால், என் குடும்ப உறுப்பினர்கள் பொரு ளாதார ரீதியா கப்படும் துயரங்களைக் காண முடியாமல் மீண்டும் இந்த அசிங்கத்தையே செய்து கொண் டிருக்கிறேன்.”**

அப்படித் தஞ்சம் அடைந்து முகாம்களில் வசித்துவரும் பெண்களைக் கடத்தல்காரர்கள் வலையமைப்பு அமைத்து, பாலியல் தொழிலுக்கு வலுக்கட்டாயமாக உட்படுத்துகின்றனர் என்ற அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகி உள்ளது.



**ரோஹிங்கியா அகதிகள்**

இது தொடர்பாக ஆங்கிலத் தொலைக்காட்சி ஒன்று, திரைமறைவில் துப்புத் துலக்கி அதன் காட்சிகளையும் பாதிப்புக்குள்ளான பெண்களின் வாக்குமூலத்தையும் நேரடியாகக் களத்துக்குச் சென்று பதிவு செய்துள்ளது. வங்கதேசத்தில் அகதிகளாகத் தங்கியுள்ள ரோஹிங்கியா இஸ்லாமியர்களுக்கு மியன்மாரின் நடவடிக்கை அச்சுறுத்தலாக உள்ள நிலையில், தற்போது புதிய தாக்குதலுக்கு அங்குள்ள பெண்கள் தள்ளப்பட்டுள்ள அவல நிலையும் ஏற்பட்டுள்ளது. குறிப்பாகப் பெண் குழந்தைகள் அதிகமாகப் பாலியல் தொழிலுக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகி உள்ளது. அதில், அன்வாரா என்ற 14 வயது சிறுமியின் பெற்றோர்கள் கலவரத்தில் இறந்துவிட, அந்தச் சிறுமி தனித்துவிடப்பட்டிருக்கிறாள்.

ஒருநாள், அவள் வங்கதேச சாலையில் உதவி கேட்டு அலைந்து கொண்டிருந்தபோது... அவளைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தும் பெண் ஒருவர், ‘உனக்கு நல்ல வாழ்க்கை அமைத்துத் தருகிறேன்’ என்று கூறி காக்ஸ் பாஜார் நகரத்துக்கு அழைத்துச் செல்கிறார். அங்கு அந்தச் சிறுமியை இரண்டு இளைஞர்களிடம் விற்றுள்ளார்.

சிறுமியைப் பணம் கொடுத்து வாங்கிய அந்த இரண்டு இளைஞர்களும் கத்தி முனையில் அவளைப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். இது தொடர்பாக சிறுமி பேசுகையில், ‘பாலியல் வன்புணர்வுக்கு நான் ஒத்துழைக்க மறுத்தபோது அவர்கள் என்னைச் சரமாரியாக அடித்தனர். கத்தியைக் கழுத்தில் வைத்து பாலியல் வன்கொடுமை செய்தனர். இப்படியான மோசமான நிலையில் முகாம் உள்ளது’ என்று தெரிவித்துள்ளார்.



இப்படி அங்கொன்றும், இங்கொன்றுமாக நடந்த பாலியல் தொழில் தற்போது முகாமுக்கு அருகிலேயே பெண்களும், சிறுமிகளும் பாலியல் தொழிலுக்கு விற்கப்படுகின்றனர் என்று பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் கூறுகின்றனர். ஹோட்டல்வேலை, வீட்டுவேலை என்று சொல்லி அழைத்துச் சென்று பாலியல் தொழிலுக்கு விற்றுவிடுகின்றனர் என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

**ரோஹிங்கியா**

பாதிக்கப்பட்ட மற்றொரு பெண் இதுதொடர்பாகப் பேசுகையில், “இங்கே என்ன நடக்கிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நானும் கடத்தல்காரர்கள் வசம் சிக்கிக்கொண்டவள் தான். என் சகோதரனோடு பட்டாம்பூச்சி போன்று விளையாடிக்கொண்டிருந்தேன். வேலை வாங்கித் தருவதாக அழைத்துச் சென்றவர்கள் என்னைப் பலமுறை பாலியல் வன்கொடுமை செய்தனர்.

அதனைத் தொடர்ந்து இந்தத் தொழிலையே செய்துவருகிறேன். இங்கு பிழைக்க வழியில்லை. இதைச் செய்ய எனக்கு விருப்பமில்லைதான். ஆனால், என் குடும்ப உறுப்பினர்கள் பொருளாதார ரீதியாகப் படும் துயரங்களைக் காண முடியாமல் மீண்டும் இந்த அசிங்கத் தையே செய்துகொண்டிருக்கிறேன். இங் குள்ள பெரும்பாலான பெண்களும் சிறுமிகளும் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். யாருமே அவர்களாக விரும்பிச் செய்யவில்லை. இப்போது எல்லாம் எப்படி விளையாடினேன் என்பதுகூட மறந்துபோய்விட்டது” என்று கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார்.

இந்த அவலத்தை ஆங்கில ஊடகம் ஒன்று களத்துக்குச் சென்று நேரடியாகப் பதிவு செய்துள்ளது. அந்த ஊடகம் நேரடியாகக் கடத்தல்காரர்களிடம் சென்று பெண்கள் மற்றும் சிறுமிகளை விலைக்குக் கேட்டு வாங்கியது போன்ற ஸ்டிங்



ஒப்பரேஷனை (sting operation) நடத்தியது. இந்த ஒப்பரேஷனின்போது பொலிஸாரையும் அழைத்துச் சென்ற அந்த ஊடகம், அவ்வாறு நடந்துகொண்ட கடத்தல்காரர்களையும் கையுடன் பிடித்



துக்கொடுத்துள்ளது. இது தொடர்பான sting vedio-வையும் அந்த ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ளது.

அந்தப் பகுதியில் பொலிஸாரின் கண்காணிப்புத் தீவிரமடைந்திருந்தாலும், அதையெல்லாம் மீறி வங்கதேசத்தில் உள்ள காக்ஸ் பாஜார், பாலியல் தொழிற்சாலையாக மாறியுள்ளது. மேலும், இந் தி.டு களுக்கும் இங்கிருந்து பெண்கள் மற் றும் சிறுமிகள் விற்கப்படுகின்றனர் என அதிர்ச்சியூட்டுகிறது அந்த ஊடகம்!

★



# விலங்குகளை வேட்டையாடி சுகபோகம் தேடும் நயவஞ்சகர்கள்!

யானைத் தந்தம், காண்டா மிருக கொம்பு, புலித்தோல், எறும்புத்தின்னி, குரங்கு, பாம்பு, தேவாங்கு, கரடி என ஒவ்வொரு உயிரினத்தையும் ஒரு காரணத்திற்காக கடத்துகிறார்கள். பணத்தின் பின்னணியில் சட்டவிரோதமாகச் செய்கின்ற முக்கியச் செயல்களில் ஒன்று விலங்கு கடத்தல். விலங்குகள் கடத்தலில் பொலிஸாரிடம் சிக்காமல் இருக்கிற விலங்குகளும், உறுப்புகளும் என்னவாகின்றன என்பது குறித்து அதிகம் பேசியிருக்கிறோம். ஆனால் பொலிஸார் பறிமுதல் செய்கிற விலங்குகள் என்னவாகின்றன?

பொதுவாகக் கைப்பற்றப்படும் விலங்குகளின் உடல் உறுப்புகள் எல்லாம் தீயிட்டு கொளுத்தி விடுகிறார்கள். யானைத்தந்தம் மற்றும் காண்டாமிருக கொம்புகள் உலகளவில் பெறுமதிமிக்க பொருள்க ளாக இருக்கின்றமையால் அரச அதிகாரிகள் அவற்றைச் சேகரித்து வைத்து மொத்தமாக எரித்து விடுகிறார்கள். 2017, ஜூலை மாதம் 7 ஆம் திகதி மலேசியா விலிருந்து ஹொங்கொங் துறைமுகத்திற்கு வந்த கப்பலில் ஒரு கொள்கலனை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அதில் சுமார் 7.2 தொன் எடையுள்ள யானைத் தந்தங்கள் அதில் கடத்தி வரப்பட்டிருந்தமை தெரியவந்தது. இந்த யானைத் தந்தங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதன் சர்வதேச மதிப்பு சுமார் 60 கோடி இந்திய ரூபாயாகும். உலகிலேயே ஒரே இடத்தில் இவ்வளவு தந்தங்கள் கைப்பற்றப்பட்டிருந்தமை இதுதான் முதல் முறை. பறிமுதல் செய்யப்பட்ட மொத்த தந்தங்களும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.



முதன்முதலில் 1989-ம் ஆண்டு அப் போதைய கென்யா அதிபர் டேனியல் அரப் பொதுமக்கள் முன்னிலையில் தந்தங்களுக்கு தீவைத்தார். 2010 ஆம் ஆண்டிலிருந்து கென்யாவிற்கு கடத்தி வரப்பட்ட 5 தொன் எடையுடைய தந்தங்களை கென்ய அரசு பறிமுதல் செய்தது. பல்வேறு இடங்களில் பறிமுதல் செய்தமொத்த தந்தங்களையும் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாதுகாத்து வந்தனர். 2011, ஜூலை 21 ஆம் திகதி சுமார் 5 தொன் எடையுடைய அத்தனை தந்தங்களையும் ஒரே இடத் தில் வைத்து, கென்யா அதிபர் மிவாய் கிபாகி தீவைத்துக் கொளுத்தினார்.

அதற்குப் பிறகு 2016, ஏப்ரல் 30 ஆம் திகதி தற்போதைய கென்யா அதிபர் உஹுரு கென்யாட்டா 105 தொன் யானைத் தந்தங்களையும் ஒரு தொன் காண்டாமிருககொம்புகளையும்தீயிட்டுகொளுத்தினார். சுமார் பதினொருமலை குவியல்களாக குவிக்கப்பட்ட 105 தொன் தந்தங்களுக்கு பின்னால் 8000 யானைகள் கொல்லப்பட்டிருக்கின்றமையை அறிந்த உலக நாடுகள் எல்லாம் மிகப் பெரிய அதிர்வைஉணர்ந்தன. அனைத்துவிலங்குகள் கடத்தலுக்கு பின்னாலும் இருக்கிற சீன அரசு 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் யானைத் தந்தத்திற்கு தடை விதித்தது. நேபாள அரசு விலங்கு கடத்தலில் பறிமுதல் செய்த புலி தோல், தந்தம், காண்டாமிருக கொம்பு பொருட்களையெல்லாம் கடந்த இருபது ஆண்டுகளாக சேமித்து வைத்திருந்தது. அவற்றையெல்லாம் கடந்த 2017 ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி மொத்தமாக தீ வைத்து எரித்தது.

உயிரோடு பிடிபடும் எல்லா விலங்குகளையும் அந்தந்த நாட்டுச் சுங்க அதிகாரிகள், வனத்துறை மற்றும் தேசிய பூங்காக்களின் வசம் ஒப்படைத்து விடுகிறார்கள். தேசிய பூங்காக்களில் விடப்படும் பாதி விலங்குகள் தட்ப வெப்ப நிலை, கால நிலை மாறுதல் ஆகியவற்றால் சமாளிக்க முடியாமல் இறந்து போய் விடுகின்றன. விலங்குகளை உயிரோடு கடத்துவது தான் முக்கிய குறிக்கோள். ஏனெனில் பல விலங்குகள் வீடுகளில் வளர்ப்பதற்காகக் கடத்தப்படுபவை. தேவாங்கு மற்றும் குரங்குகளின் பற்களைப் பிடுங்கியும் கடத்துகிறார்கள். பெரும்பாலும் அட்டைப்பெட்டிகளில் தான் கடத்துகிறார்கள். கடத்தலின் பொழுது காயம்படும் விலங்குகளில் சில பயணத்தின் போதே இறந்து விடுகின்றன. அவற்றை உணவகங்களுக்கு விற்பனை செய்து அதிலும் காசு பார்த்து விடுகிறார்கள்.

பறிமுதல் செய்த விலங்குகளை வைத்து எப்படியெல்லாம் காசு பார்க்கலாம் என நினைக்கின்ற நோய் எல்லா நாடுகளிலுமே இருக்கிறது. 2014 ஆம் ஆண்டு வியட்நாமில் பொலிஸார் நடத்திய வாகன சோதனையில் உயிரோடு இருந்த 42 எறும்புத் தின்னிகளை உயிரோடு கைப்பற்றுகிறார்கள். அவற்றைப் பறிமுதல் செய்த பொலிஸார் காட்டுக்குள் விட முடிவெடுத்து வனத்துறை அதிகாரி ஒருவரின் வசம் ஒப்படைக்கிறார்கள்.

எறும்புத்தின்னியின் சர்வதேச விலை எவ்வளவு என்பது வனத்துறை அதிகாரிக்கு நன்கு தெரிந்திருக்கிறது. மொத்த எறும்புத்தின்னிகளையும் வாங்கிய வனத்துறை அதிகாரி அவற்றைப் பக்கத்திலிருந்த உணவகத்தில் 11,000 அமெரிக்க டொலர்களுக்கு விற்றுவிடுகிறார். இன்றைய திகதியில் கறுப்பு சந்தையில் எறும்புத்தின்னி ஒன்றிற்கு நிர்ணயித்திருக்கின்ற விலை 15,000 அமெரிக்க டொலர்கள்.

மருத்துவத்தைக்காரணமாகவைத்தே உலகின் பல விலங்குகளும் வேட்டையாடப்படுகின்றன.ஒரு நோய் வருவதற்கு அடிப்படை காரணம் என்ன வென்பதை ஆராய்ந்து அதற்குப் பதில் தேடுவதை விடுத்து, அந்த நோய்க்குக் குறிப்பிட்ட விலங்கின் கல்லீரல் தீர்வு என நினைப்பதெல்லாம் எவ்வளவு பெரிய சுயநலம். காடுகளில் இருக்கிற விலங்குகளை வீட்டில் வளர்க்கிறேன் என்று நினைப்பதே குரூர புத்தி என்கிறார்கள் விலங்கு நல மருத்துவர்கள். செல்லப் பிராணிகளாக இருக்கின்ற நாய், பூனை, ஆடு வளர்த்த சமூகம், தேவாங்கு, குரங்கு, ஆமை வளர்க்கிறேன் என மாறிப் போய் சிந்திப்பதே இயற்கைக்கு எதிரான மன நிலை என்கிறார்கள்.

காசு பணம் போதை புகழ் என நிலையில்லாத ஒன்றுக்காக மனிதன் ஓடி ஓடி வேட்டையாடிய மிருகங்களின் இன்றைய நிலை பற்றி என்றேனும் யோசித்திருக்கிறீர்களா? கடந்த ஜனவரி மாதம் பூமா எனும் சிறுத்தை இனம் முற்றிலும் அழிந்துவிட்டதாக உறுதி செய்திருக்கிறார்கள். உலகின் கடைசி வெள்ளை ஆண் காண்டாமிருகம் மிக அண்மையில் இறந்துபோயிருக்கிறது. இரண்டு இனங்களும் முற்றிலும் அழிந்து போனமைக்குப் பின்னால் இருக்கின்ற காரணங்களுள் ஒன்று கடத்தல். எப்போதும் எழுப்புகிற கேள்வியையே இப்போதும் எழுப்ப வேண்டியிருக்கிறது.

எல்லா விலங்குகளையும் ஏதோ ஒரு காரணத்திற்காக அழித்துவிட்டு, மனிதன் யாரோடு இணைந்து வாழப் போகிறான்?

**நன்றி– விகடன்**

# முஸ்லிம்களுக்கு நடந்தது இனச் சுத்திகரிப்பு தமிழர்களுக்கு நடந்தது இனப்படுகொலை

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எம்மால் 1983 ஐயோ முள்ளிவாய்க்காலையோ மறக்க முடியாது. அவர்களையும் மறக்கச் சொல்லி கேட்க முடியாது. ஆகவே எமது பிழையை ஞாபகப்படுத்துவது குறிப்பாக முஸ்லிம் மக்களோடு தோழமை பாராட்டத் தேவையில்லை என கருத்து தெரிவிக்கப்படும் சூழலில் ஞாபகப் படுத்துவது அவசியமானதே.

4. அவர்கள் எமக்கு நடந்தது இனப்படுகொலை எனக் கூறுவதில்லை என்பதால் நாம் அதனை இனச் சுத்திகரிப்பு எனக் கூறத்தேவையில்லை என்று கூறுவது சிறு பிள்ளை மனநிலை, முஸ்லிம் மக்களின் பெயரில் செய்யப்படும், செய்யப்பட்ட அநியாயங்களை நான் மறந்து பேசுகிறேன் என்போர் மேலே எனது நிலைத்தகவலை மீள வாசிக்கவும். நான் வன்னியிலும் கிழக்கிலும் நடப்பவற்றை நன்கறிவேன். புத்தகங்களுக்கு அப்பாலும் இந்தப் பூச்சிக்கு கொஞ்சம் உலகம் தெரியும். ஆனால் 'நல்லா வேண்டும் இவங்களுக்கு' என்ற குரோத மனநிலையில் என்னால் செயற்பட முடியாது.

5. தனிப்பட்ட அவதூறுகளுக்கு பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை. ஆனால் கடந்த 13 ஆண்டுகளில் நான் தெற்கில் போதுமானளவு புலிப்பட்டத்தை தாங்கி விட்டேன். அதனை பெருமையாகச் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே தாராளமாக வசை பாடுங்கள். நான் கருத்தால் நகரும் போது மட்டுமே நகர்வேன்.

6. என்னை சுமந்திரன் சேரோடு ஒப்பிடுகிறார் ஒரு நண்பர். 2013யிலேயே திரு. சுமந்திரன் 'இனச்சுத்திகரிப்புதான்' எனக் கூறிய போது, 'நல்லது. ஏற்கிறேன். தமிழருக்கு நடந்தது இனப்படுகொலை தான்' என்பதை ஏற்பீர்களா? எனக் கேட்டு பதிவிட்டேன்.

திரு. சுமந்திரன் அவர்களின் அரசியலை காய்தல், உவர்த்தல் இன்றி விமர்சிப்பத்தில் கடந்த 8 ஆண்டுகளில் முன்னிலையில் இருந்துள்ளேன். கடுமையாக மோதியுள்ளேன். தெரியாதவர்கள் google பண்ணி பார்க்கவும். சரி என்றால் சரி என்பேன். பிழை என்றால் பிழை என்பேன். அது தான் நான். சுமந்திரன் சேரின் அரசியலை விமர்சிப்பதால் நான் கொழும்பு வட்டாங்களில் தீவிர தமிழ்த்தேசியவாதியாகச் சித்திரிக்கப்பட்டு ஒதுக்கப்படுகிறேன். அதைப் பற்றி எனக்கு கவலை இல்லை.

'இனப்படுகொலை'க்கு விசாரணை கேட்கக் கூடாது என சுமந்திரன்சேரும் அணியும் சொல்ல முன்னிலையில் நின்று எதிர்வினை செய்தேன். இதை எல்லாம் சொல்லி நான் நல்லவன்தான் என்று பெயர் வாங்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் சில பின்னூட்டாளர்களின் அவசர புத்தியில் வந்த ஒப்பீடு ஆத்திரத்தை ஏற்படுத்துகின்றது. யோசித்துப்பேசுங்கள். இதெல்லாம் பெருமைக்காக சொல்லவில்லை. உங்களின் 'ஒன்று நீங்கள் என்னோடு அல்லது சுமந்திரனோடு' என்ற மனநிலையில் உள்ள வக்கிரத்தைச் சுட்டிக் காட்டவே சொல்கிறேன்.

சுமந்திரன் சேர் தமிழ் தேசிய அரசியலை வலுக் குன்றச் செய்யும் நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, ஆயுதப் போராட்டத்தை ஏற்காத அரசியல் மன நிலையில் 'இனச் சத்திகரிப்பு' என்று சொல்வதும் என்னை போன்றோர் அதனை இனச் சுத்திகரிப்பு என்று சொல்வதற்கும் மலையளவு வித்தியாசம் உண்டு.

7. இன்னுமோர் நண்பர் முஸ்லிம்களின் நன்மைக்காக தான் அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள் என்று சொல்வதெல்லாம் மிகவும் வேதனையை அளிக்கும் மனநிலைகள்.

முஸ்லிம் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் தமிழருக்கு நடந்த அநீதிகள் தொடர்பில் அமைதி காத்தனர். சிலர் வெடி கூட கொளுத்தினர். ஆனால் நாங்கள் அப்படியானவர்கள் அல்லர் என நம்புகிறேன். We are and should always strive to be better. அப்படி இல்லாதவர்கள் முஸ்லிம்களுக்கு நடக்கும் அநீதி தொடர்பில் 'நல்லா வேணும் இவங்களுக்கு' என இருங்கள். வெடியும் போடுங்கள். தமிழ் தேசிய அரசியலாக உங்கள் நடவடிக்கையை/மௌனத்தை நீங்கள் நியாயப்படுத்தினால் நிச்சயம் எதிர்வினை ஆற்றுவேன்.

09 மார்ச் முகப்புத்தகத்தில் இட்ட பின்னூட்டம்:

வெளியேற்றம் தவறு என ஏற்றுக்கொள் கிறோம் ஆனால் 'இனச்சுத்திகரிப்பு' என்று அதனை வரையறுப்பது தவறு எனக் கூறுவோரின் வாதத்தில் உள்ள நியாயங்களை விளங்கிக் கொள்கிறேன். I think it is possible to be reasonably pluralist on this issue. வெளியேற்றம் தவறே அல்ல எனக் கூறுவோரிடம் எனக்கு சொல்ல வேறொன்றும் இல்லை. எனவே இனச் சுத்திகரிப்பு என்று ஏற்றுக்கொண்டால் தான் இனப் படுகொலை என்று சொல்ல யோக்கிதை எமக்குள்ளது என்று நிபந்தனை விதிப்பது முறையல்ல என ஏற்றுக் கொள்கிறேன். ★

# சீன நாட்டின் கழுகுப் பிடியில் தெற்கு துறைமுகம்

ஆங்கிலத்தில் - YUJI KURONUMA
வழிமூலம் - Nikkei Asian Review
**மொழியாக்கம் - நித்தியபாரதி**




இலங்கையின் தெற்கிலுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகம் ஆள்கள் நடமாட்டமில்லாத பாலைவனமாகக் காட்சியளிக்கின்றது. கடந்த மாத நடுப்பகுதியில் ஒரு நாள் பிற்பகல் இதன் வாயிலிலுள்ள தேநீர்ச்சாலையில் நின்றபோது ஒரு சில வாகனங்களை மட்டுமே காண முடிந்தது.

முன்னர் பிற்பகலில் 10-15 வரையானவர்கள் தேநீர் அருந்துவதற்காக இங்கு வருவது வழக்கம். ஆனால் கடந்த டிசெம்பர் மாதம் இலங்கை அரசால் இத்துறைமுகம் சீனாவிற்கு விற்கப்பட்டதை அடுத்து இங்கு எவரும் வருவதில்லை என தேநீர்ச்சாலையின் உரிமையாளரான வில்சன் தெரிவித்தார்.

இத்தேநீர்ச்சாலை இலங்கை, அதாவது சிலோன், பிரித்தானிய கொலனித்துவத்திலிருந்து சுதந்திரமடைவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 1946இல் நிறுவப்பட்டது.

எனது தந்தையார் இத்தேநீர்ச்சாலையை 1946இல் திறந்தார். ஆனால் தற்போது இத்துறைமுகத்தை இலங்கை அரசாங்கம் சீனாவிற்கு விற்பதற்குத் தீர்மானித்ததன் பின்னர் நாங்களும் எமது தேநீர்ச்சாலையை விற்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது என தேநீர்ச்சாலையின் உரிமையாளர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் சீனாவிடமிருந்து நிதியைப் பெற்று அமைக்கப்பட்ட அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் எதிர்பார்த்தளவு செயற்பாடுகள் இடம்பெறவில்லை. இதனால் இதனைப் பராமரிப்பதென்பது மிகவும் கடினமாக உள்ளது.

99 ஆண்டுகால குத்தகையின் கீழ் சீன அரசின் China Merchants PortHoldin நிறுவனத்திடம் இத்துறைமுகம் ஒப்படைக்கப்பட்ட பின்னரும் கூட தற்போதும் மிகச் சொற்பமான சரக்குகளே இத்துறைமுகத்தின் ஊடாக கொண்டு செல்லப்படுகின்றன என உள்ளூர்வாசிகள் கூறுகின்றனர்.

**கடற்படைத்தளம் நிறுவும் வாய்ப்பு**

சீனாவின் நோக்கம் என்ன? கடந்த கோடை காலப்பகுதியில் தென் ஆபிரிக்க நாடான டிஜிபோட்டியில் சீனா தனது முதலாவது வெளிநாட்டு கடற்படைத் தளத்தை நிறுவிய பின்னர், அம்பாந்தோட்டையிலும் பிறிதொரு கடற்படைத் தளத்தை நிறுவுவது தொடர்பாக சீனா ஆராய்கிறதா?

நிக்கி ஊடக செய்தியாளர் ஒருவர் அம்பாந்தோட்டை துறைமுக முகாமைத்துவ அலுவலகத்திற்கு நேரில் சென்று நேர்காணலை மேற்கொள்வதற்கான அனுமதியைக் கோரியிருந்தார். சீன அதிகாரிகளின் பெயர்ப் பட்டியலை வைத்திருந்த அந்த அலுவலகத்தின் வரவேற்பாளர் தொலைபேசி மூலம் தனது மேலதிகாரி ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்தி நேர்காணல் விடயம் தொடர்பாக கதைத்த பின்னர் வெறும் 10 செக்கனில் இக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இந்த அலுவலகத்தின் மேலதிகாரி விரைந்து அங்கு வந்ததுடன் முன் வாயிலின் ஊடாக எவ்வாறு இந்த ஊடகவியலாளர் உள்நுழைந்தார் என்பதையும் அறிந்து கொண்டார்.

உள்ளூர் மக்களோ அல்லது ராஜபக்ஷ கூட உள்ளே வருவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என அந்த மேலதிகாரி தெரிவித்திருந்தார்.

**எச்சரிக்கையுடன் இந்தியா**

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவிடம் கையளித்ததன் பின்னர் இந்தியா இது தொடர்பில் மிகவும் எச்சரிக்கையுடன் உள்ளது. இந்த விடயமானது இப்பிராந்தியத்தின் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்குவதாகவே நாங்கள் நோக்குகிறோம். எமது இலங்கை நண்பர்கள் எமது பாதுகாப்பு மற்றும் எமது உணர்வுகள் தொடர்பாக நினைவில் வைத்துக் கொள்வார்கள் என நாம் எதிர்பார்க்கிறோம் என இந்திய வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் ரவீஸ்குமார் தெரிவித்தார்.

ஆனால் இலங்கை மீதான சீனாவின் கடன் சுமையானது சீனா தனது விருப்பம் போல் இந் நாட்டில் செயற்படும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இத்துறைமுகம் மீதான மேலதிக பிராந்திய உரிமையை சீனா தனதாக்கிக் கொள்வதற்கும் வழிவகுத்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் கடன் சுமையானது இதன் மொத்தத் தேசிய உற்பத்தியின் 81.6 சதவீதமாகும் என கடந்த ஜனவரியில் வெளியிடப்பட்ட அனைத்துலக நாணய நிதியத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2017இன் இறுதியில் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மொத்தத் தேசிய உற்பத்தியின் 58.2 சதவீதமாகும்.

இலங்கையால் சீனாவிற்கு 800 கோடி டொலர் நிதி கடனாக வழங்கப்பட வேண்டும். 2015இல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, சீனாவிற்கு ஆதரவான ராஜபக்ஷவிடமிருந்து பெரும் கடன் சுமையைப் பொறுப்பேற்றனர்.

அதற்கு அடுத்த ஆண்டு அதாவது 2016இல், விரிவுபடுத்தப்பட்ட நிதி வசதியின் கீழ் அனைத்துலக நாணய நிதியத்தால் நிதியுதவியாக மூன்று ஆண்டு கால சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக 150கோடி ரூபா நிதியுதவியை இலங்கை பெற்றிருந்தது.

வருமானம் குறைவாக இருப்பினும், இலங்கை அரசாங்கம் நிதி விடயத்தில் சிறந்த நடைமுறையைக் கடைப்பிடிக்க முற்பட்ட போதிலும் அனைத்துலக நாணய நிதியத்தின் நிதியுதவி சீனாவின் கையை மட் டுமே பலப்படுத்துவதாகத் தோன்றுகிறது.

**விற்பதே ஒரே வழி**

இவ்வாறானதொரு சூழலில், சீனாவிடம் 110 கோடி டொலருக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விற்பதைத் தவிர வேறு வழியில்லை என பொருளாதார அமைச்சுடன் தொடர்புபட்ட மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நாங்கள் எங்கிருந்தாவது நிதியைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. சீனாவைத் தவிர எந்தவொரு நாடோ அல்லது நிறுவகமோ உடனடியாக நிதியைத் தரும் நிலையில் இருக்கவில்லை என அந்த அதிகாரி தெரிவித்தார்.

அனைத்துலக நாணய நிதியமும் அம்பாந்தோட்டைதுறைமுகவிவகாரத்தை வரவேற்றுள்ளது. பொதுச் சொத்தை அதாவது அம்பாந்தோட்டை துறைமுகத்தை எதிர்கால கடன் சேவைக்காக வர்த்தகமயப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதியளித்தமை மற்றும் இந்த நாட்டின் கடன்சுமையை முகாமைத்துவம் செய்வதற்கான முயற்சிகளை அனைத்துலக நாணய நிதியம் வரவேற்றுள்ளது என இதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கடற்படைத்தளம் நிறுவும் வாய்ப்பு; இந்தியா, அமெரிக்கா அதிர்ச்சி!

ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் உருவாக்கப்பட்ட பயனற்ற பிறிதொரு திட்டமான மத்தல ராஜபக்ஷ அனைத்துலக விமான நிலையத்தை விற்பது தொடர்பாகவும் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன. ஏனெனில் இந்த விமான நிலையத்தைப் பராமரிப்பது இலங்கை அரசாங்கத்திற்கு சுமையாக உள்ளது.

2018 தொடக்கம் இலங்கை அரசு தான் பெற்ற கடனை மீளச் செலுத்துவதற்கு சிரமப்படுகிறது. அனைத்துலக நாணய நிதியத்திடம் பெற்ற 150 கோடி டொலர் இறையாண்மைப் பத்திரத்தை இலங்கை அரசாங்கம் 2019 இல் மீளச் செலுத்துவதற்கான தயார்படுத்தலை மேற்கொள்ள வேண்டும் என அனைத்துலக நாணய நிதியத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இந்தியாவின் ஆர்வம்**

இந்த விமான நிலையத்தைப் பொறுப்பேற்பதில் இந்தியா ஆர்வம் காண்பிப்பதாகவும் இதற்காக கடந்த ஆண்டு இந்தியப் பிரதிநிதிகள் இங்கு வருகை தந்திருந்தனர் எனவும் ஆனால் சமரசம் எட்டப்படவில்லை எனவும் விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சீனா இத்துறைமுகத்தை வாங்கினால், இது ஒரு விமானப் படைத் தளமாக மாறும் எனக் கூறப்படுகின்றது. தற்போதைய அரசாங்கம் எதனையும் செய்யவில்லை என காலியைச் சேர்ந்த வாடகை கார் ஓட்டுநர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு நிதிப் பிரச்சினை உள்ளது. ஆனால் நாட்டு மக்கள் இதனை எப்போதும் பார்க்க முடியாது. துறைமுகங்கள், விமான நிலையம், நெடுஞ்சாலைகள் போன்ற பல பெரும் அபிவிருத்தித் திட்டங்களை ராஜபக்ஷ மேற்கொண்டிருந்தார் என அந்த ஓட்டுநர் குறிப்பிட்டார்.

இந்த அரசாங்கத்தின் மீது அதிருப்தியடைந்த வாக்காளர்கள், கடந்த மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ராஜபக்ஷவின் புதிய கட்சிக்கு தமது வாக்குகளை வழங்கினர். இப் புதிய கட்சியானது இத்தேர்தலில் 70 சதவீத வாக்குகளைப் பெற்று 340 உள்ளூராட்சி சபைகளைத் தனதாக்கியுள்ளது.

கல்விமான்கள் மத்தியில் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கான ஆதரவு அதிகம் காணப்படுகிறது. கொழும்பில் ராஜபக்ஷவால் ஆரம்பிக்கப்பட்ட சீனாவின் நிதியுதவியுடன் அமைக்கப்படும் துறைமுக நகரத் திட்டம் எமது சுற்றுலாத்துறையை மேம்படுத்த உதவும் என பொருளாதார அமைச்சை சேர்ந்த அதிகாரி குறிப்பிட்டார். இத்திட்டம்150 கோடி டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா, ஜப்பான், அமெரிக்கா போன்ற அதிகாரத்துவநாடுகள், இலங்கை சீனாவிடம் நெருக்கமான உறவைப் பேணுவதைத் தடுப்பதற்கு விரும்பினால், எவ்வாறான நடவடிக்கையை முன்னெடுக்க முடியும்? இலங்கை, சீனாவிடமிருந்து பெற்ற அனைத்து கடனையும் இந்த நாடுகள் மீளச் செலுத்துவதற்கு உதவ முடியாதா? நாட்டின் நிதிக் கொள்கைக்கு மாறான பெரிய கட்டுமானத் திட்டங்களை இலங்கை நிறுத்துவதற்கு இந்த நாடுகள் உதவமுடியாதா?

இப்பிராந்திய அதிகாரத்துவ நாடுகள் இலங்கை விடயத்தில் மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதை தாமாகவே உணர்ந்து கொள்ளும் நிலை ஏற்படலாம்.

★

காலைக்கதிர் Kālaikkathir



# அரசியல் கிணறு வெட்டினால் அரசியல் பூதங்கள் கிளம்பும்! அரசியல் கைதிகளை விடுவிக்கும் அதிகாரம் யாரிடத்தில்...?

லெ.முருகபூபதி ஆஸ்திரேலியா




ஊருக்குத்தான் உபதேசமடிபெண்ணேஅது உனக்கில்லையடி கண்ணே என்ற பாணியில் சட்டங்களும் அரசியல்கைதிகள் விவகாரமும் சமூக சிந்தனைகளும் நன்மைக்கும் தீமைக்குமான போராட்டத்தில், நல்லவரின் தயக்கமும் தாமதமுமே தீமையாய் முடிகிறது என்று தமது ஹெம்லெட் நாடகத்தில் ஒரு செய்தியாகச் சொன்னவர் உலக நாடகமேதை வில்லியம் ஷேக்ஸ்பியர்.

இன்று இலங்கை அரசியல் கைதிகள் விவகாரமும் ஒரு நாடகத்திற்கு ஒப்பானதாக மாறியிருக்கிறது. வெளியே இருப்பவர்கள் அனைவரும் நல்லவர்கள் அல்லர். சிறையினுள்ளே இருப்பவர்கள் அனைவரும் கெட்டவர்கள் அல்லர் என்று சிறிதுகாலம் சிறைவாசம் அனுபவித்த நடிகவேள் எம்.ஆர்.ராதாவும், அதிகார வர்க்கமும் அரசியல்வாதிகளும் துரத்தித் துரத்தி வேட்டையாட முனைந்தபோதிலும், மனம் தளராமல் துணிந்து நின்று இந்தியா திகார் சிறைக் கைதிகளை இரட்சித்த தேவதையாக திகழ்ந்த கிரண் பேடியும் வேறு வேறு சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார்கள்.

இன்று இலங்கைச் சிறைகளில் ஏற்கனவே வாடிய நிலையில் உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் அடைபட்டுள்ள அரசியல் கைதிகளின் வாழ்வும், நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போராட்டத்தில் இரண்டறக் கலந்துவிட்டது. அவர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கினால் நன்மையா...? தீமையா...? என்று ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும் சிறைச்சாலைகள் சீரமைப்பு அமைச்சர் சுவாமிநாதனும் பட்டிமன்றம் நடத்துகிறார்கள்!

இந்த அரசியல் கைதிகளில் எத்தனை பேர் நேரடியாக பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டவர்கள், எத்தனை பேர் சந்தேகத்தின்பேரில் கைதாகி சித்திரவதைகளின் மூலம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டவர்கள், பயங்கரவாதச்செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு தெரியாத்தனமாக உணவும் உறையுளும் வழங்கியவர்கள், எத்தனைபேரிடம் சந்தேகத்திற்கிடமான தகவல்கள் இருந்தன என்பது பற்றியும் அவரவர் மனச்சாட்சிக்குத்தான் தெரியும்.

சட்டம் ஒரு இருட்டறை.



அங்கு நீதிதான் ஒரு வெளிச்சவிளக்கு என்பார்கள்.

இந்தப்பின்னணியுடன் முன்னர் சிறையிலிருந்த சில முக்கிய அரசியல்வாதிகள் பற்றியும் கொலைக் குற்றச் சம்பவங்களுக்கு துணைசென்று சாதுரியமாக தப்பியவர்களையும் வன்முறைகளில் ஈடுபட்டு பின்னாளில் அமைச்சர்களாகி போதி பூசைகளில் கலந்துகொண்ட புனிதர்களையும் எண்ணிப் பார்க்கத்தோன்றியது.

இன்று இரண்டாக, மூன்றாக பிளவுபட்டிருக்கும் மக்கள் விடுதலை முன்னணியை ஸ்தாபித்த தலைவர்கள் ரோகண விஜேவீர, லயனல் போப்பகே, உபதிஸ்ஸ கமநாயக்க, பொடி அத்துல, லொக்கு அத்துல, மஹிந்த விஜேசேகர, டி.ஐ.ஜீ. தர்மசேகர உட்பட பலர் அரசியல் கைதிகளாக வெலிக்கடை, மகஸின், கண்டி போகம்பர, யாழ்ப்பாணம், அநுராதபுரம் சிறைகளில் அடைபட்டிருந்தவர்கள்தான்.

விடுதலையானதும் மீண்டும் அரசியலில் ஈடுபட்டு தம்மை ஜனநாயக நீரோட்டத்தில் ஈடுபடுத்தினர்.

ரோகணவிஜேவீரா, முதலாவது ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டு, சமசமாஜக்கட்சியின் வேட்பாளர் கொல்வின் ஆர். டி. சில்வாவை விடக் கூடுதல் வாக்குகள் பெற்றார்.

அதன்பின்னர் நடந்த மாவட்ட சபைத் தேர்தலில் காலிமாவட்டத்தில் போட்டியிட்டு, காலியில் தெரிவானவர் மக்கள் விடுதலை முன்னணியின் (முன்னாள்) பொதுச்செயலாளர் லயனல் போப்பகே. இவர் காலியில் நடந்த இடைத்தேர்லிலும் போட்டியிட்டவர். ஆனைமடுவ இடைத்தேர்தலில் உபதிஸ்ஸ கமநாயக்க போட்டியிட்டார்.

பின்னாளில் மஹிந்த விஜேசேகர சந்திரிகாவின் அமைச்சரவையில் அமைச்சராகவும் பதவி வகித்தார்.

இந்தச்சம்பவங்களுக்கு முன்னோடியாக பிரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்தில் கலாநிதிகள் என்.எம்.பெரேரா, கொல்வின். ஆர். டி. சில்வா முதலானோரும் அரசியல் கைதிகளாக சிறை வைக்கப்பட்டு இந்தியாவுக்கு தப்பி ஓடி தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தவர்கள்தான். பின்னாளில் எம்.பி.க்களாகவும் அமைச்சர்களாகவும் பதவி வகித்தவர்கள்.

சொல்லத் தவறிய கதைகள் 5

தோழர் சண்முகதாசன், சிறிமாவின் ஆட்சிக்காலத்தில் 1971 ஏப்ரல் கிளர்ச்சி சந்தேக நபராக சிறையில் இருந்தவர்தான்.

1959 செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி ஒரு சதிமுயற்சியால் சுடப்பட்டு, மறுநாள் 26 ஆம் திகதி உயிரிழந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் கொலைச் சந்தேகநபர்களில் ஒருவரான (முன்னாள்) சமூகநலத்துறை அமைச்சர் திருமதி விமலா விஜயவர்தனா, பின்னர் சட்டத்தின் ஓட்டைகளினால் சாதுரியமாகத் தப்பி வெளிநாடு சென்று அஞ்ஞாதவாசம் தொடர்ந்தார்.

அவர் செல்வாக்கு மிக்க லேக்ஹவுஸ் ஸ்தாபகர் விஜயவர்தனாவின் சகோதரி.


கிரண்பேடி

அரசியல் காரணங்களினாலும் ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரிலும் முன்னர் சிறையில் இருந்தவர்கள்தான் தற்போதைய தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா, பின்னாளில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா முன்னாள் வடக்கு – கிழக்கு முதல்வர் வரதராஜப்பெருமாள் ஆகியோர்.

1983 இல் வெலிக்கடையில் சிறையிலிருந்தபோது ஆவணி அமளியில் உயிர் தப்பிய டக்ளஸ் தேவானந்தாவும் வரதராஜப்பெருமாளும் பின்னர் மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டு , அங்கு சிறையுடைப்பு நடந்ததும் இந்தியாவுக்கு தப்பி ஓடியவர்கள்தான்.

இவர்கள் மீண்டும்வந்து இலங்கை அரசியல் அரங்கில் தோன்றினார்கள். புலிகள் இயக்கத்திலிருந்த சிவநேசதுரை சந்திரகாந்தன் பின்னாளில் கிழக்கு மாகாண முதல்வரானார்.

புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாண தளபதி கருணா அம்மான் மஹிந்தரின் அரசில் நியமன அங்கத்தவராகி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் துணைத்தலைவராகவும் விளங்கினார். லலித் அத்துலத் முதலி என்பவர் தமது முன்னாள் மனைவிக்கு அசிட்வீசிய குற்றச்சாட்டில் சிறை வைக்கப்பட்ட ஓர் ஐக்கிய தேசியக் கட்சி பிரமுகர். ஆனால், இவரும் சாதுரியமாக வெளியே வந்து 1977 இல் நடந்த பொதுத்தேர்தலில் இரத்மலானை தொகுதியில் போட்டியிட்டு வென்று ஜே.ஆரின் அமைச்சரவையில் முதலில் வர்த்தக அமைச்சராகவும் பின்னர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி வகித்தவர். (ஜே.ஆர். தம்வசம் அந்த அமைச்சை வைத்திருந்தார்)

லலித் அத்துலத் முதலி தமது முன்னாள் மனைவிக்கு அசிட் வீசி தாக்கியமையால், அன்று தேர்தல் மேடைகளில் எதிரணியினர் அவரை அசிட் முதலி என்றும் கேலிசெய்தனர். ஆனால், அவர் அமைச்சரானதும் விஹாரைகளில் அரசமரங்களுக்கு போதிபூசை செய்து பாவங்களை கழுவிக்கொண்டார்.

பின்னாளில் இவர் பிரேமதாஸவுடன் முரண்பட்டார். இருவரும் ஒரு வார காலத்தில் வேறு வேறு இடங்களில் கொல்லப்பட்டனர். பண்டாரநாயக்க கொலைச் சந்தேகநபர்கள் இருவருக்கு தண்டனை கிடைத்தது. ஆனால், லலித், பிரேமதாஸ கொலைக்குற்றவாளிகள் பிடிபடவேயில்லை.

லலித் அத்துலத் முதலி அசிட்வீச்சு சம்பவத்தில் சிறையிலிருந்த காலப்பகுதியில் அவரைச் சென்று பார்த்த ஒரு தமிழ்த் தினசரியின் ஊடகவியலாளர், அவர் வெளியே வந்த பின்னரும் அவருடன் நட்புறவு பேணிக்கொண்டிருந்தார்.

லலித் அத்துலத் முதலி பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான பின்னரும் அவர்களுக்கிடையிலான நட்புறவு தொடர்ந்தது. இருவரும் ரூபவாஹினி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டனர்.

எனினும் அந்த நட்பின் அடையாளமாக சலுகைகள் பெற்று, அந்த ஊடகவியலாளர் இலங்கையில் அரச மட்டத்தில் எங்காவது உயர்ந்திருக்கலாம். ஆனால், அவர் அவ்வாறு செய்யாமல் லலித்தின் தனிப்பட்ட தொலைபேசி எண்களை மாத்திரம் பெற்று வைத்திருந்தார்.

என்றைக்காவது அந்த எண்கள் ஆபத்துக்கு உதவும் என்ற தீர்க்கதரிசனம் அந்த ஊடகவியலாளருக்கு இருந்தது. பிறிதொரு சந்தர்ப்பத்தில் அந்த ஊடகவியலாளரின் நெருங்கிய உறவினர் ஒருவர் பயங்கரவாத சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதாகி சிறைவைக்கப்பட்டார்.

இவ்வேளையில் லலித் அத்துல முதலியின் அந்த தனிப்பட்ட தொலைபேசி எண்கள் அவருக்கு பெரிதும் உதவின. தனது உறவினரை எப்படியும் விடுதலை செய்து தரவேண்டும் என்று பிரதிப்பாதுகாப்புஅமைச்சர் லலித்திடம் கோரியதும், அவர் ஒரு நிபந்தனை விதித்தார். எந்தப் பிரச்சினையும் இன்றி விடுவித்துத்தருகின்றேன். அந்த சந்தேக நபரான அரசியல் கைதியை தாமதமின்றி ஏதாவது ஒரு வெளிநாட்டுக்கு அனுப்பிவிட வேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை.

அந்த ஊடகவியலாளரும் அதற்கு சம்மதித்து, அதற்கான வேலைகளை துரிதமாக மேற்கொண்டார். ஒரு குற்றச் செயலுக்காக சிறையிலிருந்த வேளையில் தன்னைத்தேடிவந்து பார்த்தவருக்கு நன்றிதெரிவிக்கும் முகமாக லலித்தும் அந்த ஊடகவியலாளரின் உறவினரை தமது அரசியல் அதிகார சாமர்த்தியத்தினால் விடுவித்தார்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)


லலித்அத்துலத் முதலி

- கீழே உள்ள வாக்கியங்களில் கருத்தைத் தமிழில் எழுதுக

12. I will bring flowers………………………………………….

13. மகேகமயாப்பானய……………………………………………

14. இங்கு வாருங்கள் என்னும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக………………………………………………………………………..

15. ஆபத்து ஏற்படுவதை உணர்ந்தவுடன் தனது உடலை வட்டமாகச் சுருட்டிக் கொள்ளும் விலங்கு

1.பிள்ளைப்பூச்சி 2.மரவட்டை 3.அட்டை 4.மயிர்க்கொட்டி

16. மழை பெய்யப் போவதை உணர்ந்து கொள்ளத்தக்க விலங்கின் நடத்தை

1.பூனை கத்தும் 2.நரி ஊளையிடும்

3.நாய் குரைத்தல் 4. ஈசல் பறத்தல்

17. பின்வரும் வாக்கியத்தின் கருத்தைஆங்கிலத்தில் எழுதுக.

"தயவுசெய்துஉங்கள் பேனையை எனக்குத் தாருங்கள்"

………………………………………………………………………………

18. இரவில் திரியும் பறவை

1.ஆந்தை 2.மரங்கொத்தி 3.மீன்கொத்தி 4.கானாங்கோழி

19. சந்தேகத்திற்கிடமான பொதியைக் கண்டவுடன் பாதுகாப்பிற்காக அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

1.119 2.147 3.456 4.1919

20. "டங் டங் சத்தம் பார் ஆலையிலே

இரும்பு உருக்கி அடிக்கிறார்

இப்பாடல்

1.அருவி வெட்டுப ' பாடல் 2.தொழிற் பாடல்

3.வண்டிப் பாடல் 3.விளையாட்டுப் பாடல்





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

தரம்-5 பகுதி - I நேரம் - 45 நிமிடம் வினாத்தாள் 23



- கீழேதரப்பட்டுள்ளஎண்களின் ஒருகோலம் உண்டாவதற்குநீக்கப்படவேண்டியஎண்கள் யாவை?

27. 8 , 10 ,11 , 12 ,14 ,16
    1.11
    2.10
    3.8

28. 30 ,22 ,25 ,20 ,18 , 15 ,10
    1. 22 15
    2. 22 18
    3. 25 18

29. 175,125,141,132 என்னும் எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது கிடைக்கும் முதலாம் எண்ணினதும் மூன்றாம் எண்ணினதும் நடுவில் இருக்கும் இலக்கங்கள் முறையே
    1.2,3 2.2,4 3.7,4

30. ஆண்டில் சிலமாதங்களுக்கு 31 நாள்களும் வேறு சில மாதங்களுக்கு 30 நாள்களும் உள்ளன. அவ்வாறெனின் 28 நாள்களும் உள்ள மாதங்களின் எண்ணிக்கையாது?
    1.1 2.2 3.12

31. ஒரு குறித்த ஆண்டின் ஒக்ரோபர் 17 ஆந் திகதி வியாழக்கிழமையாகும். அவ்வாண்டின் நவெம்பர் 17
    1. வெள்ளிக்கிழமை
    2. சனிக்கிழமை
    3. ஞாயிற்றுக்கிழமை

32. நிலாவிடம் ரூ.100 ரூ.50 ரூ.20 நாணயத் தாள்களில் மாத்திரம் ரூ.250 உண்டு. அவளிடம் உள்ள ரூ.20 தாள்களின் எண்ணிக்கையாது?
    1.4 2. 5 3.10

33. 2 4 8
    4 X 16
    Y 16 32 இங்கு X,Y ஆகியவற்றின் பெறுமானங்கள் முறையே
    1.6, 8 2.8,6 3.8,8

- A,B,C என்னும் மூன்றுமரங்களில் பறவைகள் பின்வருமாறு இருக்கின்றன.
  - ❖ மரம் Cயில் இருக்கும் எண்ணிக்கையிலும் பார்க்க இரு மடங்கு பறவைகள் மரம் B இல் இருக்கின்றன.
  - ❖ B,C ஆகிய இரு மரங்களிலும் உள்ளபறவைகளின் எண்ணிக்கை மரம் A இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கைக்கு சமனாகும்.
  - ❖ மரம் B இல் இருந்துஒருபறவைமரம் Cற்கு பறந்து செல்லும்போது மரம் B இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கை 3 ஆகும்.

34. மரம் A இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கை யாது?
1.6 2.5 3.3

35. மூன்று மரங்களிலும் உள்ள பறவைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
1.6 2.10 3.12

36. பின்வருவனவற்றில் தேசிய அடையாளங்கள் அல்லாதது எது?
1.நீலோற்பலம் 2.நிறைகலசம் 3.நாகமரம்

37. வொலிபோல் (கரப்பந்து) விளையாட்டிற்கான குழு ஒன்றில் உள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாது?
1.6 2.10 3.12

38. மாணிக்ககங்கைக்கு அருகில் அமைந்துள்ள சரித்திர புகழ் வாய்ந்த இடம் எது?
1.சிலாபம் 2.கதிர்காமம் 3.களுத்துறை

39. ஆங்கில ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு?
1.1945 2.1948 3.1972

40. பின்வரும் கவிதையின் நான்கு வரிகள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றை சரியாக ஒழுங்கு படுத்தின் கிடைக்கும் விடையாது?
A. தெய்வப் புலமை வள்ளுவராம்
B. அருமை மிக்க உண்மைகளை
C. திருக்குறள் தந்த பேரறிஞர்
D. அழகாய் உணர்த்தும் தனிநூலாகும்

1.BDCA 2.DCBA 3.BCAD

---

## வினாத்தாள் 23 பகுதி II

நேரம் – 1 மணித்தியாலம் 15 நிமிடம்

பின்வரும் பந்தியை வாசிக்க

"பூத்துணிபோல் தோன்றிய நட்சத்திரங்களை விடப் பூரண சந்திரனே வானில் தெரிந்தது .தொலைவில் உள்ள சந்திரனின் கதிர்கள் விழுந்து சமுத்திரம் பளபளத்தது. கரைக்கு அண்மையில் இருந்த கற்பாறையைத் தவிர்த்துக் கொண்டுகப்பல் செலுத்தப்பட்டமையால் அது சற்று வளைவான பாதையில் சென்றது"

- இப்பந்தியைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 6 வரையான வினாக்களுக்கு விடைதருக.

1. மேற்குறிப்பிட்ட விவரணத்தில் நாளின் எந்தக் காலம் பற்றிக் குறிப்பிடப்படுகிறது?

.................................................................................................







2. இங்கு இடம்பெறும் உவமானத்தைஎழுதுக.........................................................

3. "அண்மையில்"என்பதன் எதிர்சொல்லை எழுதுக........................................

4. "சமுத்திரம்" என்பதன் ஒத்தசொல்லை எழுதுக...........................................

5. கப்பல் எதனைதவிர்த்துக் கொண்டு சென்றது?..........................................................

6. "அது சென்றது" இங்கு அது என்பதைப் பன்மையாக மாற்றி எழுதுக

.................................................................................................

- 7 ஆம் 8 ஆம் வினாக்களில் உள்ள ஒவ்வொரு பழமொழியினதும் கருத்தை எழுதுக

7. ஆழம் அறியாமல் காலைவிடாதே.

.................................................................................................

8. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்.

.................................................................................................

9. பொருத்தமான நிறுத்தல் குறியை இடுக.

| |
|---|
| உங்களுக்கு வெற்றி உண்டாகுக |

.................................................................................................

10. பின்வரும் கருத்திற்குப் பொருத்தமான தனிச் சொல்லை எழுதுக.

| |
|---|
| ஒருவருக்கும் தீங்குஅல்லது இம்சை செய்யாமை |

.................................................................................................

11. பின்வரும் சொற்களைப் பொருத்தமாக்கிக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெளியிடுவதில் | பத்திரிகை | பிரதான | வகிக்கிறது | இடம் | செய்திகளை |

.................................................................................................

# எலும்புகளைப் பலப்படுத்தும் பலாப்பழம்



பலாப்பழத்தை உண்பதால் எலும்புகள் வலுவடைகின்றன. இதில் மக்னீசியம் அதிகம் இருப்பதால், இது எலும்பு சம்பந்தமான எந்த நோயும் வராமல் தடுக்கிறது.

பலாச்சுளை பொதுவாக உடலுக்கு குளிர்ச்சியை தரக்கூடியது. உடல் வறட்சி, எரிச்சல், களைப்பைப் போக்கும். ரத்தத்தை சுத்திகரிக்கும். இதயத்திற்கு வலுச்சேர்க்கும். ரத்தக்குழாயில் இருக்கும் கொழுப்புகளை நீக்கி ரத்த ஓட்டத்தை சீராக வைக்கும். பலாச்சுளை சாப்பிட்டால் இதய தாக்குதல் வராது. வைட்டமின் ஏ சத்து பலாவில் அதிகம் உள்ளது. மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு உடனடி தீர்வு பலாச்சுளை தான்.

பலாச்சுளையின் இனிப்புக்காக அதனை அதிகம் விரும்பி உண்டால் வயிற்றுக் கோளாறுகள் உண்டாகும். இவ்வாறு உண்டாகும் வயிற்றுக் கோளாறை நீக்க பலாக்கொட்டையை வறுத்துப் பொடிசெய்து அதனுடன் உப்பு, ஓமம் ஆகியவற்றை சேர்த்து வெந்நீரில் கலக்கி சாப்பிட வேண்டும்.

பலா இலைகளை ஒன்று சேர்த்து தைத்து அதில் விரத உணவுகளை சாப்பிடும் பழக்கம் நம் முன்னோர்களிடம் உண்டு. பலா இலையில் உணவுகளை சாப்பிட்டால் குன்ம நோய் நீங்கும். இலைகளை அரைத்து கட்டிகள் மீது தடவ அவை உடைந்து குணமாகும். இலைக் கொழுந்தை அரைத்து சிரங்குகளுக்கு பூசலாம்.

பலாச்சுளையில் விற்றமின் சி, தாது உப்புக்கள், நார்ச்சத்து, மாவுச்சத்துக்கள் நிறைந்து இருப்பதால், நல்ல ஆரோக்கியத்தை தரும். நீரிழிவு நோயாளிகள் தவிர்க்க வேண்டும்.

பலாமரத்துப் பாலை கட்டிகளின் மீது தடவினால் வீக்கம் குறையும். வேரை பாலிட்டு அரைத்து சொறி, சிரங்குகளுக்குப் பூசலாம்.

பலாப்பழத்தில் இரும்புச்சத்து இருப்பதால் அனிமியா வராமல் தடுப்பதோடு, உடலில் இரத்த ஓட்டத்தையும் சீராக்குகிறது.

ஆஸ்துமாவால் அதிகம் கஷ்டப்படுபவர்கள் இதன் வேரை வேக வைத்து அந்த நீரோடு, பலாப்பழச்சாற்றை கலந்து குடித்தால் ஆஸ்துமா போய்விடும். தைராய்டு குறைபாடு உள்ளவர்கள், இந்தப் பழத்தைச் சாப்பிட்டால் தைரய்டு குணமாகும். மேலும் இது உடலுக்குத் தேவையான ஹார்மோனை உற்பத்தி செய்கிறது.

பெண்கள் இந்தப் பழத்தை உண்பதால் எலும்புகள் வலுவடைகின்றன. இதில் மக்னீசியம் அதிகம் இருப்பதால், இது எலும்பு சம்பந்தமான எந்த நோயும் வராமல் தடுக்கிறது.

# டெஸ்ட் ரியூப் பேபி யாருக்குப் பொருந்தும்?

திருமணம் முடிந்து 10 ஆண்டுகள் மேல் ஆகியும் பல்வேறு காரணங்களால் குழந்தைப்பேறு கிட்டவில்லை என்பவர்களுக்கு இந்த டெஸ்ட் ரியூப் பேபி சிகிச்சை முறை பொருந்தும்.

திருமணம் ஆகி 10 ஆண்டுகள் ஆகியும் குழந்தைப்பேறு கிட்ட வில்லை என்றாலோ, ஐ.யூ.ஐ. என்ற சிகிச்சையை 6 முறையெடுத்து தோல்விகண்டவர்களுக்கோ, விந்தணு எண் ணிக்கையில் முன்னேற்றம் கிட்டாதவர்களுக்கோதான் இவ்வித சிகிச்சை பொருந்தும்.

அதே போல் பெண்களிடத்தில் ஒரு பிரிவு பெண்களுக்கு கருமுட்டை வெடிப்பதில் பிரச்சினை இருந்தாலோ, சினைக் குழாயில் அடைப்பு இருந்தாலோ, அறுவைச் சிகிச்சையின் மூலம் அகற்றப்பட்டாலும், மீண்டும், மீண்டும் கருக்குழாயில் கட்டிகள் தோன்றினாலோ இவ்வித சிகிச்சையில்தான் பலன் பெற இயலும்.

ஓமோன் ஊசி மூலம் கருமுட்டையை உற்பத்தி செய்து, குறிப்பிட்ட நாளில் அதை ஸ்கான் மூலம் பரிசோதித்து எடுத்து வைத்துக் கொண்டு, அதனுடன் கணவனிடமிருந்து பெறப்பட்ட விந்தணுவை சுத்திகரித்து சேமித்து வைத்திருப்பதை இணைப்போம். இதன் மூலம் ஆரோக்கியமான விந்தணுவும், கருமுட்டையும் ஒன்றிணையும் வாய்ப்பை உருவாக்கும். ஒரு சிலருக்கு ஆரோக்கியமான விந்தணுவின் நீந்தும் திறன் இயல்பைவிட சற்றுக் குறைவாக இருக்கும் போது, அதனை கரு முட்டையில் நேராக ஊசி மூலம் செலுத்தி கருத்தரிக்கும் வாய்ப்பும் உருவாக்கப்படும்.

கருத்தரிப்பு நடந்த பின் அந்த கருமுட்டை இன்குபெட்டரில் வைத்து கண்காணிக்கப்படும். அதன் பிறகு கருவை பெண்ணின் வயிற்றில் பொருத்தி கருவுற வைத்து பிரசவிக்கப்படும்.

20 முதல் 50 வயது வரை உள்ள பெண்களின் ஏகோபித்த ஆசை தாய்மை அடைவது. அதே சமயத்தில் குழந்தையின்மைக்கான காரணத்தை கண்டறிந்து அது ஆண்களிடத்தில் இருந்தாலும் சரி, பெண்களிடத்தில் இருந்தாலும் சரி. அதனை முதலில் கண்டறிவது தான் முதல் கட்ட சிகிச்சை ஆகும்.

(பு)



# கறுப்பான பெண்கள் கவலையை விடுங்கள்?



கறுப்பான பெண்கள் பளிச்செனக் காட்சியளித்தால் போதும் என நினைக்க வேண்டுமே தவிர, வெள்ளையாகத் தெரிய வேண்டும் என நினைக்கக் கூடாது.

கறுத்த சருமம் கொண்ட எல்லாப் பெண்களுக்கும் உள்ளூர ஒருவித தாழ்வு மனப்பான்மை கட்டாயம் இருக்கும். கறுப்பாக இருக்கிறோமே என சோர்ந்து போயிருக்கும் பெண்களுக்கு ஒரு விடயம். ஆரோக்கியமான சருமம் என்றால் அது கறுத்த சருமம்தான். அதில் முதுமையும், சருமப் பிரச்சினைகளும் அத்தனை சீக்கிரம் வருவதில்லை.

அழகைப் பொறுத்தவரை அவர்கள் பேரழகியாகவே இருந்தால் கூட அது இரண்டாம் பட்சம்தான். கறுப்பான பெண்கள் நிறமாக மாற, சில அழகு சிகிச்சைகள். பியூட்டி பார்லர் போகாமல் வீட்டிலேயே இவர்கள் செய்து கொள்ளக்கூடிய சிகிச்சைகள் பற்றிக் கறுப்பான பெண்கள் பளிச்செனக் காட்சியளித்தால் போதும் என நினைக்க வேண்டுமே தவிர, வெள்ளையாகத் தெரிய வேண்டும் என நினைக்கக் கூடாது.

அவர்களது சருமம் மஞ்சள், பிரவுன் அல்லது பிங்க் என எந்த மாதிரியான அமைப்பைக் கொண்டது எனப் பார்த்து அதற்கேற்ற பவுண்டேசனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பவுண்டேசனை மணிக்கட்டில் தடவிப் பார்த்து அது சரியாகப் பொருந்துகிறதா எனத் தெரிந்து உபயோகிக்கலாம்.

ஐ ஷடோ, லிப்ஸ்டிக் போன்றவை ரொம்பவும் வெளிர் நிறமாகவும் இல்லாமல், ரொம்பவும் டார்க் நிறமாகவும் இல்லாமல் நடுத்தர நிறத் தில் இருக்கட்டும். லிப்ஸ்டிக் போடுகிற நிறத்திலேயே ஐ ஷடோவும் இருக்கட்டும்.

கறுப்பான பெண்கள் வெள்ளை நிறப்பவுடர் உபயோகிப்பதைத் தவிர்த்து, லூஸ் பவுடர் உபயோகிக்கலாம்.

உடை அணிகிற விடயத்தில் இவர்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும். பளீர் நிற உடைகள் அப்படியே முகத்தில் பிரதிபலிக்கும். அதேசமயம் டார்க் நிற உடைகளும் அப்படியே உடலின் நிறத்தோடு ஒன்றிப் பேய் இன்னும் கறுப்பாகக் காட்டும். வெள்ளை மற்றும் ரொம்பவும் வெளிர் நிறங்களைத் தவிர்த்து பச்சை, றோஸ், நீலம், மஜந்தா பிங்க் போன்ற நிறங்களில் உடை அணியலாம்.

ஆயுர்வேதக் கடைகளில் சுத்தமான குங்குமாதி தைலம் கிடைக்கும். அதை வாங்கி கொஞ்சம் பாலுடன் கலந்து வாரம் ஒரு முறை முகத்துக்கு மசாஜ் செய்து வந்தால் நிறம் நிச்சயம் கூடும். மசாஜுக்குப் பிறகு அரைத்த சந்தனத்தில் பால் கலந்து பேக் போட வேண்டியது முக்கியம்.

# விரல்நுனியில் தோல் உரிகிறதா?

சிலருக்கு விரல்களின் நுனியில் தோல் உரியும். சற்றே வெடித்தாற்போல் இருக்கும். இது அநேகருக்கு இருக்கும் பாதிப்புத்தான். கை, கால், உதடு இவற்றில் தோல் உரிவதுண்டு.

பொதுவில் இதை மிகப்பெரிய பிரச்சினையாக மக்கள் எடுத்துக் கொள்வதில்லை. என்றாலும் சில சமயங்களில் உடல் ஆரோக்கிய பிரச்சினையோடு தொடர்பு உடையதாக இருக்கலாம்.

வறண்ட சருமம், கிருமி பாதிப்பு, அரிப்பு இவை பொதுவாக விரல் நுனிகளில் தோல் உரிவதற்கான ஒரு காரணமாக இருக்கலாம்.

★ சிலர் வேலை காரணமாகவோ, பழக்கம் காரணமாகவோ கைகளை அடிக்கடி சோப்பு போட்டு நீரில் கழுவுவர். இது சருமத்தில் இருக்கும் இயற்கை எண்ணெய்களை நீக்கி விடுவதால் சருமம் வறண்டு உரியலாம்.

★ வறண்ட தட்ப – வெப்ப நிலை. பொதுவாக இது வறண்ட காலம், குளிர் காலத்தில் ஏற்படும். இந்தக் காலத்தில் சருமம் சுருங்கும். வறண்டு போகும். சரும தோல் உரியலாம். இக்காலங்களில் கையுறை அணிவது நல்ல பாதுகாப்பு தரும்.

★ அதிக சூரிய வெப்பம் சருமத்தை எரித்து விடும். சிவந்த, பாதிப்புடைய சருமம், புண், தோல் உரிதல் ஆகியவை ஏற்படும். இத்தகு பாதிப்புகள் ஒரு வாரத்திற்குள் சரியாகவில்லை என்றால் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனை வேண்டும். பொதுவாக இத்தகு சருமம் வெயிலில் செல்பவர்கள் ஸன் ஸ்கிரீன் லோன் பயன்படுத்துவது நல்லது. அலோவேரா லோன் எனப்படும் சோற்று கற்றாழை லோன் உபயோகிப்பதும் மிகவும் நல்லது.

(பு)



## இந்திய குருக்களின் திருத்தந்தை பற்றிய நூல்

திருத்தந்தை பிரான்சிஸ் திரு அவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமையின் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டி இரு இந்திய இயேசுசபை அருள் பணியாளர்கள் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளனர். இயேசு சபையைச் சேர்ந்த திருத்தந்தை பிரான்ஸின் போதனைகள் எவ்வாறு செயல்படுத்தப் படுகின்றன என்று ஐம்பதுக்கும் மேற்பட்ட திருஅவைத் தலைவர்களிடமிருந்து சேகரித்த பகிர்வுகளைக் கொண்டு இந்த நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kālaikkathir

கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## ஓர் ஆயரின் முதல் பணி செபம்

மனிதரின் நன்மைக்காக இறைவனுக்குரிய காரியங்களில் கருத்தாய் இருப்பதே ஓர் ஆயரின் பணியாகும். கத்தோலிக்கத் திருஅவையில் ஆயரின் பணிகள் பற்றி எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் ஓர் ஆயரின் முதல் பணி செபம் என்றும் செபம் செய்யாத ஆயரால் தனது கடமையை ஆற்ற முடியாது மற்றும் தனது அழைப்பை நிறைவேற்ற இயலாது என்றும் கூறினார்.

# சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு நாட்டின் தலைவர் விஜயம்





யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆளுகையின் கீழ் இயங்கும் புனித பத்திரிசியார் கல்லூரியின் தொழில்நுட்ப மையத்தை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 19 மார்ச் 2018 அன்று சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார். இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தனும் வடமாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரனும் கலந்து கொண்டனர். வடமாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் உரையாற்றும் போது -

புனித பத்திரிசியார் கல்லூரி நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு கல்லூரி. இக் கல்லூரியில் கல்வி கற்ற பல மாணவர்கள் பின்பு இலங்கை நாடாளுமன்ற பிரதிநிதிகளாகவும் அமைச்சர்களாகவும் அருட்தந்தைகளாகவும் உயர் நீதிமன்ற நீதியரசர்களாகவும் இன்னும் பல உயர் பதவிகளிலும் சிறப்புற இருக்கின்றனர்.

எமது எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் அவர்கள்கூட இரண்டு வருடங்கள் இக் கல்லூரியின் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றவர் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறான பழைய மாணவர்களுள் பல சிங்கள மாண வர்களும் அடங்கியிருந்தனர். அக் கால அரசியல் தலைவர்களால் எடுக் கப்பட்ட சில பொருத்தமற்ற முடிவு கள் காரணமாக ஆங்கிலமொழிக் கற்கை படிப்படியாகக் குறைந்து இன்று ஆங்கிலபாடத்தை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் கூட இல்லாமற் போய் விட்ட நிலையே காணப்படுகின்றது.

எனினும், காலம் கடந்ததெனினும் இதனை உணர்ந்து கொண்ட அரசும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் போன்றவர்களும் முன்னெடுக்கின்ற காத்திரமான சில முன்னெடுப்புக்கள் காரணமாக ஆங்கில மொழி அறிவுத்திறன் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருவதை காணக்கூடியதாக உள்ளது.

அன்று ஆங்கிலக்கல்வி இலங்கையிலுள்ள அனைத்து இனங்களையும் இன மத வேறுபாடுகளின்றி இலங்கையர் என்ற ஓர் அடையாளத்தின் கீழ் இணைத்தது. அதே போன்ற ஒரு நிலை மீண்டும் மலர வேண்டும். அதன் பொருட்டே இணைப்பு மொழி என்று ஆங்கில மொழியானது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து இனங்களும் தத்தமது அடையாளங்களுடன் சுயமாகவும் சுதந்திரமாகவும் இயங்குவதற்கான ஒரு சுழ்நிலை உருவாக வேண்டும் என்றால் இணைப்பு மொழி கட்டாய பாடமாக்கப்பட வேண்டும். மற்றும் ஒன்பது மாகாணங்களும் ஒரு சமஷ்டி அமைப்பினுள் அடங்க முன்வரவேண்டும்.

எமது தமிழ் பேசும் மாணவ மாணவியர் ஒரு மொழியிலும் சிங்கள மாணவ மாணவியர் இன்னோர் மொழியிலும் பாண்டித்தியம் பெற்றால் அவர்களுக்குள் அன்னியோன்யமான கருத்துற வாடல்கள் குறைவாக இருக்கும். புரிந்துணராமையும் சந்தேகங்களுமே மிஞ்சும். கட்டாயமாக இணைப்பு மொழிப் பாண்டித்தியம் உருவாக அரசியல் தலைவர்களும் மதத் தலைவர்களும் அறிஞர்களும் இணைந்துகொண்டு இதய சுத்தியுடன் செயற்படவேண்டும்.

முழு நாட்டையும் உள்நாட்டு மொழியொன்றே இணைக்க வேண்டும் என்றிருந்த அரசியல்வாதிகளின் எண்ணம் இன்று வரை கைகூடவில்லை என்பதும் மாறாக இனங்களிடையே சந்தேகங்களையும் புரிந்துணர்வற்ற நிலைமையையுமே கொண்டு வந்துள்ளது என்ப தும் அரசியல்வாதிகளால் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

வருங்காலத்தை உணர்சியின் அடிப்படையில் அமைக்காது அறிவு சார்ந்ததாக அமைக்க அனைவரும் முன்வரவேண்டும். - என அவர் மேலும் தெரிவித்தார்.

29 ஆண்டுகள் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் பணியாற்றி (1989 - 2018) அதில் 10 ஆண்டுகள் (2008 - 2018) அதன் அதிபராக பணியாற்றிய எம்.ஜெறோ செல்வநாயகம் அடிகளாரும் புனித பத்திரிசியார் கல்லூரியின் தொழில் நுட்ப மைய பணிகளை தனியாக நின்று செய்து முடித்த அமெரிக்காவை வசிப்பிடமாகக் கொண்ட லோகன் மினட் சவரிமுத்து அவர்களும் ஜனாதிபதியால் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

## உண்மையின் எண்ணங்கள்

பத்திரிசியார் கல்லூரிக்கு இலங்கை ஜனாதிபதியின் வருகை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது.

சுதந்திரம் பெற்ற இலங்கையின் முதல் பிரதம மந்திரியான டி.எஸ்.சேன நாயக்கா (1947 - 1952) 1950 ஆம் ஆண்டு ஆயர் மேதகு கலாநிதி எமிலியானூஸ் பிள்ளை ஆண்டகை காலத்தில் (1950 - 1972) ரி.எம்.எவ்.லோங் அடிகளார் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபராக (1936 - 1956) இருந்த போது மத்தியுஸ் கட்டடத்தை திறப்பதற்கு யாழ் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு வருகை தந்திருக்கிறார்.

தற்போது 68 ஆண்டுகளின் பின்னர் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் காலத்தில் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபராக எ.பி. திருமகன் அடிகளார் பணியாற்றும் போது புனித பத்திரிசியார் கல்லூரியின் தொழில் நுட்ப மையத்தை திறப்பதற்கு யாழ் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு வருகை தந்திருக்கிறார் என்பதைச் சரித்திர ஏடுகள் பதிந்து வைக்கின்றன.

இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு பல கோணங்களிலும் தவறாகவே அறிக்கையிடப்பட்டுள்ளமை கவலைக்குரியது. காணாமல் ஆக்கப்பட்ட முன்னாள் அதிபர் பிரான்சீஸ் யோசவ் அடிகளார் பற்றி எதுவும் பேசப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. கல்லூரி அதிபர் எ.பி.திருமகன் அடிகளார் காணாமல் ஆக்கப்பட்ட பிரான் சீஸ் யோசவ் அடிகளார் பற்றி தெரிவித்த குறிப்பு எதுவும் குறிப்பிடப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றி எதுவும் தொவிக்கப்படாமல் நீச்சல் தடாகம் தரும்படி கேட்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

ஆயர் காணமல் ஆக்கப்பட்டோர் பற்றி ஜனாதிபதியிடம் கேட்டமையும் ஜனாதிபதி அது பற்றித் தனியாக தெரிவித்த பதிலும் (தெரிய நியாயமில்லை). பின்னர் பொதுவாக தெரிவித்த பதிலும் குறிப்பிடப்படவில்லை. நீச்சல் தடாகம் கேட்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டது. ஜனாதிபதியே தனது உரையில் அதிபர் என்னிடம் எதுவும் கேட்கவில்லை, கருதினால் அவர்கள் உடன் பேசிய போதே நீச்சல் தடாகம் இங்கு இல்லை என அறிந்தேன் எனத் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்ட்டோர் பற்றி குருவானவர் தலைமையில் வந்த குழுவினரை ஜனாதிபதி சந்திப்பார் எனச் சொல்லி ஏமாற்றி விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் எந்த முன்னறிவிப்பும் இன்றி வந்த குழுவினரை ஜனாதிபதி சந்தித்துள்ளார். அவ்வாறு சந்தித்தார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எது எப்படி இருப்பினும் 68 ஆண்டுகளின் பின்னர் இலங்கை அரச தலைவர் ஒருவர் நீண்ட கால பாரம்பரியத்தைக் கொண்ட தனியார் கத்தோலிக்க யாழ் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு வருகை தந்தமை ஒரு சரித்திர நிகழ்வே.

## அனைத்துத் தந்தையருக்கும் திருத்தந்தை வாழ்த்துச் செய்தி



19 மார்ச் 2018 திரு அவையில் சிறப்பிக்கப்பட்ட புனித யோசேப்பின் திருவிழாவையொட்டி உலகின் தந்தையர் அனைவருக்கும் தன் வாழ்த்துக்களை வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அன்பு தந்தையரே! புனித யோசேப்பின் திருவிழா வாழ்த்துக்கள். உங்கள் குழந்தைகள் ஞானத்திலும் அருளிலும் வளரும்போது புனித யோசேப்பைப் பின்பற்றி உங்கள் அக்கறையை காட்டுங்கள்.

இளையோரின் ஏக்கங்களுக்கு செவிமடுக்கும்போது நமக்கு முன்னால் விரிந்திருக்கும் உலகைக் குறித்த பார்வையையும் திருஅவை நடந்துசெல்ல அழைக்கப்பட்டிருக்கும் பாதை குறித்தும் அறிவோம் எனவும் திருத்தந்தை வெளியிட்ட செய்தி அமைந்திருந்தது.

## ஐக்கிய இலங்கைக்குள் தீர்வையே தமிழர்கள் இப்போது கேட்கிறார்கள்



### பற்றிக்ஸ் விழாவில் சம்பந்தன் வலியுறுத்து

நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன் புனித பத்திரிசியார் கல்லூரியின் தொழில் நுட்பமையத் திறப்பு விழாவில் உரையாற்றும் போது -

உள்நாட்டு பிரச்சினைகளை தீர்த்து வைப்பதன் ஊடாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன முழு உலகத்துக்கும் தலைவராக முடியும். தமிழ் மக்கள் தற்போது தனி நாட்டைக் கேட்கவில்லை. ஐக்கிய இலங்கைக்குள்ளேயே தமது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புகின்றனர். - என்றார்.

நாட்டை இப்படியே கொண்டு செல்ல முடியாது. நாடு மிகப்பெரிய துன்பங்க ளையும் பொருளாதார ரீதியான பின்னடைவுகளையும் சந்தித்துள்ளது. உள்நாட்டுப் பிரச்சினைகளை தீர்க்காமல் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது. இலங்கையை விட பின்தங்கி இருந்த பல நாடுகள் தற்போது முன்னேறியுள்ளன. எனவே தாம் எதிர் கொள்கின்ற சவால்களில் இருந்து ஜனாதிபதி வெளிவர வேண்டும். தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அவ்வாறு ஜனாதிபதி செய்வாராக இருந்தால் சர்வதேச சமூகம் அவரை உள்நாட்டின் பிரச்சினைகளை தீர்த்த தலைவர் என அங்கீகரிக்கும். - என்றும் அவர் மேலும் கூறினார்.

# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

## உறுப்பினரை மிரட்டாமல் சேவைக்கு வழிகாட்டுங்கள்!



கையில் 'காலைக்கதிர்' பத்திரிகையுடன் சந்தியடியில் வந்தமர்ந்தார் வாத்தியார். ஏற்கெனவே ஏரம்பர், ஜீவன், ரூபன், பேப்பர்தம்பி மற்றும் கச்சான் விற்கும் செல்லாச்சி ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

*"வரும்போதே கையிலை காலைக் கதிரோடை வந்திருக்கிறியள். அதிலை என்ன விசேசம்?"* என்று கேட்டார் ஏரம்பர்.

*"இது விசேசம் இல்லை. வேதனையைக் கிளப்பும் சமாசாரம்"* என்று சொன்ன வாத்தியார் வேதனைப் பெருமூச்சு விட்டுத் தொடர்ந்தார். *"ஊர்வம்பிலை போன தைமாதம் நாங்கள் "மாணவரைக் கூனர்களாக்கும் பாரமான புத்தகப்பைகள்' என்ற விசயம் கதைச்சனாங்கள். அப்போது 'பொருத்தமற்ற புத்தகப்பைகளால் பிள்ளைகள் தடுமாறி கீழே விழும் ஆபத்து இருப்பதாக' ஜீவன் சொன்னவன். அது பிரசுரமான பத்திரிகைதான் இது. நாங்கள் எச்சரிச்சதைப் போலவே ஒரு சிறுவன் புத்தகப்பை தடக்கி கீழே வீழ்ந்து இறந்தே போனானாம். இவ்வளவு எச்சரிச்சும், கடைசியிலை இப்படி நடந்திட்டுதே என்று கவலையாக இருக்கு'* என்று சொல்லி முடித்தார் வாத்தியார்.

*"சந்தியடியில் குந்தியிருந்து ஊர்வம்பளக்கிறவைதானே. அப்படி என்னத்தைப் பெரிசாச் சொல்லப்போகினம் என்று இளக்காரமாகக் கனபேர் நினைக்கினம். அரசியலுக்கு ரஜனி வரத் தயங்கினால், கமல் வந்து விடுவார் என்று போன வருசமே சொன்னம். இப்ப அதுமாதிரியே நடந்து போட்டுது. இந்தக்காலத்திலை 'மாடு சொல்லிக் கேட்கமாட்டம்; மணி கட்டின மாடு சொன்னாத்தான் கேட்பம்' என்று எல்லோரும் நிக்கினம். கேட்கிறவை கேட்கட்டும். நாங்கள் எங்களது சமூகக் கடமையைச் செய்வோம்'* என்றான் பேப்பர்தம்பி.

*"தெற்கிலை உள்ளூராட்சிச் சபைகளில் ஆகக் கூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சியைத் தள்ளிப்போட்டு, வேறு கட்சி உறுப்பினர் தவிசாளராகும் நிலை சாதாரணமாகி விட்டதாம். மாத்தறை மாநகர சபையிலையும் அதிக வாக்குப் பெற்ற கட்சியை விட்டு இன்னொரு கட்சியின் உறுப்பினர் நகரபிதா ஆகினதை எதிர்த்து நீதிமன்றப்படி ஏறியிருக்கினமாம். ஐக்கிய தேசியக் கட்சிக்கும் மஹிந்தரின்றை கட்சிக்கும் இடையிலைதானாம் இதிலை கடும் இழுபறி"* என்று அறிந்ததைச் சொன்னான் ரூபன்.

*"இங்கேயும் நாளையிலை இருந்து உள்ளூராட்சி சபைகளைக் கூட்டிற வேலைகள் தொடங்கப்போகுது. அதிலை என்ன கண்றாவிகளையெல்லாம் பார்க்கப் போறமோ?"*என்றுளிச்சலாகச் சொன்னாள் செல்லாச்சி.

இதைக் கேட்டவுடன் ஜீவன்' *"அதுக்கேன் கவலைப்படுகிறாய் செல்லாச்சி. ஆட்சி அமைக்கிற எல்லோரும் சொல்லி வைச்ச மாதிரி'. மக்கள் சேவைக்காகத்தான் கூட்டணி அமைச்சு ஆட்சி நடத்த துடியாய்த் துடிக்கிறம்' என்று தெளிவாகச் சொல்லுகினம். ஒருத்தராவது பதவியைப் பிடிக்கத்தான் கொள்கை கொத்தமல்லியை எல்லாம் காத்திலை பறக்க விட்டு ஆலாய்ப் பறக்கிறம்' என்று சொல்லவில்லை. ஆனபடியால் வடக்கிலை தேனும் பாலும் ஓடப் போகுது. கொஞ்சம் பொறு"* என்று சொல்லி விட்டு மீண்டும் கைபேசிக்குள் மூழ்கினான்.

ஜீவன் சொன்னதைக் கேட்டுச் சந்தியடியில் சிரிப்புப் பரவியது.

அப்போது செல்லாச்சி' *"ஒருத்தன் கோவிலிலை தாலிகட்டி மனிசியோடை வீட்டை வந்தானாம். வாறவழியெல்லாம் 'அவனைப் பார்க்காதை; இவனைப் பார்க்காதை' என்று நச்சரிச்சுக் கொண்டே வந்தானாம். வீட்டு வாசல் வந்தவுடன் அவள் 'இப்படிச் சந்தேகப்படுகிறவனோடை வாழ முடியாது என்று தாலியைக் கழட்டி எறிஞ்சு போட்டு போட்டாளாம். அவளுக்கு மானம் ரோசம் இருந்ததாலை அப்படி செய்தாள். அதுக்காக எல்லோரிட்டையும் இதை எதிர் பார்க்க முடியுமே?"* என்று பொடி வைத்துக் கதைத்தாள்.

*"மாவீரர் உரைக்கு பாலசிங்கத்தார் விளக்கவுரை சொல்லுற மாதிரி, செல்லாச்சியின்றை கதைக்கும் இனி யாராவது பொழிப்புச் சொல்ல வேணும்"* என்றார் ஏரம்பர்.

*"அதுக்கு விளக்கத்தை நீங்கள் செல்லாச்சியிடமே கேட்டுத் தெரிஞ்சு கொள்ளுங்கோ."* என்று சிரித்தபடி சொன்ன வாத்தியார்' *"இந்தமுறை கட்சிகள் தமது உறுப்பினர்களைக் 'கட்சி சொல்லுறதுக்கு மாறாக நடந்தால் பதவி போயிடும் – கடும் நடவடிக்கை எடுப்பம் – கட்சி நினைச்சால் பதவியைப் பறிக்கிற மாதிரித்தான் விதிகள் இருக்கு 'என்றெல்லாம் வெருட்டுகினம். அப்படித் தங்கடை உறுப்பினர்களில் நம்பிக்கை இல்லாமல் சொல்லுகினமா. இல்லையென்றால் தங்களிலேயே நம்பிக்கை இல்லாமல் வெருட்டுகினமா என்று தெரியவில்லை"*என்று சொன்னார்.

அதற்குப் பேப் பர்தம்பி, *"உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகளவில் புதுமுகங்கள் தெரிவாகியிருக்கினம். அதிலையும் இட ஒதுக்கீட்டால் பெருமளவில் பெண்களும் போயிருக்கினம். அவை யெல்லாம் 'கண்ணைக் கட்டிக் காட்டிலை விட்ட மாதிரித்தான் 'இருக்கினம். அவைக்கெல்லாம் எப்படி நடக்க வேணும், அதிகாரம் என்ன, எப்படி சேவை செய்யவேணும் என்றெல்லாம் சொல்லிக் கொடுத்து வழிப்படுத்திறதை விட்டுப் போட்டு,யாரைப் பார்த்தாலும் கட்சி மாறாதை என்று வெருட்டிறதாலை என்ன பயன் என்றுதான் தெரியவில்லை"* என்றான்.

*"இதிலை இன்னொரு கூத்தும் நடக்குது. சபைத் தலைவரைத் தெரிவு செய்யிறதுக்கு இரகசிய வாக்கெடுப்புக் கேட்கக் கூடாதுஎன்றுசிலகட்சிகள்தங்கடைஉறுப்பினர்களுக்குத் தார்க்குச்சி விடுகினம். ஆனால் காலைக்கதிரிலை பிரசுரமாகியிருந்த விதிப்படி, ஆகக்கூடிய உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பைக் கோரினால் இரகசிய வாக்கெடுப்பு நடக்குமாம். அப்படிப் பார்த்தால் அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சி பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினாலும், எதிர்த் தரப்புகள் – மொத்தமாக அதிக உறுப்பினரைக் கொண்டிருப்பதால் – இரகசிய வாக்கெடுப்பைக் கோரினால் தலைவர் தெரிவு இரகசிய வாக்கெடுப்பின்படிதானே நடக்கும்"* என்றான் ரூபன்.

அதற்குப் பேப்பர்தம்பி, *"இப்படி நடக்க வாய்ப்பு இருக்குத்தான். ஆனால் இதற்குத் திரைமறைவில் கட்சித் தலைமைகளிடம் பேச்சுவார்த்தை நடக்க வேண்டியிருக்கும். அப்படி கதைச்சுப் பேசக்கூடியவர்கள் – முன்னர் ஒரே பாதையில் பயணித்து,இப்போது எதிர்க் கன்னைகளில் இருப்பவர்கள் – வேண்டுமானால் கதைச்சுப் பேசி இரகசிய வாக்கெடுப்பை நடத்த வைக்கலாம். ஆனால் கஞ்சி போட்ட வேட்டி மாதிரி 'விறைப்பாக' பூகோள அரசியல் கதைக்கிறவை,கிடைத்த வெற்றி தங்கடை தடம் மாறாத் தனி வழிக்குக் கிடைச்சதாக நம்புகினம். இந்த நிலையிலை மாற்றாருடன் கதைச்சுப் பேசி அரசியல் செய்ய முன்வருவினமோ தெரியாது. நாங்கள் குரலற்ற மக்களுக்காகக் கதைக்கிறனாங்கள். எந்தக் கட்சியையும் தனிப்பட்ட முறையில் பாராட்டவும் கூடாது;தாக்கவும் கூடாது. நடக்கிறதைக் கண்டு கொள்ளுவோம்"* என்றான்.

அப்போது கைபேசியிலிருந்து தலை நிமிர்ந்த ஜீவன், *''இந்தவருட ஜெனீவாத் திருவிழா ஒரு வழியாக முடிஞ்சு போச்சு. நாங்களும் 'ஐக்கியநாடுகள் சபை கிடுக்கிப் பிடி;அரசுக்கு நெருக்கடி' என்று ஊடகங்களிலை பார்த்துச் சந்தோசப்படுவோம். ஆனால் இங்கு என்ன காரியம் நடந்தது என்று பார்க்கமாட்டம். இப்படியே காலம் போகுது.அப்ப ஏதாவது சிறை சென்ற தந்தை பின்னேதானும் சென்ற மகள்' என்ற மாதிரி உணர்வுபூர்வமாக சம்பவம் சிக்கும். அதை கொஞ்ச நாளைக்கு சமூக ஊடகங்களிலை பரபரப்பாக வைச்சிருப்பம். அதோடை இது இப்பதான் தெரியிற மாதிரியும், இந்தமாதிரி இவைக்கு மட்டும்தான் நடக்கிற மாதிரியும் கூடிநின்று கும்மியடிப்பம். அதுக்குப் பிறகு இன்னொரு ஐயிட்டம் வந்து சிக்கும். பிறகு அதைக் கொஞ்ச நாளைக்குப் பிடிச்சுத் தொங்குவம் . இப்படியே காலம் போகுதே தவிர, எந்தப் பிரச்சினைக்கும் நிரந்தரத் தீர்வு கிடைக்கிற மாதிரித் தெரியவில்லை"* என்று வேதனையுடன் சொன்னான்.

அதற்குச்செல்லாச்சி, *''காணிவிடுவிப்பும், காணாமற் போனோர் பிரச்சினையும் ஒரு மாதம் தாமதமானாலும் இழப்பு 'பத்தோடை பதினொன்றாகத்தான்' இருக்கப்போகிறது. ஆனால்சிறையில்உள்ளஅரசியல்கைதிகளின் விடுதலை தாமதிக்கிற ஒவ்வொரு வினாடியும், அந்தக் கைதிகளுக்குச் சுதந்திர வாழ்க்கைஇழக்கப்படுவதாகவேஇருக்கிறது. ஆனால் நாங்கள் ஜெனீவாவில் 'குழாயடிச் சண்டை 'போட்டு மார்தட்டிறம். இன்று வரைக்கும் புலம்பெயர்ந்தவர்களுக்கும் இங்குள்ளவர்களுக்கும் உலக நாடுகளைக் கையாள்வதற்கும் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு பெறவும் ஒரு இணைந்த முன்னெடுப்பு கிடையாது. கச்சதீவுக்கு இந்தியாவிலை இருந்து அந்தப் பக்கத்தாலையும், இங்கையிருந்து இந்தப் பக்கத்தாலையும் போய், தனித்தனியாக தங்கடை அலுவலைப் பார்க்கிற மாதிரித்தானே நடக்கினம். ஏனென்றால் ஒருத்தருக்கும் இங்கே பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால், தலைமுடிகூடக் குறையப் போவதில்லை. ஆனால் இழப்புகளை அனுபவிக் கும் நாங்கள் எல்லாத்தையும் அவை பார்ப்பினம் என்று காத்திருக்கிறம்.. இது எங்கே போய் முடியப் போகுதோ?'* என்றாள்.

'அப்ப நீங்கள் போய்ச் செய்ய வேண்டியதுதானே' என்று சிடுசிடுத்த ஏரம்பர் *"இந்தமுறை எங்கடை கூட்டங்களைக் குழப்பிறதுக்கென்றே இங்கையிருந்து சென்ற சிலர் எங்கடை ஆக்கள் கதைச்ச இடங்களிலையெல்லாம் போய் குழப்பியடிச்சவையாம். அவையோடை எங்கடை ஆக்கள் எவ்வளவு மல்லுக்கட்டிக் காரியத்தை ஒப்பேற்ற வேண்டியிருக்கு. அது விளங்காமல் சந்தியிலை இடம் கிடக்கு என்றதுக்காக இருந்து கொண்டு வாய்க்கு வந்ததையெல்லாம் கதைக்கிறியள். நீங்கள் கதைக்கிறதையும் காலைக்கதிர்காரர் பிரசுரிக்கினம்"*என்று கோபத்துடன் சொன்னார்.

*"ஏன் கோவிக்கிறியள்?"*என்று அவரைச் சாந்தப்படுத்திய பேப்பர்தம்பி, *"யாரையும் குறை சொல்லும் நிலையில் நாங்கள் இல்லை என்பதுதான் உண்மை. ஏனென்றால் அன்றாடம் வாழ்க்கையை நகர்த்தவே திணறுகிற சாதாரண மக்கள் சார்பில் தான் நாங்கள் கதைக்கிறம். எங்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தர முயற்சிக்கிற எல்லாக் கட்சிகளையும் , அனைத்து அமைப்புகளையும் நம்பிக்கையுடனும் நன்றியுடனும் பார்க்கிறோம். ஆனால் எங்களதும் அடுத்த தலைமுறையினதும் இருப்பையே தீர்மானிக்கும் விடயத்தில் ஈடுபடுபவர்களது செயற்பாடுகள் பற்றி எதுவுமே கதைக்கக் கூடாது. விமர்சிக்கக் கூடாது என்று சொல்வது நியாயமில்லைத்தானே"* என்று சொல்லி விட்டு ஏரம்பரை ஆழமாகப் பார்த்தான்.

பிறகு தீர்க்கமாகப் பேசத் தொடங்கினான்.

*"சட்டத்தரணி ஒருவர் தனது குறுக்கு விசாரணையில் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விடை தெரியாத கேள்வியைக் கேட்பதில்லை என்று சொல்லுவினம். அது மாதிரி ஜெனீவாக்குப் போகும்போதே, 'இங்கேயிருந்து இப்படி ஒரு குழு வருகிறது, அது இப்படியெல்லாம் செய்யும்' என்று எந்த முன்னாயத்தமும் இல்லாமலா எங்கடை ஆக்கள் போயிருப்பினம்., ஆகாசக்கப்பலில் ஏறிச் சீமைக்குப் போற இராசாக்கள், 'எதிர்த்தரப்பு இப்படியெல்லாம் சொல்லுகிறது, ஆனால் அது இப்படித்தான்' என்று முதலிலேயே விளக்கியிருந்தால் ,குழப்புகிறவர்கள் வாதிடவே எதுவுமில்லாமல் போயிருக்கும். அதை விட்டிட்டுப் பள்ளிக்கூடப் பொடியள் மாதிரி கோபத்தில் எகிறிக் குதித்து, கடைசியில் எங்கடை கதையைக் கேட்கவே ஒருத்தரும் வராமல் செய்வதை எப்படி ஏற்பது? எதிர்த்தரப்பு தாம் வந்த காரியம் நிறைவேறிய திருப் தியுடன் சிரித்தபடி செல்வதை ஒளிக்கீற்று களில் பார்க்கும்போது, தினம் தினம் செத்துப் பிழைக்கும் நாங்கள் எப்படி எதுவும் சொல்லாமல் இருக்க முடியும்?"* என்று கேட்டான் பேப்பர்தம்பி.

இதனையடுத்து எழுந்து நின்ற வாத்தியார், *"இனியாவது அடுத்த தேர்தலைப் பற்றி மட்டும் யோசிக்காமல், அடுத்த தலைமுறையைப் பற்றியும் எங்கடை அமைப்புகளும், அழுத்தக்குழுக்களும், அரசியல் கட்சிகளும் யோசிக்க வேண்டும். வேறை என்னத்தைச் சொல்லுறது'* என்றபடியே நடக்கத் தொடங்கினார்.

மற்றவர்களும் அவரைத் தொடரவே அமைதியானது சந்தியடி.



# செப்புகிறார்... சின்னப்பு!

வணக்கமுங்கோ!

இப்ப ரண்டு கிழமைக் குள்ளை ரண்டு விசயங்களை என்னால அறிஞ்சு கொள்ள முடிஞ்சிருக்குது பாருங்கோ!

இந்த ரண்டு விசயங்களில ஒண்டு காலம் கடந்த ஞானோதயம் எண்டு சொல்லலாம். மற்றது ரண்டாவது பட்டுக்களைச்சு அதன் மூலம் புத்தி தெளிஞ்சு நிண்டதால ஏற்பட்ட ஞானோதயம் எண்டும் சொல்லலாம்.

முதலாவதாக – நான் சொல்ல வாற விசயம் என்னவெண்டால்...

முந்தி இயக்கமும் ஆமியும் சண்டை பிடிக்கேக்கை 'அமைதிப் படை' எண்ட போர்வையைப் போத்து மூடிக் கொண்டு வந்து, எங்கட வடக்கு, கிழக்கில இந்தியன் ஆமியள் செய்த அட்டகாசங்கள் கொஞ்சம் நஞ்சமில்லைக் கண்டியளே!

பிறகு இந்தியன் ஆமியள் போன பிற்பாடு, தமிழ்நாட்டுக்கு வந்த பிரதமர் ராஜீவ் காந்தி குண்டு வெடிப்பில கொல்லப்பட்டதும், அந்தக் குண்டு வெடிப்பை புலியள்தான் செய்ததெண்டும் சந்தேகத்தின் பேரில முருகன்,நளனி, பேரறிவாளன்... எண்டு ஏழு பேரைப் பிடிச்சு இப்பவும் மறியலுக்கை வைச்சிருக்கிறதும் கடந்த காலச் சங்கதிகள் எண்டதும் உங்களுக்குத் தெரியும்.

ஆனா – இப்ப என்னடாவெண்டால், தமிழ்நாட்டில குண்டு வெடிப்பில கொல்லப்பட்ட ராஜீவ் காந்தியின் பிள்ளையளில ஒருவரான ராகுல் காந்தி என்ன சொல்லுறாரெண்டால் –

தன்ர தகப்பன்ர கொலைச் சம்பவத்தோட சம்பந்தப்பட்ட குற்றவாளியளை மன்னிச்சு விட்டதாகவும், புலியள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் மரணத்தால, தான் மனவேதனை அடையுறதாயும் சொல்லியிருக்கிறார்.

இதுதான் பாருங்கோ! நான் ஆரம்பத்தில சொன்ன காலம் கடந்த ஞானோதயம்!

என்னதான் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை ஊர் உலகம் பயங்கரவாதியாகச் சொல்லிக் கொண்டாலும் அவருக்குள்ள இருந்த ஆளுமைகளையும் வீரதீரச் செயற்பாடுகளையும் மெச்சித்தான் ஆக வேணும்...எண்டதை ராகுல் காந்தியின்ர மன மாற்றம் வெளிப்படுத்திக் காட்டுதல்லோ.

ஒரு காலத்தில தன்ர தந்தையைச் சாக்காட்டினது பிரபாகரனுடைய புலியள் இயக்கம் தான் அதாலை புலிகளின் தலைவரை என்னால மன்னிக்கவே முடியாது... எண்டு பகிரங்கமாகவே பேட்டி குடுத்த ராகுல் காந்தி தான் இப்ப பிரபாகரனின் மரணத்தால மன வேதனைப்படுகிறன் எண்டு சொல்லியிருக்கிறார்.

பொதுவாகப் பார்க்கப் போனால் – ஒரு குடும்பத்தில ஒருவருக்கு அநியாய இழப்பொண்டு ஏற்பட்டதெண்டால், அது ஆரால ஏற்படுத்தப்பட்டதோ, அவர் மீது குடும்பத்தவர்களுக்கு ஆத்திரமும் பழி வாங்கிற எண்ணமும் வாறது இயல்பு.அந்த வகையில பார்த்தால், அமைதிப் படை என்ற பெயருக்கு எதிர்மாறான காரியங்களை இந்தியன் ஆமியள் நடத்தினத்துக்குப் பதிலடியாக தம்பி பிரபாகரனும் ராஜீவ் காந்தியைப் பழிவாங்கியிருக்கலாம்? இதே மாதிரி தன்ர தகப்பன் செத்ததைப் பாத்திட்டு ராகுல் காந்தியும் பிரபாகரனைப் பயங்கரவாதி என்ற எண்ணப்பாட்டோடை இருந்திருக்கலாம்?

ஆனா – பிரபாகரன் செத்திட்டார் எண்டும், அவர் எப்படிச் சாவடிக்கப்பட்டார் எண்டதையும் ராகுல் காந்தி அறிஞ்ச பிற்பாடு அவருடைய மனச்சாட்சியே அவரை அறுத்தெடுக்கத் தொடங்கியிருக்க வேணும் போல கிடக்குது.

ஒரு மக்கள் கூட்டத்தின் தலைவன்.... ஓர் இராணுவக் கட்டமைப்பின் படைத் தளபதி... உலக நாட்டின் கண்களை தன்ர ஆளுமையால ஆச்ச ரியப்பட வைத்தவன்... திடீரென அவலமாக; அகாலமாகச் செத்திட்டார்? எண்டதை அறிஞ்ச எவருக்கும் பிரபாகரன் மேல அனு தாபம் கொள்ளத்தான் செய்வினம்.... எண்டதுக்கு ராகுல் காந்தி நல்லதொரு உதாரணம் கண்டியளே!

சரி இது கிடக்கட்டும்!

பட்டுக்களைச்சு, அதன் மூலம் புத்தி தெளிஞ்சு நிண்டதால ஏற்பட்ட ஞானோதயம் பற்றி இப்ப ரண்டாவதாகச் சொல்ல வாறன்.

அரசுக்கு ஆதரவு வழங்கினதால தான், சனங்கள் எல்லாம் ஒண்டாச் சேர்ந்து எங்கட கட்சிக்கு எதிராக வாக்களிச்சுப் போட்டு இருக்குதுகள்... எண்டு எங்கட சம்பந்தன் ஐயா திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

அந்த நேரம் டக்ளஸ் ஐயா மஹிந்தராசாவோடை சேர்ந்து அரசியல் செய்யேக்கை டக்ளஸ் ஐயாவைப் பற்றி எத்தனை பேர் எத்தனை விதமாக் கதைச்சவை.

மஹிந்தவுக்கு டக்ளஸ் ஐயா ஆதரவு வழங்கியது... தப்பெண்டதைத் தான் எங்கட சனங்கள் கடந்த உள்ளூராட்சிச் சபை எலக்சனில சம்பந்தன் ஐயாவின்ர கூட்டமைப்புக்கும் செய்து காட்டியிருக்குதுகள்.

எந்தவொரு சிங்கள அரசுக்கும் ஆதரவு வழங்கினால், உங்களை யெல்லாரையும் எங்களைத் திரும்பிப் பார்க்க வைப்பம்... எண்டு எங்கட சனத்தின் மன உணர்வின் வெளிப்படுத்தலைத் தான், சம்பந்தன் ஐயாவினுடைய – அரசுக்கு ஆதரவு வழங்கிய தாலைதான், சனங்கள் எல்லாம் ஒண்டாச் சேர்ந்து, எங்கட கட்சிக்கு எதிராக வாக்களிச்சுப் போட்டு இருக்குதுகள்... எண்ட சொற்பிரயோகம் பகிரங்கப்படுத்திக் காட்டுது பாத்தியளே!

இதிலை இருந்து என்ன விளங்குதெண்டால், ஓர் இனம்; சனத்துக்கான நியாயமான விடுதலைப் போராட்டத்தைக் குறிச்சும், சனங்கள் போடுற 'புள்ளடி' என்ற 'வாக்குப் பிச்சை'யைக் குறிச்சும் எங்கட தமிழ் அரசியல் வாதிகள்... அது ஆராக இருந்தாலும் சரி மெத்தக் கவனமாக இருக்க வேணும்; செயற்பட வேணும்... எண்டது தெரியவருகுதல்லோ!

# அரசியல் கிணறு வெட்டினால்...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அந்நபரும் ஏற்கனவே திட்டமிட்டவாறு நாட்டை விட்டுவெளியேறி தற்பொழுது ஐரோப்பிய நாடொன்றில் குடும்பத் தலைவனாகி விட்டார். தற்பொழுது அவருக்கும் அவர் முன்னர் இருந்த இயக்கத்திற்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை.

பின்னர் குறிப்பிட்ட அந்த தமிழ் ஊடகவியலாளரும் இலங்கையில் எதிர்நோக்கிய அரசியல் அழுத்தங்கள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிவிட்டார். வடக்கில் 1987 இல் வடமராட்சியில் லிபரேஷன் ஒப்பரேஷனுக்கு உத்தரவிட்டு பல இன்னுயிர்கள் பலியாகியமைக்குக் காரணமாக இருந்த லலித் அத்துலத் முதலியும் தென்னிலங்கையில் இன்றும் மர்மமாக இருக்கும் ஓர் அரசியல் ஒப்பரேஷனில் பரலோகம் சென்றுவிட்டார்.

2009 இறுதியுத்தத்தின் பின்னர் அதனை வெற்றிவிழாவாக கொண்டாடிய மஹிந்தரும் அவருடைய தம்பி கோட்டாபய ராஜபக்ஷவும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் கேக்வெட்டியும் பாற்சோறு உண்டும் மகிழ்ந்தார்கள். பின்னர் தோன்றிய முறுகலினால் வெள்ளைக் கொடி விவகாரத்தில் சரத்பொன்சேகா சிறை வைக்கப்பட்டார்.

விடுதலையாகியதும் மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சி நன்றிக்கடனாக சரத் பொன்சேக்காவுக்கு ஃபீல்ட் மார்ஷல் பதவி உயர்வும் வழங்கியதுடன் அனைத்து வேதனக் கொடுப்பனவுகளையும் (இலட்சக்கணக்கில்) வழங்கியது. மக்களின் தேவைக்களுக்கு முன்னர், முன்னாள் சிறைக்கைதி சரத்பொன்சேகாவுக்குத்தான் நல்லாட்சி நல்லது செய்தது! இன்று சரத் பொன்சேகாவும் நாடாளுமன்றில் அங்கத்தவர்.

அதேவேளையில், அரசியல்கைதியாக தொடர்ந்து சிறைவைக்கப்பட்டிருக்கும் ரகுபதி சர்மாவின் மனைவி திருமதி வசந்தி ரகுபதி சர்மாவும் சுமார் 15 வருட காலம் சிறைவைக் கப்பட்டு குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டார். ரகுபதி சர்மாவுக்கு நீதிமன்றம் சுமார் 30வருட காலத்திற்கு ஆயுள் தண்டனை விதித்திருக்கிறது.

அப்படியானால் சுமார் 15 வருடகாலம் அநாவசியமாக சிறைவைக்கப்பட்ட திருமதி வசந்தி ரகுபதிசர்மா குற்றமற்றவர் என்றால், அவர் சிறைவைக்கப்பட்டதற்கான நட்டஈடு எங்கே...?

சிறையிலிருந்து வெளியேவந்தவருக்கு ஃபீல்ட் மார்ஷல் பதவியுயர்வு. இலட்சக்கணக்கான ரூபாய்கள் வேதனம். ஆனால், அரசியலே தெரியாமல் தனது குழந்தைகளையும் குடும்பத்தையும் பராமரித்து, கணவரின் கோயில் திருப்பணியிலும் ஈடுபட்டு வந்திருந்த நிலையில் சந்தர்ப்பவசமாக சிறைக்கூண்டில் அடைபட்ட அந்தக் குடும்பத் தலைவிக்கு 15 வருடங்களின் பின்னர் கிடைத்த நீதி என்ன...?

இதுதான் நல்லாட்சியின் அரசியல் ஜனநாயகம்.

இதனைத் தட்டிக்கேட்கக்கூடிய வழக்கறிஞர்களின் கூடாரமாகத் திகழ்வதுதானே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. கேட்டார்களா...?

கேட்கமாட்டார்கள் இவர்களும்தானே முள்ளிவாய்க்கால் அழிவின் சுவடுகள் மறையும் முன்னர் 2010 ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரித்தவர்கள்.

சமீப காலத்து உண்மைச்சம்பவம் ஒன்றை திரும்பிப்பார்ப்போம்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் புதல்வியும்தற்பொழுது வீடமைப்பு அமைச்சராக இருக்கும் சஜித்பிரேமதாஸவின் சகோதரியுமான துலாஞ்சலி பிரேமதாஸ மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் ஒரு வங்கியில் பல போலி வெளிநாட்டு நாணயத் தாள்களை தமது வங்கிக்கணக்கில் வைப்பிலிடச்சென்றபொழுது அங்கு தடுத்துவைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இது ஒரு குற்றச்செயல். ஆனால், அவரை சட்டத்தின் பிடியில் சிக்கவிடாமல் காப்பாற்றினார் மஹிந்தராஜபக்ஷ. அதற்கு அவர் சொன்ன காரணம் துலாஞ்சலியின் தாய் ஹேமா பிரேமதாஸவும் சஜித் பிரேமதாஸவும் தன்னிடம் கெஞ்சிக்கேட்டமையால் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டு விடுவித்தாராம்.

எப்படி இருக்கிறது கதை...?

அந்தக்குற்றச்செயல் நிரூபிக்கப்பட்டிருந்தால் இன்று துலாஞ்சலியும் சிறையில் தான். இன்று சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு இப்படி யாராவது தேவ தூதுவர்களாக தோன்றி உதவ மாட்டார்களா...?



இந்தத் தகவல்களின் பின்னணிகளுடன் இன்று சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை நாம் பார்க்க வேண்டும்.

பொதுமன்னிப்பா, பிணைவழங்கிவிட்டு வாரம் தோறும் பொலிஸ் நிலையம் முன்னால் அவர்களைத் தோன்றவைப்பதா, அல்லது விடுதலைப்புலி போராளி தமிழினி சிவகாமிக்கு செய்ததுபோன்று புனர்வாழ்வு அளித்து நிரந்தர விடுதலை தருவதா...? என்று அரசும் அமைச்சர்களும் சிறைச்சாலைகளின் நிர்வாகத்தினரும் ஆழ்ந்து யோசிக்கிறார்கள்.

இந்த யோசனைகளில் ஆழ்ந்திருப்பவர்களுக்கு மற்றும் ஒரு தகவல்:

**உலகில் ஆயுத உற்பத்தி**

ஆயுத உற்பத்தி செய்பவர்களுக்கு தண்டனை இல்லை. அது ஒரு சர்வதேச வர்த்தகம். அமெரிக்காவின் ஜோர்ஜ்புஷ் குடும்பமும் அவருடைய நெருங்கிய நண்பர்கள் சிலரும் ஆயுத வியாபாரத்தில் கைதேர்ந்தவர்கள். அவர்களின் கனரக ஆயுத தொழிற்சாலைகளில் உற்பத்திசெய்யப்பட்ட ஆயுதங்களுக்கு உலக சந்தை தேவைப்படின் பல வறியவளர் முகநாடுகளிலும் மூன்றாம் உலக நாடுகளிலும் ஏதாவது ஒரு கிளர்ச்சி தேவை. அது மதநீதியாகவோ மொழி அடிப்படையிலோ இன நீதியாகவோ இருந்தாலும் சரி. அரசுக்கும் அதனை எதிர்க்கும் இயக்கங்களுக்கும் ஒரே நேரத்தில் ஆயுதங்களை விநியோகிக்கும் வர்த்தகர்கள் தான் உள்நாட்டுப் போர்களின் சூத்திரதாரிகள். இலங்கை உட்பட பல கீழைத்தேய நாடுகள் பாதுகாப்புக்கென கோடிக்கணக்கான டொலர் நிதியை வருடம்தோறும் ஒதுக்கிக் கொண்டுதான் இருக்கின்றன. அவ்வாறு நிதி ஒதுக்கினால் தான் சர்வதேச ஆயுத வர்த்தகர்களின் பிழைப்பு நடக்கும்.

இலங்கையில் போர்க்காலத்தில் இரண்டு தரப்புகளிலும் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் உள்நாட்டு தயாரிப்புகளா...?

உகண்டா, சோமாலியா, எதியோப்பியா முதலான வளர்முக வறிய ஆபிரிக்க நாடுகளில் நடந்த உள்நாட்டுப் போர்களிலும் சிரியா மற்றும் பல நாடுகளிலும் இன்றும்தொடரும் போர்களிலும் பயன்படுத்தப்படும் ஆயுதங்களை அங்கெல்லாம் அனுப்பிக்கொண்டிருப்பவர்கள் யார்...?

இவ்வாறு ஒரு சர்வதேசக் குற்றம் பகிரங்கமாக உலகில் அரங்கேறிக்கொண்டிருக்கையில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்போரில் இவர்களுக்கு எந்தத் தண்டனையும் இல்லை. சிறைவாசமும் இல்லை.

**நீதியே நீதான் கேட்கவேண்டும்**

நீதிமன்றங்களில் நீதி தேவதை தனது கண்களை கறுப்புத்துணியால் மூடிக்கொண்டிருப்பது இதற்காகத்தானா...?

இலங்கை அரசியல் அரங்கில் இன்றைய நல்லாட்சியில் (?) நல்லவர்கள் இருப்பார்கள் என நாம் நம்பினால், அவர்களின் தயக்கமும் தாமதமுமே தீமையாய் முடிந்துவிடும் ஆபத்தும் இருக்கிறது என்ற ஷேக்ஸ்பியர் கூற்றையே அவர்களுக்கும் பொருத்தமானதாக அழுத்திச் சொல்கின்றோம். ★



# இப்படியும் பச்சை குத்தலாம்?

போலந்து நாட்டைச் சேர்ந்த 32 வயது அடம் கர்லிகேலின் இன்ஸ்ரகிராம் படங்களைப் பார்ப்பவர்கள் ஆச்சரியமடைகிறார்கள். படங்களை நெகடிவ் பில்டர் போட்டு எடுத்திருக்கலாம் என்று நினைப்பார்கள். ஆனால் அடம் படங்களில் மட்டுமல்ல, நிஜத்திலும் அப்படியேதான் இருக்கிறார்!

முகம், உடல், கண் உட்பட அனைத்து இடங்களிலும் அடர் சாம்பல் வண்ணத்தில் டாட்டு (Tatoo) போட்டுக்கொண்டிருக்கிறார். தலை, புருவம், இமை முடிகளுக்கு டை அடித்து



வெள்ளையாக மாற்றிவிட்டார்.

நான் இருபது ஆண்டுகளாக டாட்டு பயன்படுத்தி வருகிறேன். ஆரம்பத்தில் சில எழுத்துகளைத்தான் எழுதி வைத்திருந்தேன். காலம் செல்லச் செல்ல டாட்டு மீது ஆர்வம் அதிகரித்துவிட்டது. இன்று என் உடலில் 90% டாட்டுவால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கூட டாட்டுவை நிறுத்தும் எண்ணம் வரவில்லை. 99% வரை டாட்டு போடும் திட்டத்தில் இருக்கிறேன். என்னுடைய கடினமான காலகட்டங்களை இந்த டாட்டுகளால்தான் எளிதாகக் கடந்து வந்திருக்கிறேன். 22 வயதில் பெருங்குடலில் புற்றுநோய் வந்துவிட்டது. நோயிலிருந்து மீளவும் கடினமான சிகிச்சையிலிருந்து வெளிவரவும் எனக்குத் துணையாக நின்றது டாட்டுதான்.

என்னுடைய இந்த டாட்டு விருப்பத்தை மற்றவர்களால் புரிந்து கொள்ள முடியாது. எனக்கு மன அழுத்தம், சாப்பிடுவதில் குறைபாடு, தற்கொலை எண்ணம் போன்றவையும் வந்திருக்கின்றன. அவற்றிலிருந்து என்னை மீட்டெடுத்ததும் டாட்டுகள்தான் என்கிறார் அடம்.

# சிக்கலில் ட்ரம்பின் பெயர்

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 28 வயது சையத் அசாதுல்லா போயா ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். தன்னுடைய மகனுக்கு அதிஷ்டம் கொட்டும் என்ற நம்பிக்கையில் டொனால்ட் ட்ரம்ப் என்று பெயர் வைத்தார். ஆனால் பெயர் வைத்த நாள் முதல் இன்றுவரை பெரும் சங்கடத்தைச் சந்தித்து வருகிறார். 2016ஆம் ஆண்டு சையதின் மனைவி ஜமிலாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது. கோடீஸ்வரரான ட்ரம்ப் அப்போது அமெரிக்க அதிபர் தேர்தலில் பரபரப்பாக இருந்தார்.

கொந்தளிப்பான இவரது அரசியல் வாழ்க்கையைப் பற்றி சையத் கண்டுகொள்ளவில்லை. அவருக்கு வெற்றி பெற்ற தொழிலதிபர் என்ற முகம் மட்டுமே கண் முன் தெரிந்தது. ட்ரம்ப் எப்படிப் பணக்காரரானார் என்ற மொழிபெயர்ப்பு நூலையும் படித்து முடித்தார். இதனால் மகன் பிறந்தால் ட்ரம்ப் பெயர் வைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். குழந்தை பிறந்தவுடன் இன்ப அதிர்ச்சியடைந்தார். ட்ரம்ப்பை போலவே குழந்தை யின் தலை முடி செம்பழுப்பு நிறத்தில் இருந்தது. உடனே தான் பெயர் வைக்க முடிவெடுத்தது மிகச் சரி என்ற முடிவுக்கு வந்தார்.

இதைச் சொன்னபோது மனைவிக்கு விருப்பமில்லை. சையதின் பெற்றோரும் இஸ்லாமியப் பெயரைத்தான் வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். சையத் கேட்க வில்லை. அதனால் இஸ்லாமிய குருவிடம் அழைத்துச் சென்றனர். அவர் வேறு மதப் பெயரை வைப்பது இஸ்லாமை அவமதிப்பது என்றார். ஆனாலும் தன் கொள்கையில் உறுதியாக இருந்தார் இவர்.




நாள்கள் செல்லச் செல்ல ஓர் அமெரிக்கரின் பெயர் சூழலை மோசமாக்கிக்கொண்டே சென்றது. உடனே வேலையை உதறிவிட்டு, காபூலில் குடியேறினார் சையத்.

நான் நிறைய ஆராய்ச்சிகள் செய்து, உத்வேகம் பெற்றுதான் என் மகனுக்குப் பெயரைச் சூட்டினேன். ட்ரம்ப்பை மிகவும் நேசிக்கிறேன். பொருளாதாரத்தில் அவர் மிகச் சிறந்தவர். அரசியலிலும் உலகைக் கலக்கிவருகிறார். அதனால் நான் அவரை மிகச் சிறந்த மனிதராகக் கருதுகிறேன். நான் ஒவ்வொரு தடவை ட்ரம்ப் என்று கூப்பிடும்போதும் என் அப்பா மிகவும் கோபமடைகிறார். அவரால் இந்தப் பெயரைச் சகித்துக்கொள்ளவே முடியவில்லை.

சென்ற வாரம் ஒரு கூட்டம் வந்து இந்தப் பெயருக்காகவே எங்களை மிரட்டிச் சென்றது. என் மனைவி பேஸ்புக்கில் குழந்தையின் பெயரைப் பயன்படுத்தும் போது மிக மோசமான பின்னூட்டங்கள் இடப்படுகின்றன. சிலர் மிரட்டவும் செய்கிறார்கள். மிக மோசமான ஒரு மனிதரின் பெயரை எப்படிக் குழந்தைக்கு வைத்தீர்கள் என்று கேட்காதவர்களே கிடையாது. குடும்பத்தினர் எப்போதும் அச்சத்தில் இருக்கிறார்கள். என்ன ஆனாலும் சரி, குழந்தையின் பெயரை மாற்றுவதாக இல்லை. நான் பெற்ற குழந்தைக்கு எனக்குப் பிடித்த பெயரைக் கூட வைக்க முடியவில்லை என்றால் அநியாயம் இல்லையா? என் குழந்தை வளர்ந்து, தன் பெயரை மாற்ற விரும்பினால் மாற்றிக்கொள்ளட்டும். அதுவரை டொனால்ட் ட்ரம்ப் என்ற பெயரே இருக்கட்டும் என்கிறார் சையத்.



# மலைப்பாம்புக்கும் ஸ்கான்!

அமெரிக்காவின் கொலம்பஸ் விலங்குகள் பூங்காவில் வசித்த ஹன்னா என்ற மலைப்பாம்புக்கு சுவாசப் பிரச்சினை ஏற்பட்டது. நோய்த்தொற்றால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கலாம் என்று கருதினார்கள் மருத்துவர்கள். மலைப்பாம்பை ஸ்கான் செய்து பார்த்துவிட முடிவெடுத்தனர்.

19 அடி நீளமும் 63.5 கிலோ எடையும் கொண்ட மலைப்பாம்பை 6 பேர் தூக்கி, ஒரு பெட்டியில் வைத்து, ஸ்கான் மையத்துக்குக் கொண்டு சென்றனர். அங்கே மலைப்பாம்புக்கு ஆக்சிசன் அளிக்கப்பட்டு, ஸ்கான் கருவியில் வைக்கப்பட்டது.

மிக நீளமான மலைப்பாம்பு என்பதால் இரண்டாக மடித்து படுக்க வைத்தனர். முன்பக்கம் ஒன்றும் பின்பக்கம் ஒன்றுமாக இரண்டு முறை ஸ்கேன் செய்யப்பட்டது. எங்கள் ஊழியர் தான் மலைப்பாம்பின் முகம் வீக்கமாக இருப்பதைக் கண்டறிந்தார்.

அடிப்படை மருத்துவம் செய்து பார்த்தோம். சரியாகவில்லை. விலங்குகளுக்கு எக்ஸ்ரே மிகச் சிறந்த பயனை அளிப்பதில்லை. அதனால் சி.ஏ.டி. ஸ்கான் செய்ய முடிவெடுத்தோம். ஸ்கானில் பிரச்சினை தெரிந்துவிட்டது.

இன்னும் இரண்டு வாரங்களில் குணப்படுத்திவிடுவோம். ஒரு மலைப்பாம்புக்கு ஸ்கான் செய்தது இதுதான் முதல்முறை. அந்தச் சிறப்பைப் பெற்றிருக்கிறாள் ஹன்னா என்கிறார் பூங்காவின் நிர்வாகி.



# மிகச் சிறந்த ஆசிரியர் இவர்தான்...!

இங்கிலாந்தைச் சேர்ந்த 39 வயது அண்ட்ரியா ஜபிராகவ் உலகின் மிகச் சிறந்த ஆசிரியர் என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிறார். இவருக்குச் சுமார் 6.5 கோடி ரூபா பரிசாக வழங்கப்பட்டிருக்கிறது

அண்ட்ரியா இங்கிலாந்தின் மிக மோசமான சமூகச் சூழல் நிலவும் ப்ரெண்ட் பகுதியில் புலம்பெயர்ந்தவர்களுக்கான பள்ளியில் ஆசிரியராக இருக்கிறார். இவருக்கு இந்தி, தமிழ், குஜராத்தி, போர்ச்சுகீஸ், அரபிக், உருது, சோமாலி உட்பட 35 மொழிகள் தெரியும்! ஒவ்வோர் ஆண்டும் வர்கி பவுண்டேஷன் க்ளோபல் டீச்சர் விருதை வழங்கி வருகிறது. 173 நாடுகளைச் சேர்ந்த 30 ஆயிரம் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்தன. மிகக் கடுமையான போட்டி. இவற்றிலிருந்து இங்கிலாந்து, துருக்கி, தென்னாபிரிக்கா, கொலம்பியா, பிலிப்பைன்ஸ், அமெரிக்கா, பிரேஸில், பெல்ஜியம், ஆஸ்திரேலியா, நோர்வே நாடுகளைச் சேர்ந்த 10 ஆசிரியர்கள் முதல் 10 இடங்களைப் பிடித்தனர். அவர்களில் இருந்து அண்ட்ரியா முதல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். துபாயில் விருது வழங்கும் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஆசிரியர் பணியையும் தாண்டி பல விஷயங்களை அண்ட்ரியா செய்திருக்கிறார். ஒவ்வொரு குழந்தையின் வீட்டுக்கும் சென்று அவர்களுடைய கல்வியிலும் வளர்ச்சியிலும் அக்கறை காட்டி வருகிறார். இந்தப் பள்ளியில் படிக்கும் பெரும்பாலான குழந்தைகளின் பெற்றோருக்கு ஆங்கிலம் தெரியாது. அவர்களிடம் உரையாடும் அளவுக்கு அடிப்படை மொழியறிவைக் கற்று வைத்திருக்கிறார். இதனால் ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் குழந்தைகளுக்குமான உறவு மேம்பட்டிருக்கிறது என்கிறார் விருது அமைப்பைச் சேர்ந்த செய்தித் தொடர்பாளர்.

## மோசமடைந்து வரும் பருவநிலை:

# ஆஸ்திரேலியாவில் இறந்த நிலையில் ஒதுங்கிய 150 திமிங்கிலங்கள்

கான்பெரா,மார்ச் 25

ஆஸ்திரேலியாவில் கரை ஒதுங்கிய சுமார் 150 திமிங்கிலங்கள் மோசமான வானிலை காரணமாக உயிரிழந்தன.

ஆஸ்திரேலியாவின் மேற்கு பகுதியில் உள்ள ஹேம்லின் பே கடற்கரையில் ஏராளமான திமிங் கிலங்கள் கடந்த வியாழக்கிழமை இரவு கரை ஒதுங்கின. மறுநாள் காலையில் இதனைக் கவனித்த உள்ளூர் மீனவர் ஒருவர், இதுபற்றி வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்துள்ளார். இதையடுத்து அங்கு அதிகாரிகளுடன் வனவிலங்கு பாதுகாப்புப் படையினர், தன்னார்வலர்கள் என 100இற்கும் மேற்பட்டோர் விரைந்து வந்தனர்.

அப்போது, சுமார் 150 திமிங்கிலங்கள் கரை ஒதுங்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தன. அவற்றை காப்பாற்றி மீண்டும் ஆழ்கடலுக்குள் அனுப்ப தீவிரமாக முயற்சிகள் மேற்கொண்டனர். ஆனால், பாறைகள் அதிகம் கொண்ட அந்த கடற்கரையில் இருந்து அதிக எடை கொண்ட திமிங் கிலங்களை ஆழ்கடல் பகுதிக்குக் கொண்டு செல்வதில் சிரமம் ஏற்பட்டது.

நேரம் செல்லச்செல்ல திமிங்கிலங்கள் ஒவ்வொன்றாக உயிரிழக்ஜக ஆரம்பித்தன. மோசமான வானிலை காரணமாக நேற்றுமுன்தினம் இரவுக்குள் பெரும் பாலான திமிங்கிலங்கள் இறந்துவிட்டன. 6 திமிங்கிலங்கள் மட்டுமே உயிர்பிழைத்தன. பாறை மிகுந்த கடற்கரை, சுற்றிலும் உயிரிழந்த திமிங் கிலங்கள், மோசமான கடல்அலைகளுக்கு மத்தியில் உயிர் பிழைத்த திமிங்கிலங்களை கடுமையான முயற்சிக்குப் பிறகு கடலுக்குள் அனுப்பி வைத்தனர்.

ஒரே இரவில் அவ்வளவு திமிங்கிலங்களும் கரை ஒதுங்கியதால், அவை துரதிர்ஷ்டவசமாக பிழைக்கவில்லை என பூங்காக்கள் மற்றும் வன விலங்குகள் சேவை செய்தித் தொடர்பாளர் ஜெரெமிசிக் தெரிவித்துள்ளார்.



# ஆப்கனில் கார்க் குண்டுத் தாக்குதல்!

## 12 பேர் பலி





காபூல்,மார்ச் 25

ஆப்கானிஸ்தானில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள அரங்கின் அருகே கார்க் குண்டு வெடித்து சிதறியதில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் சிறுபான்மை இனத்தவரான ஷியா முஸ்லிம்களின் புத்தாண்டான நவுருஸ் கொண்டாடப்பட்டு வருகிறது. புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி ஆப்கனில் பாடசாலை மற்றும் அலுவலகங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது. இந்தப் புத்தாண்டு கொண்டாட்டத்தைச் சீர்குலைக்கும் வகையில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்னதினம் காபூலில் உள்ள மசூதியில் தொழுகை நடந்தபோது உள்ளே நுழைந்த பயங்கரவாதி, தன் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து தாக்குதல் நடத்தினான். இதில் 29 பேர் பலியாகினர். இந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் ஹெல்மாண்ட் மாகாணத்தில் கார்க் குண்டு மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

லஷ்கர் கா பகுதியில் உள்ள ஸ்டேடியத்தில் நடந்த புத்தாண்டு கொண்டாட்டத்தில் பங்கேற்ற பொதுமக்கள், நிகழ்ச்சி முடிந்ததும் வெளியேறிக் கொண்டிருந்தனர். அப்போது ஸ்டேடியத்திற்கு வெளிப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த கார் திடீரென வெடித்துச் சிதறியது.

இவர்களில் 12 பேர்சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 40 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# ஊழலுக்கு எதிராக போராடத் தயார்

## பெரு புதிய அதிபர் அறிவிப்பு



லிமா, மார்ச்25

பெரு நாட்டின் புதிய அதிபராக பொறுப்பேற்றுள்ள மார்டின் விஸ்காரா, ஊழலுக்கு எதிராக போராட உள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்

பெரு நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்து வந்தவர் பெட்ரோ பப்லோ குசின்ஸ்கி. இவர் அமைச்சராக இருந்த போது பங்குதாரராக இருந்த நிறுவனத்துக்கு அரசு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இதில் முறைகேடு நடந்துள்ளது எனஎழுந்தகுற்றச்சாட்டை அடுத்து அதிபர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்தது.

அத்துடன் பதவி நீக்கம் செய்வது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த பெரும்பாலான எம்.பிக்கள் ஆதரவு தெரிவித்தனர். எனவே, விவாதம் நடத்துவதற்கு முன்னதாகவே அவர் பதவிவிலகினால் முறையாக இருக்கும் என எம்.பிக்கள் கருத்துத் தெரிவித்தனர். ஆனால், அதிபர் குசின்ஸ்கி பதவி விலக மறுத்து வந்தார்.

அதிபருக்கு சாதகமாக வாக்களிக்க எதிர்க்கட்சி எம்.பிக்களிடம் ஆளுங்கட்சியினர் பேரம் பேசும் வீடியோ வெளியானமையால் ஏற்பட்ட சர்ச்சையைத் தொடர்ந்து, அதிபர் பதவியில் இருந்து குசின்ஸ்கி விலகினார்.

இந்தநிலையில், பெரு நாட்டின் புதிய அதிபராக மார்டின்விஸ்காராபொறுப்பேற்றுக் கொண்டார்.

## கால்நடைத் தீவன ஊழல்:

# நான்காவது வழக்கில் லாலுவுக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை

பட்னா,மார்ச் 25

பீகார் மாநிலத்தில் கால்நடைத் தீவன ஊழல் தொடர்பான மற்றொரு வழக்கில் நேற்றுத் தீர்ப்பளித்த நீதிமன்றம், முன்னாள் முதல்வர் லாலுவுக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

ராஷ்டீரிய ஜனதா தள தலைவர் லாலுபிரசாத் யாதவ். பீகார் முதல்வராக இருந்த இவர் கால்நடைத் தீவன முறைகேட்டில் சிக்கினார். இது தொடர்பாக பல்வேறு வழக்குகள் லாலு பிரசாத் யாதவ் மீது தொடரப்பட்டது. இதில் 3 வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. முதல் வழக்கில் 5 ஆண்டு சிறைத் தண்டனையும், 2ஆவது வழக்கில் 3 ஆண்டுகளும், 3ஆவது வழக்கில் 15 ஆண்டுகளும் லாலுவுக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

இந்த நிலையில் தும்கா கருவூலத்தில் இருந்து 3.13 கோடி ரூபா பணத்தை முறைகேடாக எடுத்தது தொடர்பானவழக்கு விசாரணை முடிவடைந்தநிலையில், லாலுபிரசாத் யாதவ் குற்றவாளி என்று கடந்த 19ஆம் திகதி நீதிபதி தீர்ப்பு அளித்தார். மேலும் 13 பேர் குற்றவாளிகள் என்றும் அறிவித்தார்.

தண்டனை விவரம் நேற்று அறிவிக்கப்பட்டது. லாலுவுக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

## அமெரிக்க துப்பாக்கிச் சூட்டின் எதிரொலி:

# மாணவர் தற்காப்புக்கு கற்கள் விநியோகம்



அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருந்து பள்ளி மாணவர்களைக் காப்பதற்கு தற்காப்புக்காக கற்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

அமெரிக்காவில் கடந்த மாதம் புளோரிடாவில் உள்ள பார்க்லேண்ட் பாடசாலையில் புகுந்த மர்ம நபர் துப்பாக்கிச் சூடு நடத்தினார். அதில் மாணவர்கள் உள்பட 17 பேர் உயிரிழந்தனர். இதுபோன்ற சம்பவங்கள் அமெரிக்காவில் அடிக்கடி நடைபெறுகின்றன. எனவே துப்பாக்கி வைத்திருப்பதில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வருகின்றன. அமெரிக்காவில் வொஷிங்டன் வெள்ளை மாளிகை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் மாணவர்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார்கள்.

இதற்கிடையே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருந்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைக் காப்பது பற்றி ஆய்வு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் புளோரிடா மாகாணத்தில் பென்சில் வேனியாவில் உள்ள பாடசாலை மாணவ, மாணவிகளின் தற்காப்புக்கு கற்கள் வழங்கப்பட்டுள்ளன. வகுப்பறையிலும் ஆற்றுப்படுகையில் இருந்து சேகரிக்கப்பட்ட கருங்கற்கள் வாளிகளில் குவித்து வைக்கப்பட்டுள்ளன.

துப்பாக்கி நபர் பள்ளிக்குள் நுழைந்தவுடன் மாணவர்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கை உடனடியாகத் தொடங்கும். அதையும் மீறி முடியாத பட்சத்தில் வகுப்பறைக்குள் நுழையும் துப்பாக்கி நபர் மீது கற்களை வீசி சரமாரியாகத் தாக்குவதற்கு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.



## கேப்டவுன் டெஸ்ட்:
# இரண்டாம் நாள் ஆஸி. 245/9

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது டெஸ்டின் இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் ஆஸ்திரேலிய அணி 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 245ஓட்டங்கள் எடுத்துள்ளது.

தென்னாபிரிக்கா – ஆஸ்திரேலியா இடையிலான 3ஆவது டெஸ்ட் கேப்டவுன் நியூலேண்ட் மைதானத்தில் நடந்து வருகிறது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க கப்டன் டு பிளிஸ்சிஸ் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

தென்னாபிரிக்கா அணி 97.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 311 ஓட்டங்கள் எடுத்தது. டீன் எல்கர் 141 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஆஸ்திரேலியா அணி சார்பில் பால் கம்மின்ஸ் 4 விக்கெட்டுகளும், ஹேசில்வுட் 2 விக்கெட்டுகளும், மைகேல் ஸ்டோர்க், மிட்செல் மார்ஷ் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, ஆஸ்திரேலியா அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக பான்கிராப்ட், வோர்னர் களமிறங்கினர். தென்னாபிரிக்க வீரர்களின் சிறப்பான பந்து வீச்சில் ஆஸ்திரேலிய வீரர்கள் திணறினர். இதனால் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் விழுந்தன.

பான்கிராப்ட் ஓரளவு தாக்குப்பிடித்து 77 ஓட்டங்கள் எடுத்தார். நாதன் லயன் 47 ஓட்டங்களும், வோர்னர் 30 ஓட்டங்களும் எடுத்தனர். இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் ஆஸ்திரேலியா அணி 67 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 245 ஓட்டங்கள் எடுத்துள்ளது. அந்த அணியின் டிம் பைன் 33 ஓட்டங்களுடனும், ஹேசில்வுட் ஒரு ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

தென்னாபிரிக்கா அணி சார்பில் மார்னி மோர்கல் 4 விக்கெட்டுகளும், ரபாடா 3 விக்கெட்டுகளும், பிலெண்டர் 2 விக்கெட்டுகளும் எடுத்தனர்.

ஆஸ்திரேலியாவை விடத் தென்னாபிரிக்கா 66 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.



## 300 விக்கெட்கள் வீழ்த்திய மோர்னி மோர்கல்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 4 விக்கெட்டுகளை கைப்பற்றியதன் மூலம் 300 விக்கெட் வீழ்த்திய 5ஆவது தென்னாபிரிக்கா வீரர் என்ற சிறப்பை மோர்னி மோர்கல் பெற்றார்.

தென்னாபிரிக்கா – ஆஸ்திரேலியா இடையிலான 3ஆவது டெஸ்ட் கேப்டவுன் நியூலேண்டு மைதானத்தில் நடந்து வருகிறது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா கப்டன் டு பிளிஸ்சிஸ் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

தென்னாபிரிக்கா அணி 97.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 311 ஓட்டங்கள் எடுத்தது. டீன் எல்கர் 141 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். ஆஸ்திரேலியா அணி சார்பில் பால் கம்மின்ஸ் 4 விக்கெட்டும், ஹேசில்வுட் 2 விக்கெட்டும், மைகேல் ஸ்டார்க், மிட்செல் மார்ஷ் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினார்.



இதையடுத்து, ஆஸ்திரேலியா அணி களமிறங்கியது. இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் ஆஸ்திரேலியா அணி 67 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 245 ஓட்டங்கள் எடுத்தது.

தென்னாபிரிக்கா அணி சார்பில் மார்னி மார்கல் 4 விக்கெட்டும், ரபாடா 3 விக்கெட்டுகளும், பிலாண்டர் 2 விக்கெட்டும் எடுத்தனர்.

முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் மோர்னே மோர்கல் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இதன் மூலம் அவரது ஒட்டுமொத்த விக்கெட்டுகள் எண்ணிக்கை 301ஆக (85 டெஸ்ட்) உயர்ந்தது. டொனால்ட், ஷான் பொல்லாக், நிதினி, ஸ்டெயின் ஆகியோருக்கு பிறகு 300இற்கு மேல் விக்கெட்டுகள் வீழ்த்திய தென்னாபிரிக்க வீரர் என்ற சிறப்பை மோர்கல் பெற்றார். 33 வயதான மோர்கல் இந்தத் தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜோகோவிச் அதிர்ச்சித் தோல்வி



மியாமி சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2ஆம் சுற்று ஆட்டத்தில் முன்னாள் நம்பர் ஒன் வீரர் செர்பியாவின் ஜோகோவிச் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

மியாமி சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2ஆம் சுற்று ஆட்டத்தில் செர்பியாவின் ஜோகோவிச் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். அவர் பிரான்ஸ் வீரர் பெனடிச் பெர்ரிடம் 3:6, 4:6 என்ற நேர் செட் கணக்கில் தோற்றார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் 2ஆவது சுற்று ஆட்டங்களில் வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா), கோண்டா (இங்கிலாந்து), குவிட்டோவா (செக் குடியரசு), ஸ்விடோலினா (உக்ரைன்), அசெரன்கா (பெலாரஸ்) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

## வோர்னருடன் ரசிகர் தகராறு

தென்னாபிரிக்கா அணியுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியில், டேவிட் வோர்னர் தென்னாபிரிக்க ரசிகருடன் தகராறில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

தென்னாபிரிக்கா – ஆஸ்திரேலியா அணிகள் மோதும் 3ஆவது டெஸ்ட் போட்டி கேப்டவுன் நகரில் நடந்து வருகிறது.

இந்த நிலையில், இந்த ஆட்டத்தில் அதிரடியாக 14 பந்துகளில் 30 ஓட்டங்கள் விளாசிய ஆஸ்திரேலிய துணைக் கப்டன் டேவிட் வோர்னர், ரசிகர் ஒருவருடன் மோதிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆட்டம் இழந்து மைதானத்தை விட்டு வெளியேறி ஓய்வறையை நோக்கி வோர்னர் நடந்த போது, அருகில் வந்த ரசிகர் ஒருவர் ஏதோ கூற வோர்னர் கோபமடைந்தார். அந்த ரசிகருடன் காரசாரமாக வாக்குவாதம் செய்தார். அந்த ரசிகரும் திட்டினார். பின்னர் மைதான பாதுகாப்பு ஊழியர் தலையிட்டு அமைதிப்படுத்தினார்.

இது தொடர்பாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபையிடம் எழுத்து மூலமாகக் குற்றச்சாட்டு அளித்து இருக்கிறது.



## உலகக்கிண்ண போட்டிக்கு தகுதி பெற்றது ஆப்கன்




உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான சூப்பர் சிக்ஸ் தகுதிச் சுற்றில் அயர்லாந்து அணியை வீழ்த்திய ஆப்கானிஸ்தான் அணி உலகக் கிண்ணப்போட்டிக்குத் தகுதி பெற்றது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தகுதிச் சுற்றுக்கான கடைசி சூப்பர் சிக்ஸ் போட்டியில் அயர்லாந்து – ஆப்கானிஸ் தான் அணிகள் ஜிம்பாப்வேயில் நேற்று முன்தினம் மோதின. இப்போட்டியில் வெற்றி பெறும் அணியே அடுத்தாண்டு நடைபெற உள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்குத் தகுதிபெறும்.

எனவே, வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்ற கட்டாயத்துடன் இரு அணிகளும் விளையாடின. நாணயச் சுழற்சியில் வென்ற அயர்லாந்து அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. அயர்லாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 209 ஓட்டங்கள் எடுத்தது. ஆப்கன் அணி சார்பில் ரஷித் கான் 3 விக்கெட்டும், தவ்லத் சத்ரான் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 210 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கியது. ஆப்கானிஸ்தான் அணி 49.1 ஓவரில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 213 ஓட்டங்கள் எடுத்து ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் உலகக்கிண்ணத் தகுதிச் சுற்றின் இறுதிப்போட்டிக்கு ஆப்கானிஸ்தான் அணி முன்னேறியது.

## ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி நிர்வாகத்தை உள்ளூர் விடயம் என்பதால் அதற்குள் மட்டுப்படுத்திக் கொண்டு, சேவைகளை வழங்கக்கூடிய வகையில் அனைத்துத் தரப்பினர்களும் செயற்படுவதே இன்றைய தேவையாக இருக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி நிர்வாகத்தைச் சுமூகமான நிலையில் கொண்டு நடத்துவதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

புரிந்துணர்வு இடம்பெற வேண்டும். ஏனைய மாகாணங்களை விட வடக்கு மாகாணத்தில் சிறந்த நிர்வாகம் இருக்க வேண்டும்.

அந்தந்தக் கட்சிகள் தமது தலைவர்களைத் தெரிவு செய்வதன் மூலமும், அவர்களுக்கு ஆதரவு அளிப்பதன் மூலமாகவும், சுமுகமான சூழலை உருவாக்கவேண்டும். முரண்பட்டுக்கொண்டு உள்ளூராட்சிச் சபைகளை நிர்வகிக்க முடியாது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அந்தந்தக் கட்சி வெற்றி பெற்ற இடங்களில் அவர்களையே ஆட்சியமைக்க அனுமதிக்கவேண்டும். அதற்கு ஏனையோரும் ஆதரவளிக்க வேண்டும்.

இதன்மூலம் இந்த மண்ணில் ஒரு சுமூகமான சூழலை ஏற்படுத்த முடியும். ஒரு சுமூகமான நிலையைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதே தற்போதைய தேவை.

வடக்கு மாகாணசபையில் குழப்பம் ஏற்பட்டமைக்கு அமைச்சுப்பதவிகளே காரணம்.

ஐந்து அமைச்சுக்களை வைத்துக் கொண்டு, ஐந்து மாவட்டங்களுக்கு நான்கு கட்சிகளுக்காக அவற்றைப் பிரித்துத் தருமாறு கோரியதையடுத்தே குழப்பம் ஏற்பட்டது.

தம்முடைய மாவட்டத்துக்கு தரவில்லை என்ற சண்டை அன்றே ஆரம்பித்துவிட்டது. இதுதான் அடிப்படையாகும். மாகாணசபை குழம்பியமைக்கு பதவிகளே காரணம். – என்றார். (ஐ)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரவரி மாதம் 26ஆம் திகதி ஆரம்பமான கூட்டத் தொடர் நான்கு வாரங்கள் நடைபெற்ற தன் பின்னர் நேற்று முன்தினம் நிறைவடைந்தது.

இதில் இலங்கை தொடர்பான இரண்டு முக்கிய விவாதங்கள் கடந்த திங்கட்கிழமையும் புதன்கிழமையும் இடம்பெற்றமையுடன் இலங்கைக்குப் பயணம் செய்த ஐ.நா. விசேட அறிக்கையாளர் கள் தமது பயணம் பற்றிய அறிக்கைகளையும் வெளியிட்டிருந்தனர்.

மனித உரிமைக்கும் பயங்கரவாதத்துக்கும் எதிரான விடயத்துக்குப் பொறுப்பாகக் கடமையாற்றிய, பென் எமர்சனன் இலங்கைப் பயணம் தொடர்பான அறிக்கையை இப்பதவிக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள திருமதி பினனா லுலா நீஅலோ என்பவர் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சைக்கிளில் வந்தவர்கள் காரை மறித்துக் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட தருணம் ஏற்பட்ட கைகலப்பில் தாக்குதலுக்கு உள்ளான – யாழ்ப்பாணம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் – பொலிஸ் பரிசோதகர் ஹேரத் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு தலையில் தலைக்கவசத்தால் (ஹெல்மட்) தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த ஹேரத், மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்தார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்தார்.

குருநாகல் அளவ்வைப் பகுதியைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் எச்.எம்.சி. ஹேரத் (வயது 55) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் துரிதமாகச் செயற்பட்ட ஏறாவூர் பொலிஸார் மைலம்பாவெளி பகுதியைச் சேர்ந்த மூன்று சந்தேகநபர்களைக் கைது செய்து தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்த பொலிஸ் பரிசோதகரின் சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் எச்சரித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகத் தெரிவான உறுப்பினர்களின் சத்தியப் பிரமாண நிகழ்வு, கட்சித் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் –

நாங்கள் கடந்த 3 வாரங்களாகச் சிறிகொத்தாவில் ஐ.தே.க. முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேசிவந்த விவகாரங்களையும் பின்னர் நடந்த விபரீதங்களையும் வைத்து பார்க்கின்றபோது, இனியும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிப்பது என்பது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு மிகவும் கடினமான விடயம் என்பதை மிகவும் வேதனையுடன் சொல்லிக்கொள்கிறேன்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சியுடன் நாங்கள் இணைந்து தேர்தலில் போட்டியிட்ட நிலையில், எங்களுக்கு நடந்த நம்பிக்கை மோசடிகளால் அவர்களுடன் தொடர்ந்து பயணிப்பதில் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இப்படியான சூழ்நிலையில் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிப்பது என்பது மிகவும் சவாலுக்குரிய விடயம்.

முஸ்லிம் காங்கிரஸ் அமோக வெற்றியீட்டிய சபைகளில் எங்களுக்கு தவிசாளர் பதவி தர வேண்டிய நிலையில், எங்களைப் புறந்தள்ளிவிட்டு, மாற்று அணிகளுடன் கூட்டுச் சேர்வதாக இருந்தால் அதற்கு அரசியல் ரீதியாக நாங்கள் தகுந்த பதிலடியைக் கொடுப்பதற்கும் தயங்கமாட்டோம். இயலுமான வரை இந்த ஆட்சியில் ஒற்றுமையுடன் பயணிப்பது என்ற நோக்கத்தில் இருந்தாலும், எங்களை பலவீனப்படுத்திக்கொண்டு பயணிக்க முடியாது. – என்றார். (ஐ)

## வெளிநாட்டுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளிநாட்டுச் சக்திகளுமே காரணம் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தியாளர் அருண் ஜனார்த்தனனுக்கு அளித்துள்ள சிறப்பு செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தவறான புரிந்துணர்வினாலேயே, 1950களில் இலங்கையில் பிரச்சினைகள் தோன்றின. அதற்கு முன்னர் பிரச்சினைகள் இருக்கவில்லை.

வெற்றிபெறுவதற்கும், மக்களின் செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் இனவாத அரசியலை எளிதான வழியாக நோக்கிய சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளால் தான் இந்தப் பிரச்சினை ஆரம்பிக்கப்பட்டது. காலப்போக்கில் இது போராக மாறியது. அது இந்தியாவிலும், உலகத்திலும் பரவியது.

துரதிஷ்டவசமாகப் போருக்குப் பின்னரும் கூட, குறிப்பிட்ட வெளிநாட்டுச் சக்திகள் மற்றும் வெளிநாடுகளில் செயற்படும், குழுக்கள், இந்த நாட்டை உறுதியான நிலையில் இருப்பதற்கு அனுமதிக்கவில்லை.

இன்று இந்த நாட்டில் வாழும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்கு மிகப் பெரிய தடையாக இருப்பது, வெளிநாடுகளில் இருந்து செயற்படும் குழுக்களும், பல்வேறு வெளிநாட்டுச் சக்திகளும்தான் என்றும் மஹிந்த குறிப்பிட்டார்.

அத்துடன், சிவில் சமூகம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்துள்ள மஹிந்த –

இலங்கையில் தம்மைச் சிவில் சமூகம் மற்றும் மனித உரிமை அமைப்புகள் என்று அழைத்துக் கொள்ளும் பெரும்பாலான அமைப்புகள், உண்மையில் சிவில் சமூக குழுக்கள் அல்ல. இவை மேற்குலக நாடுகளால் நிதியளிக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள். தமக்கு நிதி வழங்குபவர்களின் நிகழ்ச்சி நிரல் யாரை ஊக்குவிக்கிறதோ அவர்களை மட்டும் இந்தக் குழுக்கள் ஆதரிக்கும். என்று கூறியுள்ளார். (ஐ)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெறவுள்ளது. அந்தப் பிரேரணையில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நால்வர் கையொப்பமிட்டுள்ளமையுடன், அதற்கு ஆதரவு தெரிவிக்க மேலும் சிலர் தீர்மானித்துள்ளனர்.

இந்த நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் சென்றிருக்கும் ஜனாதிபதி தனது கீச்சகத் திலேயே இந்த வாழ்த்தைப் பதிவிட்டுள்ளார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ரணிலைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பிறந்த நாள் வாழ்த்துக் கூறியுள்ளார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிறந்த நாளை முன்னிட்டு அலரி மாளிகையில் சிறப்பு நிகழ்வு இடம்பெற்றது. அதில் அமைச்சர்கள் பலர் பங்கேற்றனர். (ஐ)

## தண்டனைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விசாரணைக்கு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2011ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் திகதி சுன்னாகம் பொலிஸாரால் 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சிறிஸ்கந்தராஜா சுமணன் முதலாவது சந்தேகநபராகக் கைது செய்யப்பட்டார். அவர் விசாரணைக்காகக் கிளிநொச்சி, வட்டக்கச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு சுமணன் பொலிஸ் காவலிலிருந்து தப்பித்து இரணைமடுக் குளத்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார் என்று பொலிஸாரால் கிளிநொச்சி நீதிவான் மன்றில் அறிக்கையிடப்பட்டது. இந்தச் சம்பவம் 2011ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி மாலை இடம்பெற்றது என்றும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய 4 சந்தேகநபர்களுக்கு எதிராகப் பெரும் குற்ற வழக்கு மல்லாகம் நீதிவான் மன்றில் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றன. 2016ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த வழக்கின் விசாரணையின்போது சந்தேகநபர்களில் இருவர், சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார உள்ளிட்ட 8 பொலிஸார் மீது சுமணனை சித்திரவதை செய்து கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

மல்லாகம் நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன், சந்தேகநபர்களின் குற்றச்சாட்டுத் தொடர்பில் பொலிஸாரிடம் விசாரணைகளை மேற்கொண்டு சித்திரவதை மற்றும் கொலை ஆகிய இரு பிரிவுகளில் வழக்குகளை முன்னெடுக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார். அத்துடன், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் நீதிவான் அறிவித்தல் வழங்கினார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சந்தேகநபரைக் கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்ட சிந்திக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸாருக்கு எதிராகக் கொலை குற்றச்சாட்டு வழக்கைக் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முன்வைத்தனர்.

அத்துடன், சட்டமா அதிபர் திணைக்களத்தால் பொலிஸ் அதிகாரி சிந்திக்க பண்டார உள்ளிட்ட 8 பொலிஸாருக்கு எதிராக 1994ஆம் ஆண்டு சித்திரவதைகள் சட்டத்துக்கு அமைவாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இதில் சித்திரவதை வழக்கில் சிந்திக்க பண்டார உள்ளிட்ட 6 பொலிஸாருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் கடந்த ஆண்டு வழங்கப்பட்டது. அவர்களில் ஒருவர் வெளிநாடொன்றில் வாழ்வதால் 5 பொலிஸாரே சிறையில் அடைக்கப்பட்டனர்.

5 தண்டனைக் கைதிகளும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு ஆட்சேபனை தெரிவித்து தமது சட்டத்தரணிகள் ஊடாகக் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளனர்.

தமது மேன்முறையீட்டு மனு விசாரணையில் உள்ளதால் அதன் தீர்ப்பு அறிவிக்கப்படும்வரை தம்மைப் பிணையில் விடுவிக்கக் கோரி அவர்கள் 5 பேரும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மேன் முறையீட்டின் போதான பிணை விண்ணப்பத்தை முன்வைத்துள்ளனர்.

இந்த விண்ணப்பம் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் அழைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பின்னர் சட்டமா அதிபருக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டு மற்றொரு தவணையில் ஆட்சேபனைக்கான சந்தர்ப்பம் அரச சட்டவாதிக்கு வழங்கப்படும்.

எனினும் தண்டனைக் கைதிகளுக்குப் பிணை வழங்குவதற்குச் சட்டமா அதிபர் திணைக்களம் கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கும் என அறிய முடிகிறது.

சுமணனைக் கொலை செய்த குற்றச்சாட்டில் இவர்கள் 5 பேருக்கும் எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில் பிணை வழங்கப்பட்டால் அது அந்த வழக்கில் பாதிப்பை ஏற்படுத்தும் எனச் சட்டமா அதிபர் திணைக்களம் சுட்டிக்காட்டுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தடுப்புக் காவலிலிருந்த சந்தேகநபரைக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றால் விடுக்கப்பட்ட விளக்கமறியலில் உத்தரவை எதிர்த்து சிந்திக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸார் சார்பிலும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் கடந்த ஆண்டு பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது.

அந்த விண்ணப்பம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வண.கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்றுள்ளார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மகசன் பலகாய அமைப்பின் தலைவன் அமித் அனுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரை நேற்று ஞானசார தேரர் சிறைச்சாலைக்குச்சென்று பார்வையிட்டுள்ளார். (ஐ)

## ஹெரோயினுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னாள் உறுப்பினர் என விசேட அதிரடிப்படையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என அவர் கூறினார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

## பெற்றோலியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டுத்தாபனத்தின் தலைவர் தம்மிகரணதுங்க அறிவித்துள்ளார்.

இந்தியன் ஒயில் நிறுவனம் (ஐ.ஓ.சி.) இலங்கையில் விநியோகிக்கப்படும் பெற்றோலின் விலையை 9 ரூபாவாலும் டீசலின் விலையை 5 ரூபாவாலும் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அதிகரித்தது.

இந்த நிலையிலேயே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். (ஐ)

# முகதரிசனம்
## (ஓர் அறிமுகக் குறிப்பு)

மதம் என்பது மனிதர்களை நல் வழிப்படுத்துவதற்கான ஒரு மார்க் கமாகும். வாழ்வில் நெறி பிறழ்வு றாது, நேரியபாதையில் மனதை ஒருமுகப்படுத்தி தியான நிலையோடு, மனதில் தூயசிந்தனைகளை முகிழச் செய்து, கற்றோரும் உற்றோரும் உவகை அடையும் வகையில் மனிதனை உயர்வடையச் செய்வது அவரவர் சார்ந்த மதங்களின் பண்பி யலாகும்!

மனிதனுக்குள் உருவாகும் சினம் சார்ந்து வெளிப்படும் தீயசெயல்கள் உருவாகாதிருக்க, ஒவ்வொரு மதங்களும் நற்போதனைகளை வெளிப்படுத்துகின்றன. அப்போதனைகளை கடைப்பிடிக்கத் தவறும் மனிதன், வாழ்வியல் நெறிமுறைகளில் இருந்து வழிதவறியவனாகி விடுகிறான். இவ்வாறாக வழி தவறிப்போகும் மனிதர்களை மீண்டும் அவர் தம் நேரிய வழிக் குக்கொண்டுவருவதற்கு மதம்சார்ந்தநற்போதனை களோடு கூடிய பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகை கள் அவசியம் என்பது இன்றி யமையாதவையாகி விடுகின்றன.

அந்த வகையில் –

கோண்டாவில் சிவபூமி அறக்கட்ட ளையின் மாதாந்த வெளியீடாக சமயம் (இந்து) மற்றும் சமூகம் சார்ந்த இந்த நூலானது சிவபூமி எனும் மகுடத்துடன் முதன் முதலாக வெளிவந்துள்ளது.

இருபது பக்கங்களை உள்ளடக்கி, பல்வேறு விடயங்களைத் தனதுள் கொண்டு பேசுகின் றது.

அமெரிக்கா ஹவாய் ஆதீன முதல்வர் சற்குரு வேலன் சுவாமிகளின் யாழ். வருகையோடு கூடிய தகவலும், கண்கவர் புகைப்படங்களும் பத்தி ரிகையின் முன்பக்கம் மற்றும் மறுபக்கத்தையும் அலங்கரிப்பது பார்ப்போரை ஈர்ப்புக் கொள்ள வைக்கின்றது.

நூலின் உள்ளே சிறுசிறு தகவல்களோடு கூடிய ஆன்மிகம் சார்ந்தவை பயனுறுதியாக அமைகின்றன. இது தவிர, கட்டுரைகள் சிறப்பு மிக்கவை.

"நாவலர் பெருமானும் சிதம்பரத்து கல்விப் பணியும்" எனும் கட்டுரை ஆறு. திருமுருகனால் எழுதப்பட்டுள்ளது. இக் கட்டுரை நாவலர் பெருமா னின் வாழ்வியல் பகுதியின் ஒரு பக்கத்தை வெளிப்படுத்துகிறது.

ரிஷி. தொண்டுநாதன் சுவாமிகளின் "அளவெட் டியிலிருந்து அமெரிக்கா வரை சைவம்" எனும் விடயமும் பதிவாகியுள்ளது.

1960 ஆம் ஆண்டு திருக்கேதீஸ் வரத்தில் நடைபெற்ற சென்னை சைவ சிந்தாந்த மகா சமாஜ ஆண்டு விழாவில் வெளியிடப்பட்ட மலரிலிருந்து சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரம் எழுதிய "திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி" எனும் கட்டுரையும், 1939 இல் வெளியான ஈழகேசரி – ஆண்டு மடலில் இருந்து டாக்டர் க.கணபதிப் பிள்ளை என்பவரால் எழுதப்பட்ட "ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணம்" எனும் கட்டுரை யும் பதி வாகியுள்ளன.

இவைகளோடு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வ.அகிலேஸ் வரக் குருக்கள் மற்றும் கந்தையா நீலகண்டன் ஆகியோருக்கான நினைவஞ்சலிகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவை தவிர – பங்குனி மாதத்துக்குரிய குரு பூசை தினங்கள் கடந்த மாதங்களில் இடம்பெற்ற இந்துமதம் சார்ந்த பதிவுகள் என்பனவும் இடம்பெற் றுள்ளன.


சிவபூமி
Religious Journal of sivapoomi
தொலைபேசி -021-222-7938
அறிமுக விலை- 20/=
Email-Sivapoomi@gmail.com
சிவம்-01 ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 17ஆம் நாள் 01.03.2018 பூமி-01

அமெரிக்கா ஹவாய் ஆதீன முதல்வர் சற்குரு வேலன் சுவாமிகள் யாழ் வருகை

தவத்திரு யோகர்சுவாமிகளின் அருளாசியால் அமெரிக்கா ஹவாயில் உருவாகிய சைவ ஆதீனத்தின் இரண்டாவது குருமுதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளும், ஆதீன துறவறச்சபைத் துறவிகள் உட்பட அறுபது சைவ அன்பர்களும் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர். தவத்திரு யோகர்சுவாமிகளிடம் அருள்பெற்று துறவு வாழ்வு வாழ்ந்த சற்குரு சுப்பிரமுனிய சுவாமிகளால் அமெரிக்கா ஹவாயில் ஆரம்பிக்கப்பட்ட சைவ ஆதீனம் இன்று உலகப் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. சுப்பிரமுனிய சுவாமிகள் மகாசமாதி அடைந்த பின் குரு முதல்வராகப் பொறுப்பேற்று ஆதீனத்தை நடாத்தி வரும் அமெரிக்கரான போதிநாத வேலன் சுவாமிகள் இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். பதினாறுக்கு மேற்பட்ட துறவிகள் இவ்வாதீனத்தில் ஆன்மீகப் பணியாற்றி வருகின்றார்கள். யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் இவ்வாதீனத்தில் ஆன்மீகப் பயிற்சி பெற்று சைவசமயப் பணிகளையும் சமூகப் பணிகளையும் ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. சுவாமிகளும் அவருடன் வந்த அன்பர்களும் யாழ்ப்பாணத்தில் கடந்த ஐந்து தினங்கள் ஆலயங்களையும் சமய நிறுவனங்களையும் தரிசித்து வருகிறார்கள்.

- உமைபாலன்



# 'அந்த ராஜா' மறைந்து விட்டான்!!

# வெள்ளை காண்டாமிருகம் அழியும் நிலை!!

சூடான் ஆபிரிக்க நாடொன்றின் பெயர் என்றாலும், சமீப நாள்களாக அந்தப் பெயர் அதிகம் பேசப்படுவதற்குக் காரணம், ஒரு காண்டாமிருகம். வடக்கு வெள்ளை காண்டாமிருக வகையில் உலகின் கடைசி ஆண் இதுவே. ஒரு மாத காலமாகவே உடல்நலம் குன்றியிருந்த சூடான், மார்ச் 20ஆம் திகதியன்று இறந்தது. இன்னும் இரண்டு வடக்கு வெள்ளை பெண் காண்டாமிருகங்கள் மட்டுமே உலகில் எஞ் சியிருக்கின்றன. சூடானின் மகள் நஜின், சூடானின் பேத்தி பதுவும் அதனுடன் வாழ்ந்துவந்தன.

45 வயதுடைய சூடானின் பின்னங்கால்கள் சமீபத்திய மாதங்களாக பலவீனமடைந்து வந்தன. அதன் கால்கள் 3,000 கிலோ உடல் எடையைத் தாங்கும் வலுவை இழந்துவிட்டிருந்தன. ஒரு கண் பார்வை பறிபோயிருந்தது.

எஞ்சியுள்ள இரண்டு பெண் காண்டாமிருகங் களுடன் இயற்கையாக இனப்பெருக்கம் செய் யும் ஆற்றலை அது இழந்திருந்தது. தெற்கு சூடா னில் உள்ள ஷாம்பே வேட்டைக் காப்பிடத்தில் 1975இல் குட்டியாக சூடான் பிடிக்கப்பட்டது. பிறகு, கென்யாவில் உள்ள பெஜெடா காப்பிடத்தில் இது வாழ்ந்துவந்தது. சமீப காலத்தில் உலகில் பரவலாக அறியப்பட்ட உயிரினமாக சூடான் மாறியது. ஹொலிவுட் நடிகர்கள் லியனார்டோ டிகாப்ரியோ, எலிசபெத் ஹர்லி உள்ளிட்டோர் அதை நேரில் பார்த்துச் சென்றுள்ளனர்.

வடக்கு வெள்ளை காண்டாமிருகம் எதிர்காலத் தில் பிழைத்திருப்பதற்கான வாய்ப்பை சூடான் தரும் என்று காட்டுயிர் ஆராய்ச்சியாளர்கள் நம்பினார் கள். அது இயல்பாக வாழ்வதற்காக காட்டில் விடப் பட்டிருந்தால், அதன் வாழ்நாள் முன்கூட்டியே முடிந்துபோயிருக்கலாம். காப்பிடத்தில் வாழ்ந் ததாலேயே இவ்வளவு காலம் வாழ முடிந்திருக் கிறது.

தற்போது சூடான் தானாகவே இறந்திருக்கி றது என்றாலும், கள்ள வேட்டைக்காரர்களால் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட தால், கடைசிவரை ஆயுதக் காவலர்களின் பாது காப்புடனே வாழ்ந்துவந்தது.

1960இல் இந்த காண்டாமிருக வகை 2,000 எண்ணிக்கையில் இருந்தது. 2008இற்குப் பிறகு ஒரு வடக்கு வெள்ளை காண்டாமிருகம்கூடக் காட் டில் இல்லை. கள்ள வேட்டை – உயிரினக் கடத்தல் வணிகமே இந்த இனம் அழிவதற்கான முதன் மைக் காரணம். போர், வாழிட அழிப்பு, காடு ஆக்கிரமிப்பு போன்றவற்றின் காரணமாக வட கிழக்கு ஆபிரிக்காவைத் தாயகமாகக் கொண்ட இந்த காண்டாமிருக வகை, அழிவின் விளிம்புக் குத் தள்ளப்பட்டது.

### சாத்தியம் குறைவு

இந்த காண்டாமிருக வகை முற்றிலும் அற்றுப்போவதற்கு முன்னதாகச் செயற்கைக் கருவூட்டல் முறை மூலம் இந்த இனத் தைக் காப்பாற்ற ஆராய்ச்சியாளர்கள் முயற் சித் வருகிறார்கள். நஜினும் ஃபதுவையும் செயற்கையாகக் கருத்தரிக்க வைக்க முடிய வில்லை.

இப்போது சோதனைக் குழாய் மூலம் கருத்தரிப்பை மேற் கொண்டு, வாடகைத் தாய் முறைபோல தெற்கு வெள்ளை காண்டாமிரு கங்களின் கருவறையில் கருவைச் செலுத்தி குட்டிகளை உருவாக்க விஞ்ஞானிகள் முயற் சித்து வருகின்றனர். இப்படி வடக்கு வெள்ளை காண்டாமிருகங்களை மீட்டெடுக்க பிரம்மப் பிரயத்தனம் நடந்துவந்தாலும், இன்னும் இரண்டு பெண் காண்டாமிருகங்கள் மட் டுமே எஞ்சியிருக்கும் நிலையில், அந்த இனம் முற்றிலும் அற்றுப்போவதிலிருந்து காப்பாற் றுவதற்கான சாத்தியம் கிட்டத்தட்ட இல்லாமல் போய்விட்டது.

### கவனம் பெறாத இன அழிப்பு

இந்தப் பூவுலகில் 1.5 கோடி ஆண்டுகளுக்கு முன் பரிணாம வளர்ச்சியில் முட்டி மோதித் தோன்றி, எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த காண்டாமிருக இனம், கடந்த சில நூற்றாண் டுகளில் மனிதர்கள் ஏற்படுத்திவரும் செயற்கை நெருக்கடிகளால் பூவுலகை விட்டே அற்றுப்போகும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

உலகின் பல பகுதிகளில் அரங்கேறிவரும் மனித இன அழிப்பு பற்றி குறைந்தபட்சம் பேசவா வது செய்கிறோம். ஆனால், உயிரின அழிப்பு நம் கவனத்தை ஈர்க்கவில்லை.

பல்லூழிக் காலமாக இந்தப் பூமி ஏற்படுத்திய அனைத்து நெருக்கடிகளையும் தாங்கி உயிர் பிழைத்திருக்கும் சில உயிரினங்கள் மனிதச் செயல்பாடுகளால் ஒற்றை, இரட்டை இலக்கங் களுக்குள் சுருக்கப்படுவது காட்டுயிர் இனப்படு கொலை இல்லையா? இந்த பூமிக்கும் உயிரினங் களுக்கும் மனித இனம் இழைத்து வரும் பெரும் அநீதியின் சின்னமாக வெள்ளை காண்டாமிருகம் இப்போது மறைந்திருக்கிறது.

'தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக அடுத்து வரும் ஆண்டுகளில் இன்னும் எத்தனை அரிய உயிரினங்களைப் பலி கொடுக்கப் போகிறோமோ தெரியவில்லை.

நன்றி: 'தி ஹிந்து'



## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல புடைவை வர்த்தக நிலையம் ஒன்றுக்கு பெண், ஆண் பணியாளர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு:- 075 658 2459**

## கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று நடைபெறும்

கலைவாணி விளையாட்டு மைதானம்
நாவாந்துறை

இன்று 25.03.2018 - 4.00 pm

யங்கென்றிஸ் (இளவாலை) VS நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம்

40 வயதுக்கு மேற்பட்டோருக்கான "சீசைற்" உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம்

இன்று 25.03.2018 - 3.30 pm

பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் VS மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம்

அனுசரணை:- TEM THAYA EVENT MANAGEMENT · THAYA EVENT MANAGEMENT · BEES SPORTS

## வட்டு. கிழக்கு - துறட்டிப்பனை அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

## நூதன பஞ்ச தள இராஜகோபுர மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



கும்பாபிஷேகம்
பங்குனி மாதம்
18ஆம் நாள் 01.04.2018
ஞாயிற்றுக்கிழமை

முகூர்த்தம்
காலை 9.10 மணி முதல்
10.25 மணி வரை

அன்னை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற வில்லு மண்டபத்தோடு கூடிய அதிகம்பீரமாகவும், அழகிய சிற்ப வேலைகளும் வர்ண வேலைகளும் அமையப்பெற்ற பஞ்சதள இராஜகோபுரத்திற்கும் புதிதாக வரவழைக்கப்பெற்ற நாகராஜப்பெருமானுக்கும் புதிய மணிக்கோபுரத்திற்கும் 01.04.2018 ஞாயிற்றுக்கிழமை சித்திரை நட்சத்திரமும், அமிர்தசித்தயோகமும் கூடிய காலை 9 மணி 10 நிமிடம் முதல் 10 மணி 25 நிமிடம் வரையுள்ள இடப இலக்கின சுப புண்ணிய வேளையில் பங்குனித் திங்கள் 16ஆம் நாள் (30.03.2018) வெள்ளிக்கிழமை அதிகாலை 6 மணிக்குள் கர்மாரம்பம். பங்குனித் திங்கள் 17ஆம் நாள் (31.03.2018) சனிக்கிழமை காலை 9 மணி முதல் எண்ணைக்காப்பு சாத்துதல் ஆரம்பமாகும்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'

இங்ஙனம்:
ஆலய பெறுநரும்
இராஜகோபுர திருப்பணிக் குழுவினரும்.

## DAN TELEVISION ஏற்பாட்டில் வடக்கின் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

## புதிய விடியல்

5 லீக்குகள் 50 கழகங்கள் பங்களிப்புடன்
8 லட்சம் ரூபா பணப்பரிசில்களை வாரி வழங்கும்
உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி
7ஆவது வருடமாக

26.03.2018 திங்கள் முதல் அரியாலை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பம். தொடர்ந்து துரையப்பா விளையாட்டரங்கில் ஆட்டங்கள் நடைபெறும்.

பிரதான அனுசரணை: காலைக்கதிர் Kalaikkathir · TOPAZ No.72, Grand Bazaar,Jaffna. Tel: +94 21 222 4743

இணை அனுசரணை: SARAVANA PRESS OFFSET & DIGITAL PRINTING சரவணா அச்சகம்

## Traditional Fashion Show

10-11 April 2018 7pm to 9pm

2nd year Jaffna's bigest CHILDREN FUN FESTIVAL

Traditional Fashion Show 2018

SLAHAB
Srilanka Association of Hairdressers & Beauticians



1st Northern Traditional Fashion Show & Awards

Participation Fee 1500 Per Module

Organizing by CJ PROMOTERS

More deatils
Saloon Aysha 0778022844
Prasannaraj 0772546511

CJ PROMOTERS Total Event Managment

சிறுவர்களுக்கான சித்திரைக் கொண்டாட்டம்
8-12 April 2018 10am to 10pm


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.